உ

சப்தரிஷிகள் திருவாய்மலர்ந்தருளிய

அநுபோக

ஜாதகரகசியம்



சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1932

[இதன் விலை] Registered Copy Right [ரூபா 1

OFFICE OF THE REGISTRA
10 OCT 1940
M DR

உ

கணபதி துணை

சப்தரிஷிகள் திருவாய்மலர்ந்தருளிய

அனுபோக ஜாதகரகசியம்

செஞ்சி

ஏகாம்பர முதலியார் அவர்களால்

எழுதியதை,

காவேரிப்பாக்கம்

K. M. தெய்வசிகாமணி சோதிடரால்

புதிதாக அநேக விஷயங்களைச் சேர்த்[து]

பார்வையிடப்பட்டு,

அ. முத்துவடிவேல் முதலியாரால்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பி[க்கப்பட்டது.]

19

24, தாண்டவரா[ய]... வீதி

...ா விலை] ...லிமிடட் ... [ரூபா 1

54
183'5

ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத்தலைவர்களுக்கும் புத்தகவியாபாரிகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்:- "அனுபோக ஜாதகரகசியம்" என்னும் இப்புத்தகத்தை ம-ா-ா-ஸ்ரீ, செஞ்சி-ஏகாம்பர முதலியார் அவர்களால் இயற்றப்பட்டு, ம-ா-ா-ஸ்ரீ, கோளப்பஞ்சேரி-செல்லப்ப முதலியாரவர்கள் சர்வ சுதந்தரமும் பெற்றுக்கொண்டு கனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரயிட்செய்து தான் அனுபவித்துவந்த இந்நூலை ஷை கோளப்பஞ்சேரி-செல்லப்ப முதலியாரிடம் அடியிற் கையொப்பமிட்டுள்ள யான் கிரயத்திற்குப் பெற்று என்னால் அச்சிட்டு காபிரயிட் செய்யப்பட்டிருப்பதால் இதனைப் பிறர் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிடுவார்களாகில் அதனால் நேரிடும் சகல கஷ்டநஷ்டத்திற்கு உத்திரவாதிகளாவீர்களென்று கவனிக்கவும்.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்,

24, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை.

முக்கியமான சில பிழை திருத்தங்கள்

1. பக்கம்-13 மூலத்திரிகோணராசி கட்டத்தில் 'தனுசு' என்பதற்கு பதிலாக 'குரு' என்று இருக்க வேண்டும்.

2. பக்கம்-13 இராசிநாழிகை யறியும் சக்கரத்தில் 'கடகம்-5½' என்று இருக்க வேணும்.

3. பக்கம்-24 நீசபங்கராஜயோகம் 1-வது பாராவில் 1-வது வரியில் 'எந்த கிரகம் எந்த ராசியில் நீசமடைந்தனவோ' என்பதை 'எந்த கிரகம் எந்த ராசியில் நீசமடைந்ததோ' என்று மாற்றவும்.

4. பக்கம்-27 பாலாரிஷ்டபங்கம் 1-வது பாராவில் 2-வது வரியில் 'குரு பலம் பெற்றிருப்பாரே யாமானுல்' என்றிருப்பதை 'குரு பலம் பெற்றிருப்பாரே யானுல்' என்று திருத்தவும்.

5. பக்கம்-64 வரி-6 'அநேகம் புந்திரபுத்திரிகள் உண்டு' என்பதை 'அநேகம் புத்திரபுத்திரிகள் உண்டு' என மாற்றவும்.

6. பக்கம்-64 கடைசீ பாரா 'அந்த ஜாதகனுடைய மனைவியினது ஸ்தனமாகிய' என்றிருப்பதை 'அந்த ஜாதகனுடைய மனைவியினது ஸ்தானமாகிய' என்று திருத்தவும்.

7. பக்கம்-78 செவ்வாய்தோஷம் பாட்டின் கீழ்வரி 'ஜென்மலக்கினத்திற்கு 2-4-7-9-12-ஆம் இடங்களில்' என்பது '2-4-7-8-12-ஆம் இடங்களில்' என்று திருத்தவும்.

8. அதற்கு அடுத்த வரியில் 'மனைவிக்கு ஆக்ஷி எனவும்' என்பது 'மனைவிக்கு ஆனி' என்று இருக்க வேணும்.

9. பக்கம்-96 'தனலாபம்' என்ற தலைப்பங்கம் 'லாபம்' என்று இருக்க வேணும். தனம் என்பது இரண்டாமிடத்தைக் குறிக்கும். லாபமென்பது எல்லாவற்றிற்கும் லாபம் பொது.

முகவுரை

மனிதர்களுக்குப் பொருள் தேடும் விஷயத்தில் உதவிக் கருவியாகவும், ஆபத்தாகிற கடலைத்தாண்டும் விஷயத்தில் கப்பலாகவும், சத்துருஜயத்தை நாடிச் செல்லுங்கால் மந்திரியாகவும் ஆகக்கூடியது ஜாதகமே யொழிய இதைத்தவிர்த்து பிறவொன்று மாகாது. வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்றான ஜோதிஷசாஸ்திரத்தின் உதவியில்லாவிடில் நம்முடைய நித்தியகர்மாநுஷ்டானங்களும் சரிவர நடத்த இயலாது. ஆறு அங்கங்களில் ஜோதிஷசாஸ்திரமானது நேத்திர ஸ்தானமாக அமைந்துள்ளது. ஒருவனுக்கு நேத்திர மில்லாவிடில் எப்படி பிரயோஜனமில்லையோ அப்படியே ஜோதிஷ சாஸ்திர மில்லாவிடில் வேதமோ அல்லது வேதத்தில் சொல்லிய கர்மாக்களோ சரிவர நடத்தமுடியா. இந்த சாஸ்திரத்தை 1-சூரியன், 2-ப்ரம்ஹா, 3-வியாஸர், 4-வஸிஷ்டர், 5-அத்திரி, 6-பராசரர், 7-காச்யபர், 8-நாரதர், 9-கர்க்கர், 10-மரீசி, 11-மனு, 12-அங்கிரஸ் 13-ரோமசர், 14-பௌருகுத்ஸர், 15-ச்யவனர், 16-யவனர், 17-பிருகு, 18-சௌனகர் முதலான 18-மஹருஷிகள் செய்து உதவியிருக்கின்றனர்.

ஜோதிஷசாஸ்திர மறிந்தவன் தர்மார்த்த மோக்ஷங்களையும், கீர்த்தியையும் அடைவானென்று பாஸ்கரஸித்தாந்தம் சொல்லுகிறது. ஒன்றிலும் பற்றில்லாப் பெரியோரும் ஜோதிஷசாஸ்திர மறிந்தவனைக்கண்டால் இந்த தேஹம் எவ்வளவுகால மிருக்குமென்றே கேட்கிறார்கள்; என்று வராஹமிஹிரர் சொல்லியிருக்கிறார். இதை அனுபவத்திலும் காணலாம். இந்த சாஸ்திரமானது அனுபவ சாஸ்திரமாதலால், அந்தந்த ரிஷிகளின் அனுபவத்தில் பெரும்பாலும் ஒத்து வந்ததையே அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளை நாம் நன்கு உணர்ந்து அவைகளின் சாராம்சத்தை ஆழ்ந்து கவனித்து அனுபவத்தில் ஒற்றுப்பார்த்தால் சரியாகவே வரும். இந்த ஜோதிஷ சாஸ்திரமானது தமிழ்மறையிலும், ஸமஸ்கிருதத்திலும் பல மஹநீயர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக அகஸ்தியர் என்னும் மஹான் தமிழ்மறைக்கு அதிபதியாகிறார். இவருண்டாக்கிய ஜோதிஷ நூல்கள் மிகவும் அத்புதமானவை.

ஸப்தரிஷிகள் திருவாய்மலர்ந்தருளிய "அனுபோக ஜாதகரகசியம்" என்னும் நூலை செஞ்சி. ஏகாம்பர முதலியாரவர்கள் ஏற்கனவே எழுதியதை, காவேரிப்பாக்கம். தெய்வசிகாமணி சோதிடர் அழகாகச் சோதித்து சில அவசியமான அம்சங்களை சேர்த்தும், நூதன முறையில் எல்லோருக்கும் பயன்படுமாறும் திருத்தியமைத்து சென்னை பூமகள் அச்சுக்கூடத் தலைவரான ஸ்ரீமான் முத்துவடிவேல் முதலியார் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இந்த நூல் 12-பாவங்களாகப் பிரிக்கப்பட்டு, லக்கினம் முதல் வியயம் முடிய 12-பாவங்களுக்கும் தனிப்பலன்களாக அநுபவபூர்வமாய் தொகுக்கப்பட்டிருக்கிறது. இது சோதிடம் கற்கும் பாலர்களுக்கும், சோதிடத்தில் தேர்ச்சியுள்ள பெரியோர்களுக்கும் இன்றியமையாத தென்பதை ஒருதடவை படித்தாலே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தோற்றும். சாஸ்திர நம்பிக்கையும், அதின் அபிவிர்த்தியில் ஊக்கமும் உள்ள முதலியாரவர்கள் வெளியிட்டிருக்கும் இந்நூலைப் படித்து பிரயோஜனமடைவதொன்றே அவர்கள் கோருவது. இதை ஆதரித்து வாங்கி அநேகர் சந்தோஷிப்பார்களே யாகில் இன்னும் இது போன்ற அநேக அருமை வாய்ந்த நூல்களை பிரகாசப்படுத்தி சோதிட உலகை மகிழவைக்கச் செய்வார்கள் என்பது திண்ணம்.

ஸ்ரீரங்கம் } அம்பில்-S. ஸௌம்ய நாராயண அய்யங்கார்.
24-8-40. }

சிறப்புப்பாயிரம்

அகவல்

தார்புகழுலகின் தரணியின்மீதிற்
கார்புகழ்பல்லோற் கண்டுமேகளிக்க
சித்தரஞ்சப்த ரிஷிகள்முன்னாள்
சுத்தமாயுரைத்த சோதிட நூலை
கண்டுமேயுரைக்குங் கணிதவல்லோரைக்
கொண்டுமேயாய்ந்துக் குவலயமீது
அனுபவஜாதக ரகசியமென்னும்
மனமகிழ்நூலின் மான்மியமிதினில்
நேசமாமிராசிப் பனிரெண்டினிலும்
பேசியநவக்கோள் பதிந்திடுந்தானம்
நட்பாட்சியுச்சம் நீசமும்பகையும்
நுட்பமாய்க்கண்டு நுவன்றிடுமற்றுஞ்
சாரநிலையும் சாற்றுமுன்பார்வையு
மேறியவீட்டில் யிசைந்திடும்பார்வையும்
தசைவருடங்கள் தானறிந்திடவும்
திசையெனக்கிரகத் திக்குகள்நிலையும்
மூலமாந்திரி கோணராசிகளுஞ்
சாலவேகோள்செய் சாற்றுந்தொழிலும்
ஓதுமிராசி யோங்குநாழிகையுஞ்
சாதகப்பலனுஞ் சாருங்கோசாரங்
தங்கியவிராசி தனில்நவக்கோள்கள்
பொங்கமாம்நன்மை தீமையாமிட்டமுங்
கூறியவிலக்கினப் பாவபலனும்
நேரியவிரண்டாம் பாவநேத்திரமும்
வாக்குத்தானம் வியாதியின்பலனும்
நோக்குந்தனமும் முகமுங்குடும்பமும்
மூன்றாம்பாவஞ் சகோதரம்வெள்ளித்
தோன்றிடுங்கேள்வி காதுடனடிமை
நான்காம்பாவம் நவில்வதுதாயார்
பாங்காங்கல்வி பூமியும்பந்து

சுகமுடனுரைக்குஞ் செய்தல்வியாபாரம்
இகலவேயின்னு மியம்பிடக்கேளீர்
ஐந்தெனும்பாவ மருளியபுதல்வர்
தொந்தமாமாதுலன் பிதாஞானம்புண்ணியம்
ஆறதாம்பாவ மறைவதுரோகம்
கூறலாஞ்சோரஞ் சிறைசத்ருவழக்கு
ஏழாம்பாவ மியல்களத்திரமும்
வாழதாங்காம மாரகம்நித்திரை
யெட்டதாம்பாவ மியம்பிடுமாயுள்
கெட்டவமிருத்துக் கருதும்வியாதி
யொன்பதாம்பாவம் பிதாகுருதருமம்
பண்புறுபாக்கியம் பிரபுத்துவங்கள்
பத்தாம்பாவம் பயின்றிடுங்கருமம்
சுத்தமாஞ்ஜீவனங் கீர்த்தியாதாரம்
பதினோராம்பாவம் பகர்ஸ்ரேஷ்டபிராதுர்
துதிபெறுமிலாபந் துலங்கியவிஷ்டம்
பனிரெண்டாம்பாவம் பகர்வதுவிரையம்
தனியெனச்சயன மோகமனித்தியநோய்
பன்னியவியாதிப் பலனதுவறிக
துன்னியவியாதி தோன்றுமோரிடமும்
நாய்கடியோடு நல்லரவங்கடி
ஆயுதவிரணத் தால்வரும்வினையும்
சீவனமோடு செப்புங்கேந்த்ரபலன்
தாவனமாரக திசையதுவறிக
சூக்ஷமாய்க்காண சகத்திலுள்ளோர்க்குக்
காக்ஷியாயிதனைக் கண்ணுறவென்றே
பெரியவர்சிறியவர் பேசுமெவர்க்கும்
அரியவிந்நூலை யகமதுகளிக்கப்
பேசும்வேளாளக் குலமெனுஞ்செஞ்சி
நேசரேகாம்பரர் நிகழ்த்தியவிதனிற்
குற்றமத்தனையுங் கொண்டுமேபொறுத்து
சிற்றடிபோலே சேயனைமதித்து
இத்தரைமீதி லிதைப்படிப்போர்கள்
சுத்தமாயுலகிற் சுகமுடன்வாழியே.

உ

தேவிசகாயம்

சப்தரிஷிகள் திருவாய்மலர்ந்தருளிய

அனுபோக ஜாதகரகசியம்

தெய்வ வணக்கம்.

திங்கண்மும்மாரிபெய்யத் திருவறஞ்செழித்துலாவ
மங்களகரங்கடங்கமானிலத் தரசையாண்டு
பொங்குதத்துவத்தைக்கொண்டு பொன்னெயின்மேவிநின்ற
வெங்கள்புங்கவனைப்போற்றி இலங்கும்சோதிட நூற்சொல்வாம்.

நூல்

ஜோதிஷம் என்பது இன்னதெனல்

அறிவு அற்ற ஒருவருக்கு அறிவை விளக்கி அவனை நல்வழியிற் கொண்டு சென்று நன்மையடையச் செய்யும் சாஸ்திரத்திற்கே சோதிட சாஸ்திரம் என்று பெயர். எப்படியெனில் இருள் சூழ்ந்த இப்பூமியின்கண், தம் வாழ்நாளின் வழியறியாது பல திசையாய் (பல வேறுவழிகளாய்)ச் சென்று தம் வாணாளை வீணேகழித்துத் துன்புறாது நல்வழியே சென்று மேற்படி வாழ்நாளை இன்புற நடத்துவதற்கெனவே இந்த சோதிடசாஸ்திரம். எவ்வேதங்களுக்கும் முதற் பொருளாய் ஏற்படுத்தியுள்ளார் என்பது வாசகர்களுக்கு யாம் சொல்லாமலே விளங்கும்.

இருக்கு முதலிய வேதங்கள் இங்கு கூறும் சோதிடசாஸ்திரத்தைக் குறித்துக் கூறவில்லையே எனச் சிலர் சங்கை கொள்ளலாம். ஆயினும் அவை பொருத்தமான சங்கையன்று. எவ்வகையெனில் மேற்படி இருக்கு முதலிய வேதங்களிற் சொல்லியுள்ள அனுஷ்டான முதலியவற்றைச் செய்வதற்கு நன்னாளிலன்றோ செய்யவேண்டுமெனக் கூறியுள்ளனர். அதன்படி நன்னாளை யறிவிப்பது எவை என்பதை மேற்படி வேதம் முதலியவற்றை இயற்றினவர்களையோ அல்லது அதனை வாசித்து அதன் உண்மை யறிந்தவர்களையோ வினவில் ஜோதிஷசாஸ்திரம் எனவே கூறுவர்; பொதுவாய் ஜோதிஷம் என்ற பதத்திற்கு அறிவையுண்டாக்கும் சாஸ்திரம் எனவும், இருள்சூழ்ந்த இப்பூமியில் வழிதெரியாது தட்டுத்தடுமாறி நடக்கும்

ஒருவனுக்கு கதிரவன் உதயமானபின் சங்கையற்று நடந்துத் தான் கோரிய இடத்தைப்போய்ச் சேர்வதைப்போன்று மாயா என்னும் இருளால் மறைக்கப்பட்ட இவ்வுலகிற்கு மேற்படி சூரியனை யொத்த ஜோதிசாஸ்திரமே தன் வாழ்நாளை இன்பமாய்க் கடத்தும் என்பது ஐயமில்லை. இதுபற்றியே அக்காலமுதல் இக்காலம் வரையில் வந்துள்ள சாஸ்திரிகள் சூரியனை முதற் கிரகம் எனவும் அதனால் ஏனைய கிரகங்கள் பிரகாசிக்கின்றன வென்றும் ஏற்படுத்தினர் போலும்.

இங்கு கூறப்புகும் ஜாதகரகசியம் என்னும் நூலில், இவ்வாறாகிய ரகசியங்களையே விளக்குவாம். சூரியனுக்குப் பகலவன் என்ற பெயருண்டு. அவையாவன பகற்கதிபன் என்பதாம். ஆனால் பகற்கு மாத்திரம் அதிபன் இரவிற்கு அதிபன் அல்ல என அர்த்தம் கொள்ளுதல் கூடாது. எத்திக்கினும் எந்நேரத்தினும் மேற்படி பகலவன் ஒளி வீசிக்கொண்டே தானிருக்கும். ஆயினும் பகலில் அவனொளியை அதிகமாய்க் காணலாம் இரவிற்காண இயலாது. இதனாலேயே பகலவன் எனவும் திக்குதாலான் எனவும் கூறுவர். உதாரணமாக சூரியனது குணாதிசயங்களைச் சற்று விளக்குவாம்.

"பருத்த சிரஞ்சிலும்பன் மயிற் பயித்திய சரீரம்
பான்மிளகு ரசவாதம பண்டிதங் கோதும்பை
ஒருத்தலை நோவானை சிவம்லோகம் வச்சிரம்வலக்கோ
உயிர்த்தவன் யாத்திரை பகலீதினற்குள் காரகமே"

எனக் கூறியதால் பருத்தசிரசு-சிலும்பினமயிர்-பைத்தியசரீரம்-பால்-மிளகு-ரசவாதம்-வைத்தியம்-கோதுமை-தும்பை-ஒருதலைநோய் சிவனது உலகம் - வச்சிரம் - வலக்கண்ணோய் - பிதாயாத்திரை-பகற்பொழுது முதலியவைகளுக்கெல்லாம் மேற்படி இரவியே காரகன் என்றதாலும் சூரியனே பிதுருகாரகன் எனக் கூறியிருத்தலாலும் நன்கறியலாம்.

இனி சந்திரனைக் குறித்தாராய்வோம். சந்திரனுக்கு (இராமனு) எனப் பெயராகும். அவையாவன இரவிற்கு அரசன் என்பதாம். கண்ணாடியின் மூலமாய்ப் பிரவேசித்த மேற்படி சூரியனது கிரணம் வீட்டின் உள்ளிருக்கும் இருளை யொழிக்கும். இதனால் சந்திரனுடைய மூர்த்தி எவை என்பதை ஆராயுமிடத்துச் சூரியன் எனக் கூறலாம். வெய்யலில் ஓர் குடத்தை வைத்து முன்சொன்ன சூரியனது ஒளி மேற்படி குடத்தின் எப்பாகத்தில் வீசுகின்றனவோ அந்த பாகம் வெளுப்பாகவும் மற்றபாகம் தன் நிழலாலேயே கறுப்பாய் நிற்பதைப்போன்று சூரியமண்டலத்திற்குக் கீழிருக்கும் சந்திரனது பாதிபாகம் எப்போதும் மேற்படி கதிரவனொளியில் சிவப்பாகவே யிருக்கும். இதுபற்றியே சூரியனைப் பகலோன் என்றும் சந்திரனை இரவோன் எனவுங் கூறியுள்ளனர். ஆதலால் முன்சொன்ன

சூரியனுக்குறிய காரகத்தைப்போன்று சந்திரனைக் குறித்தும் ஆராய் வோம். எப்படியெனில்,

"அளங் கன்சுவையூண் மாவாய்துயில் வெண்கலமும்
பவளர் வண்ணார்வெண் குடையரிசி பனிப்பயரு
பிகழ் வாலங்கம் இடக்கண் கயரோகம் உழவன்
யாபர்மச் சமுத்தம் வஸ்திரமிவைக் கெனலாகும்"

என்றதால், பராசத்தி - போசனம்-குதிரை - மாதுரு-நித்திரை-வெண்கலம் - உப்பளவர்-வண்ணார் - வெண்ணை-குடை - அரிசி-பனிப் பயறு-உப்பு-சிறிதுநாட் பருத்தும் இளைத்துமிருக்கும் சரீரம் - இடக் கண்-சயரோகம்-உழவன்-மச்சம்-முத்து-புடவை முதலிய வியாபாரத் தலைவன் எனக் கூறியுள்ளதால் அறியலாம்.

இனி செவ்வாயைக் குறித்து ஆராய்வோம். செவ்வாய்க்கு நில மகன் என்று பெயர். அவையாவன பூமிக்கதிபன் என்பனவாம் இது மாத்திரமன்று சுப்ரமண்யர்-விக்கினேசுவரர் - துவரை-பவளம்-கோப வான்-குலாலன்-அக்கினி மூலமாகச் செய்யும் தொழில் - சகோதரம்-யுத்தம்-ரத்தம் - கடன-சிவந்தரத்தினம் - ஆட்டுவற்கம் - சுயம்பாகம்-காயம்-சாகசம்-செம்பு-பூபாலர்-இரணம் - காளி இவைகளுக்கெல்லாம் செய்வாயாகிய அங்காரகன் காரகன் என்க.

இதுவன்றி புதனைக்குறித்து ஆராய்வோம் புதன் விஷ்ணுபக வான்-தேர்ப்பாகன் - அம்மான்-கல்விகாரகன் - பச்சைரத்தினம்-செங் கன்று-வைசியன் - தனுதிபதி-தூதுவன் - கணக்கன்-தேர்-அலி-கதை முதலிய காவியம்-தாதன்-அந்தரநாட்டியம்-விஷயசோரன்-தந்திரன்-வேசிமோகி-எல்லா உலகும் அறிந்தவன்-தரா-பச்சைப்பயறு-வெந்தியம் முதலியவைகளுக்குக் காரகன் எனக் கூறியிருத்தலை யுணர்க.

குருவோ எனின் புத்திரர்-சொர்னம்-தேன்-ரிஷபவற்கம்-கடலை-அரசர்-புருஷவற்கம்-புருடராகரத்தினம் - பட்டப்பெயர்-சீரகம்-ரத்தி னம்-வைடூரியம்-பிராம்மணன்-பிரம்மன் - ஆண்டிவற்கம் முதலியவை களுக்குக் குருவே காரகன் எனக் கூறியுள்ளனர்.

இனி சுக்கிரனைக்குறித்து ஆராயுமிடத்து மேற்படி பகற்கால மாதுரு-இல்லம்-தாசி-தாசன்-பசு-களத்திரம் - மித்திரவற்கம்-வாகன காரகன்-பேரிகை முதலிய வாத்தியம்-சங்கீதவித்தை-நாட்டியவித்தை மாலை-கொடி-டால் - நாவிப்பிள்ளை - சகல பரிமளத்திரவியம் - கட்டில்-மெத்தை-சப்ரமஞ்சம் - வெண்சாமரை-போகம் - போக்கியம்-அழகு-இளமை-மொச்சை-ஈயம்-தயிர்-பாலன்னம் - விநோதம்-பரியாசம்-ஜன ரக்ஷகம்-ஆசை-தேவப்பெண-இலக்குமி - வெள்ளி முதலியவைகளுக் குக் காரகன் எனக் கூறியிருப்பதை யறிக. இனி சனியைக்குறித்து ஆராய்வோம்.

சனியோவெனின்? மரவேலை - களவு-தீர்க்காயுள் - ஆத்மயிம்சை-எருமைவர்க்கம்-சிறைப்படல்-நிசிகாலத்துப்பிதா-வெட்கமற்றசெய்கை-படமுடியாரோகம் - வீண்வார்த்தை - துன்பம் - இரும்பு-ஆளடிமை-பிறரைவாயடித்தல்-விவசாயக்கருவி - நீலரத்தினம் - எள்ளெண்ணை - சேவகத்தொழில் முதலியவைகளுக்குக் காரகன் என்க.

இராகுவோவெனின் களவுசெய்தல்-அதிகமாய் பேசல்-நானாவித வேடத்தொழில் - செப்பிடுவித்தை முதலியவைகளுக்குக் காரகன் எனவும், கேதுவோவெனின் கபடவேலை - சிவந்ததேகம் - பற்பல நினைப்பு - ஒன்றுமறியாமை முதலியவைகளுக்குக் காரகன் எனக் கூறியிருத்தலை யுணர்க. இதுகாறும் கிரகங்களினது காரகவிவரங்களைக் கூறிவந்ததால் இங்கு எந்தெந்த ராசிக்கு எவ்வளவு நாழிகை விநாடி என்னும் விவரத்தை எந்த கிரகத்திற்கு எந்தராசி யென்பதைக் கூறுவாம்.

இங்கு கூறும் புஞ்சபலங்கள் தற்கால சோதிடர்கள் சம்மதித்ததாகும்.

காரகர்கள்

சூரியன்	பிதுருகாரகன்
சந்திரன்	மாதுருகாரகன்
குஜன்	சகோதரகாரகன்
புதன்	அம்மான் வித்தைகாரகன்
குரு	தனம் புத்திரகாரகன்
சுக்கிரன்	வாகனம் களத்திரகாரகன்
சனி	ஆயுள்காரகன்
இராகு	வயிராக்கியகாரகன்
கேது	மோக்ஷகாரகன்

<table>
<tr><td>மீனம்-4¼
குரு</td><td>மேஷம்-4¼
குஜன்</td><td>இடபம்-4¾
சுக்கிரன்</td><td>மிதுனம்-5¼
புதன்</td></tr>
<tr><td>கும்பம்-4¾
சனி</td><td colspan="2" rowspan="2">இங்கு எந்த கிரகத்திற்கு
எந்த ராசி சொந்தம்
என்பதை விளக்கும்</td><td>கடகம்-5½
சந்திரன்</td></tr>
<tr><td>மகரம்-5¼
சனி</td><td>சிங்கம்-5¼
சூரியன்</td></tr>
<tr><td>தனுசு-5½
குரு</td><td>விருச்சிகம் 5¼
குஜன்</td><td>துலாம்-5
சுக்கிரன்</td><td>கன்னி-5
புதன்</td></tr>
</table>

கிரகங்களின்-நட்பு-ஆட்சி-உச்சம்-நீச்சம்-பகை-அறிய

1-வது சூரியன்

விருத்தம்

சூரியன்மேடமுச்சஞ் சொல்லருந்துலாமேநீசம்
வீரியுவிடையும்வீணை விளங்கியநண்டுகன்னி
கூரியமகரந்தேளுங் கும்பமும்பகையதாகும்
ஏரியசிங்கமாட்சி யெனவிதிவிதித்தார்மேலோர்.

இ-ள். சூரியன்-மேஷராசிக்கு உச்சம், துலாத்திற்கு நீச்சமாகும், ரிஷபம்-மிதுனம் - கடகம்-கன்னி - மகரம்-விருச்சிகம்-கும்பம் இந்த ஆறுராசியையும் பகையென்றறியவும், சிங்கராசிக்கு ஆட்சியென்றறிவீர்கள் எ-று. 1

2-வது சந்திரன்

சந்திரன்விடையிலுச்சஞ் சார்ந்திடுந்தேளில்நீசம்
நிந்தைமானறியும்வேடம் நிறைகுடம்பகையதாகும்
விந்தைசேர்வீணைகன்னி விளங்கியசிலைமீன்நட்பாம்
எந்திரக்கடகமாட்சி யெனவிதிவிதித்தார்மேலோர்.

இ-ள். சந்திரன்-ரிஷபத்திற்கு உச்சம், விருச்சிகத்திற்கு நீச்சம், மகரம்-சிங்கம் - மேஷம்-துலாம் இவைகளுக்குப்பகை யென்றறியவும், மிதுனம்-கன்னி-தனுசு-மீனம்-நட்பாகும், கடகம் ஆட்சியாகும். 2

3-வது அங்காரகன்

செவ்வாய்க்குமகரமுச்சஞ் சிறந்ததோர்நண்டுநீசம்
வெவ்வியசிலையுஞ்சிங்கம் மீன்கும்பம்பகையிதாகுஞ்
செவ்வியவிடையும்வீணை செட்டியுங்கன்னிநட்பாம்
மெள்வ்வியமேடந்தேளு மாட்சியதாகும்பாரே.

இ-ள். செவ்வாய்க்கு-மகரம் உச்சமாகும், கடகம்-நீச்சமாகும், தனுசு-சிங்கம்-கும்பம்-மீனம் - பகையாகும், ரிஷபமும்-மிதுனமும்-துலாமும்-கன்னியும்-நட்பாகும், மேஷமும் - விருச்சிகமும் ஆட்சியென்றறியவும் எ-று. 3

4-வது புதன்

புதன்கன்னியுச்சமாகும் புகன்றிடும்மீனநீசம்
அதனுடன்சிங்கமேற ஆனதோர்பகையதாகும்
விதமுறும்விடையுமேடம் வில்லுமான்நண்டுநட்பாம்
பதமுறும்வீணைகன்னிப் பகர்ந்தனராட்சியென்றே.

இ-ள். புதன்-கன்னிக்கு உச்சமாகும், மீனத்திற்கு நீச்சமாகும், சிங்கத்திற்குப்பகையாகும், மேஷமும்-ரிஷபமும் - தனுசு-மகரம்-நட்பாகும், மிதுனமும்-கன்னியும்-ஆட்சியாகும் எ-று. 4

5-வது குரு

குருவுமேகடகமுச்சம் கூறிடும்மகரநீச்சம்
வருமெனமேடங்தேளும் வகுத்திடும்பகையதாகும்
அருவிடைவீணைகன்னி ஆனதோர்செட்டிஜாடித்
தருவெனநட்பதாகும் தனுசுமீனுட்சியாமே.

இ-ள். குருவிற்கு - கடகம் உச்சமாகும், மகரம் நீச்சமாகும், மேஷமும்-விருச்சிகமும் பகையாகும், சிங்கம்-கன்னி மிதுனம்-துலாம் ரிஷபம்-நட்பாகும் தனுசும்-மீனமும்-ஆட்சியென்றறியவும் எ-று. 5

6-வது சுக்கிரன்

சுக்கிரன்மீனமுச்சஞ் சொல்லருங்கன்னிநீச்சம்
சிக்கெனக்கடகந்தானுஞ் சேரிலோபகையதாகுந்
தக்கதோர்சிலைதேள்வீணை தகரமான்ஜாடிநட்பாம்
மிக்கதோர்விடைகோல்தானும் மேலெனவாட்சியாமே.

இ-ள். சுக்கிரன்-மீனத்துக்கு வுச்சமாகும், கன்னிகைக்கு நீச்சமாகும், கடகத்திற்கும் பகையாகும், தனுசு-மிதுனம்-மேடம்-விருச்சிகம் - மகரம் - நட்பாகும், துலாமும் - ரிஷபமும் - ஆட்சியாகுமென்றறியவும் எ-று. 6

7-வது சனி

மந்தனும்நிறையிலுச்சம் மருவியமேடநீச்சம்
வந்திடக்கடகஞ்சிங்கம் வன்னிதேள்பகையதாகுஞ்
சிந்தியவிடையும்வீணை சிலைகன்னிமீனம்நட்பாஞ்
சுந்தரமகரகும்பஞ் சூழ்ந்திடிலாச்சியாமே.

இ-ள் சனி-துலாத்திற்கு உச்சம், மேடத்திற்கு நீச்சம், கடகமும்-சிங்கமும் - விருச்சிகமும் - பகையாகும், மகரமும் - கும்பமும் ஆட்சியென்றறிவீர்களாகவும் எ-று. 7

8-வது இராகு

அரவுதேளுச்சமாக அறையலாம்விடையேநீசம்
மரியொடுமேடம் நண்டுவெருஞ்சுங்கம்பகையதாக
அரிவைமான்சிலையுங்கும்பம் ஆனமீன்நட்பதாகும்
இருவர்சேர்மிதுனமாட்சி யெனவகுத்தனர்மேலோரே.

இ-ள். இராகுவுக்கு-விருச்சிக முச்சமாகும், ரிஷபத்திற்கு-நீச்சமாகும், மேஷமும-கடகமும்-சிங்கமும் - பகையாகும், மகரம்-தனுசு-கன்னி - மிதுனம் - மீனம் - நட்பாகும், மிதுனம ஆட்சியென்றறியவும் எ-று. 8

9-வது கேது

கேதுவும்சாடியுச்சங் கெடுதியாம்புலியும்நீசம்
தீதுசெய்நண்டுமேடங் தெரிந்திடும்பகையதென்று

ஓதிடும்விடையும்வீணை யுற்றநேர்நட்பதாகும்
ஆதியாம்சிலைதேள்கன்னி மீனுமான் ஆட்சியாமே.

இ-ள். கேது-ரிஷபத்திற்கு உச்சம், சிங்கத்திற்கு நீச்சம், கடகமும் - மேடமும் - பகையாகும், ரிஷபமும்-மிதுனமும் - நட்பாகும், தனுசு கன்னி-மகரம்-மீனம்-ஆட்சியாகும் எ-று. 9

இவ்வகை மாறுபரட்டால் கிரகசேகரத்தினைக் கூறுவாம் அவை யாவன கிரகபலன்களைக் கூறுவாம்

செவ்வாயின் பலன்

மேடத்தில் செவ்வாய் ஆக்ஷிபெறப் பிறந்தவன் வீரபராக்கிரமம் உடையவன், சிவந்ததேகி, ஐஸ்வர்யன், பல விசாரம் உடையவன். ரிடபத்தில் செவ்வாய் நிற்க சகலஜன விஸ்வாசி. மிதுனத்தில் நிற்க விவசாய நேயன். கடகத்தில் நிற்க எவ்வகையாயினும் தன் காரியத்தில் கவனமுடையவன். சிம்மத்தில் நிற்க சலகஜனப் பகைவன் கன்னியில் நிற்க சகலரிடத்தும் உறவு செய்வோன். துலாத்தில் நிற்க மனைவிவகை துக்கமுடையவன். விருச்சிகத்தில் நிற்க தீர்க்காயுள், தைரியன். தனுசில் நிற்க பிராம்மணப் பகைவன். மகரத்தில் நிற்க அரசர்களாலும் மெச்சத்தகுந்தவன். கும்பத்தில் நிற்க சுயஜனப் பகைவன். மீனத்தில் நிற்க சகலராலும் தூஷிக்கப்படுபவன்.

சுக்கிரன் பலன்

இடபத்தில் சுக்கிரன் நிற்க ரூபலாவண்யன். மிதுனத்தில் நிற்க சகலஜன நண்பன். கடகத்தில் நிற்க ஸ்திரீஜனப் பகைவன். சிம்மத்தில் நிற்க கோபவான். கன்னியில் நிற்க பொன் பொருளற்றவன். துலாத்தில் நிற்க பெண்களால் பொருளுள்ளவன். விருச்சிகத்தில் நிற்க ஸ்திரீகளிடம் நண்புடையவன். தனுசில் நிற்க பிராமணர்களிடம் கண்டிதமாய்ப் பேசுவோன். மகரத்தில் நிற்க சர்வ சுகாசுகமும் உடையவன். கும்பத்தில் நிற்க பிறர்தார ஆசையற்றோன். மீனத்தில் நிற்க ஸ்திரீகளாலும் மற்றுமனேக விதத்தாலும் பொருள் வருத்துடையவன். மேஷத்தில் நிற்க சாந்தமானவர்களிடம் நண்புடையவன்.

புதன் பலன்

மேஷத்தில் புதன் நிற்க வைசியஜன நேயன். ரிஷபத்தில் நிற்க ஸ்திரீகள் நண்பன். மிதுனத்தில் நிற்க பொருளதிகம் உடையவன். கடகத்தில் நிற்க ஜலப்பிரயாணம் செய்பவன். சிங்கத்தில் நிற்க ராஜ விரோதி. கன்னியில் நிற்க பண்டிதன். துலாத்தில் நிற்க வியாபாரச் செல்வன். விருச்சிகத்தில் நிற்க ஸ்திரீஜனப் பகைவன். தனுசில் நிற்க விப்பிரசினேகம். மகரத்தில் நிற்க பலயீனதேகன். கும்பத்தில் நிற்க பந்துஜனப் பிரியன். மீனத்தில் நிற்க பலவித ஈனத் தொழில் புரிவோன் என அறிக.

குரு பலன்

மேஷத்தில் குரு நிற்க தெய்வபக்தி யுடையவன். ரிஷபத்தில் நிற்க வைராக்ய முடையவன். மிதுனத்தில் நிற்க ஐஸ்வர்யவான். கடகத்தில் நிற்க பெருமையுடையவன். சிங்கத்தில் நிற்க ராஜமித்திரன். கன்னியில் நிற்க அகாலபுத்திரருடையவன். துலாத்தில் நிற்க சித்திரவேலையில் நேர்ச்சிப்பெற்றவன். விருச்சிகத்தில் நிற்க புராண முதலியவற்றை பரிகசிப்பானுபினும் பக்தியுடையவன். தனுசில் நிற்க அஷ்டஐஸ்வர்யங்களும் உடையவன். மகரத்தில் நிற்க கொடிய நீச்சகாரியங்களைச் செய்வோன். கும்பத்தில் நிற்க சமயோசிதபுத்தி யுடையவன். மீனத்தில் நிற்க பெருமையுடையவன்.

சனி பலன்

மேஷத்தில் சனி நிற்க பொய் சொல்லுவோன். ரிஷபத்தில் நிற்க ஸ்திரீ நண்பன். மிதுனத்தில் நிற்க ஐஸ்வர்யவிருத்தி யுடையவன். கடகத்தில் நிற்க ஜலசம்மந்த (சீதள) ரோயன். சிங்கத்தில் நிற்க சௌரியங் குறைந்தவன். கன்னியில் நிற்க மனைவிசுகங் குறைந்தவன். துலாத்தில் நிற்க தீர்காயுள். விருச்சிகத்தில் நிற்க அலைச்சலுடையவன். தனுசில் நிற்க பலவிதத்தாலும் பொருள் சம்மாதிப்போன். மகரத்தில் நிற்க தைரியவான். கும்பத்தில் நிற்க சம்பத்துடையவன். மீனத்தில் நிற்க சம்போகமுடையவன் எனக்கூறுக.

சூரியன் பலன்

மேஷத்தில் இரவி நிற்க பிரதாபன். ரிஷபத்தில் நிற்க அழகுடையவன். மிதுனத்தில் நிற்க பிரகாசதேகி. கடகத்தில் நிற்க பலவிதத்தாலும் பொருள் சம்பாதிப்போன். சிங்கத்தில் நிற்க பலவித துன்பமுடையவன். கன்னியில் நிற்க அழகு மனைவியை யுடையவன். துலாத்தில் நிற்க நீச்சகாரியம் செய்ய ஆசைப்படுவோன். விருச்சிகத்தில் நிற்க சகோதரவாஞ்சை யுடையவன். தனுசில் நிற்க பக்திமான். மகரத்தில் நிற்க அலைச்சலுடையவன். கும்பத்தில் நிற்க ஸ்திரபுத்தியன். மீனத்தில் நிற்க பலதிக்கிலும் ஓடியாடித்திரிபவன் என்பதாம்.

சந்திரன் பலன்

மேஷத்தில் மதி நிற்க சந்தேகி. ரிஷபத்தில் நிற்க தீர்காயுள், கல்விமான். மிதுனத்தில் நிற்க சமபோக முடையவன். கடகத்தில் நிற்க செல்வமுடையவன். சிங்கத்தில் நிற்க படபடப்பாய்ப் பேசுவோன். கன்னியில் நிற்க நவரத்தினச்சேர்க்கை யுடையவன். துலாத்தில் நிற்க வெள்ளி வியாபாரம் செய்வோன். விருச்சிகத்தில் நிற்க மெலிந்ததேகி. தனுசில் நிற்க பலபுராண மறிவோன். மகரத்தில் நிற்க அற்பசினேகிதன். கும்பத்தில் நிற்க ஜலயாத்திரை செய்வோன். மீனத்தில் நிற்க மனைவிசுகம் குறைந்தவன் எனக் கூறுக.

இதுகாறும் கிரகங்கள் நின்ற இராசியினது பொதுப்பலனைக் கூறிவந்தமையாலும் இதனை முதன்மையாய் வைத்துக் கீழ்வரும் பாட்டால் அந்தந்த கிரகங்களினது பஞ்சபலத்தினை யறிந்து மேற் சொன்ன பலாபலன்களை உறுதிகூறுவதுடன் சேர்க்கை பார்வை முதலிய விசேஷங்களையும் நன்கு ஆராய்ந்து நிச்சயித்தல் நலம். இதுவன்றி கிரகபலங்களை வெகு சூக்ஷமாய் அறிக. எப்படியெனில், நாம் எந்த கிரகத்தினைக் குறித்து ஆராயவேண்டுமோ அந்த கிரகமானது,

1 லக்கினமுதலாய் எந்த ராசிக்கதிபதி.

2 ஷை கிரகம் எத்தனையாவது ராசியிலிருக்கிறான்.

3 ஷை எந்த கிரகத்துடன் கூடினான்.

4 ஷை எவ்வகை பலம் பெற்றிருக்கிறான்.

5 ஷை எவர்களால் பார்வை பெற்றிருக்கிறான்.

6 இவ்விதத்தால் உண்டாகும் சத்துரு மித்துரு சமம் முதலிய விவரத்தால் ஆராய்ந்து பலன் கூறுக.

கிரகவாசகாலம் (சாரநிலையறியும் விவரம்)

விருத்தம்

சூரியனுமொருதிங்க ளாகுமப்பா
சொல்லுகின்றசசிதானு மிரண் டேகால்நாள்
கூறியசெவ்வாய் தனக்கொன்றரையாமாதம்
குறித்தபுந்தியோர் மாதங்குருவோராண்டாம்
வீரியமாஞ்சுக்கிரனு மாதமொன்றும்
விளங்கியமந்தனுக்கிரண் டரையாண்டு
சீரியதோரிராகுகேதுவருடமொன் றரையதாகத்
தீர்க்கமுடனிராசிநின்று செல்லும்பாரே.

இ-ள் சூரியனுக்குச்சாரநிலை ஒருமாதம், சந்திரனுக்கு இரண்டேகால்நாள், செவ்வாய்க்கு மாதம் ஒன்றரை, புதனுக்கு மாதம் ஒன்று, குருவுக்கு வருடம் ஒன்று, சுக்கிரனுக்கு மாதம் ஒன்று, சனிக்கு வருடம் இரண்டரை, இராகு கேதுக்களுக்கு வருடம் ஒன்றரை யென்று அறியவும் எ-று. 1

சாரநிலைக்கு முன்பார்வையறியும் விவரம்

அருக்கனுமேவைந்துநா ளாகும்பாரு
ஆனதொருசசிமூன்று நாழியாகும்
பெருக்கவேசெவ்வாயு மெட்டுநாளாம்
புகலுமொருக்கணக்கனுமே யேழுநாளாம்
உரைக்கவேகுருவிரண்டு மாதமாகும்
உறுதியுளபுகர்யேழ்நாள் சனியாறுமாத

மிருக்கவேஇருபாம்பு மாதமூன்று
மிதன்பார்வையெனவகுத்தார் மேலோர்தானே.

இ-ள். சூரியனுக்கு நாள் ஐந்து, சந்திரனுக்கு மூன்றுநாழிகை' செவ்வாய்க்கு நாள் எட்டு, புதனுக்கு நாள் ஏழு, குருவுக்கு மாதம் இரண்டு, சுக்கிரனுக்கு நாள் ஏழு, சனிக்கு மாதம் ஆறு, இராகு-கேதுவுக்கு மாதம் மூன்று இவை முன்பார்வையென்று அறியவும்.

வீட்டின் பார்வையறியும் விவரம்

கதிரவனுஞ்சசியுமே யேழைநோக்கும்
காணுமோர்சேய்நாலே ழெட்டென்றேது
துதியானபுதனுமே யேழைபார்க்குந்
துலங்கும்பொன்னஞ்சேழு வொன்பதாகும்
பதியானசுக்கிரனு மேழேகாணும்
பகருமோர்காரியு மூன்றஞ்சுபத்தாம்
சதியானராகுவுடன் கேதுதானும்
சாற்றுமொருமூன்றேழு பதினொன்றுமே.

இ-ள். சூரியனும் சந்திரனும் பார்வை ஏழாமிடம், செவ்வாய்க்கு பார்வை-4-7-8, புதனுக்குப்பார்வை-7, குருவிற்குப்பார்வை-5-7-9, சுக்கிரனுக்குப் பார்வை-7, சனிக்குப் பார்வை-3-5-10, இராகு-கேதுகளுக்குப் பார்வை-3-7-11 இவ்விதமறியவும் எ-று. 3

கிரக சுபாசுபம்

நிறைமதியுந்தமணியனும் நிறைந்தசுபக்கிரகம்
நீள்சுங்கனுர்முக்கால் சுபக்கிரகம்புதனே
குறையுமறைச்சுபன்தேய்ந்த மதியுங்கார்ச்சுபனும்
கூறுசனிபாம்புமுழுப் பாவிகளேசெவ்வாய்
அறையுமுக்காற்பாவி அரைப்பாவிகதிரவனும்
அணிபாவருடன் கூடும் புதன்பிறைகாற்பாவி
இறைசனிபாம்புடன் கூடிற்சனிபோலப்பாவி
இந்துஅமாவாசியிற் புதனேடிருக்கமுக்காற்சுபனே.

இ-ள். பூரணச்சந்திரன் குரு என்னு மிருவரும் முழுச்சுபர்களாவர், சுக்கிரன் முக்காற்சுபனுகும், புதனே எனின் அரைச்சுபனேயாகும், கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரனே எனின் கால்சுபனுகும், மற்றும் சனி - இராகு - கேது என்னும் மூவரும் முழுப்பாபிகளாகும், அங்காரகன் முக்கால்பாபியாகும், சூரியன் அரைப்பாபியாம், பாவர்களுடன் கூடியுள்ள சந்திரன்-புதன் என்னும் இருவரும் கால்பாபியாகும், சனி-ராகு-கேது என்னும் மூவர்களுடன் குரு கூடியிருப்பானுகில் மேற்படி குரு சனியைப்போன்ற முழுப்பாபியேயாகும், அமாவாசியைச் சந்திரன் புதனுடன் கூடியிருக்க முக்கால்சுபனுகும்.

கிரக நட்பு

ஆதவனுக்குறவுதிங்கள் செவ்வாயும்பொன்னும்
அம்புலிக்குப்புதனும் செங்கதிரிருவர்நேசம்
நீதிசெறிசேய்க்குறவு திங்கள்வெய்யோன்
நின்றபுதன்றனக்குச் சுக்கிரனிமவிநேசம்
ஓதியபொன்றனக்குறவாங் கதிர்திங்கள்செவ்வாய்
உயர்வெள்ளிக்குறவு சனியுடன்புந்தியிருவர்
பூதலமேற்சவுரிக்கே புதனும்சுக்கிரனும்
பொருந்தியநல்லுறவென்றே போற்றிடுவர்புலவர்.

இ-ள். சூரியனுக்கு சந்திரன்-குஜன்-குரு என்னும் மூவரும் உறவாகும், சந்திரனுக்கு சூரியன் - புதன் என்னும் இருவரும் உற வாகும், செவ்வாய்க்கு சூரியன்-சந்திரன் என்னும் இருவரும் உறவா கும், புதனுக்கு சூரியன்-சுக்கிரன் என்னும் இருவரும் உறவாகும், குருவுக்கு சூரியன்-சந்திரன்-செவ்வாய் என்னும் மூவரும் உறவாகும், சுக்கிரனுக்கு புதன் - சனி என்னுமிருவரும் உறவாகும், சனிக்கு புதன்-சுக்கிரன் என்னும் இருவரும் உறவாகுமென்று சோதிடவல்ல வர்கள் கூறுவர் எ-று. 5

கிரக பகை

சொல்இரவிக்குறுபகை சுக்கிரன்சனியொடுஇருவர்
சோமனுக்குப்பகைஇல்லை சொல்லவுமெக்காலே
அல்லலறுஞ்செவ்வாய்க்குப் பகைபுந்தியொருவன்
ஆனபுந்திக்குற்றபகை யம்புலியொன்ருகும்
நல்லவியாழன்றனக்குபுதன்வெள்ளி பகையாம்
நாடியசுக்கிரற்கிரவி நவிற்றிங்கள்பகையே
வல்லசனிக்கிரவி திங்களுடன்செவ்வாய்
மட்டுமேபகைஎன்று வழுத்துவர்நல்லோரே.

இ-ள். சூரியனுக்குச் சுக்கிரன்-சனி என்னும் இருவரும் பகைவ ராகும், சந்திரனுக்கு எந்த கிரகங்களும் பகையே இல்லையாம், அங் காரிகனுக்கு புதன் ஒருவனே பகைவனுகும், புதனுக்குச் சந்திரன் மட்டும் பகையாகும், சுபனுகிய குருவுக்கு புதனும் சுக்கிரனும் பகை யாகும், சுக்கிரனுக்கு சூரியன்-சந்திரன் ஆகிய இருவரும் பகையாவர், சனிக்கு சூரியன்-சந்திரன்-செவ்வாய் என்னும் மூவரும் பகைவர்க ளாவர் என சோதிடவல்லவர்கள் கூறுவர் எ-று. 6

கிரக தேவதை

ஆனவெள்ளிகுரு அயனுகுமே
வானவிந்தும்புதனு நன்மாயனும்
பானுஞ்சேயுஞ் சிவன்எனப்பேசுவர்
மானவன்னிய தேவதைமந்தனே.

இ-ள். சுக்கிரன் - குரு ஆகிய இருவர்களும் பிரம்மனுடைய அம்சமாகும், சந்திரன் - புதன் என்னும் இருவரும் விஷ்ணுவினது அம்சமாகும், சூரியன்-செவ்வாய் ஆகிய இருவரும் சிவனது அம்சமாகும், சனி அன்னிய தேவதைகள் என சோதிடத்தோர் கூறுவர் எ-று. 7

தசைவருட மறியும் விவரம்

பகலவனுக்காருண்டுதானென்றோது
பார்த்தறிவாய்ச்சசிபத்துசேய்க்கேழாகும்
இகலவேபுந்தியுமேபதினேழாகும்
இறைவனீரெட்டுவெள்ளிக்கிருபதாகும்
அகலவேமுடவன்பத்தொன்பதென்ன
அறைபுமொருராகுவுமேபதினெட்டாகும்
திகலுருவேகொடியோனுமேழதென்றே
திறமையுடன்திசைவருடந்தெரிந்திடீரே.

இ-ள். சூரியனுக்கு திசை வருடம்-6, சந்திரனுக்கு திசை வருடம்-10, செவ்வாய்க்கு வருடம்-7, புதனுக்கு வருடம்-17, குருவுக்கு வருடம்-16, சுக்கிரனுக்கு வருடம்-20, சனிக்கு வருடம்-19, இராகுவுக்கு வருடம்-18, கேதுவுக்கு வருடம்-7, இவ்விதமாக அறியவும் எ-று. 8

திக்கறியும் விவரம்

சூரியன்நடுதிக்காகுஞ் சுகமதிதென்கிழக்காம்
வீரியஆரல்தென்கீழ் விதுமகன்வடகிழக்காம்
காரிமேற்குப்பொன்வடக்கு கழர்புகர்கிழக்கதாகுஞ்
சீருந்தென்மேற்குராகு கேதவன்வடகிழக்கே.

இ-ள். சூரியன்-நடுதிக்கு, சந்திரன்-தென்கிழக்கு, செவ்வாய்-தென்கிழக்கு, புதன்-வடகிழக்கு, சனி-மேற்கு, குரு-வடக்கு, சுக்கிரன்-கிழக்கு, இராகு-தென்மேற்கு, கேது-வடகிழக்கு இவ்விதமாக அறியவும் எ-று. 9

கிரகங்களின் தொழிலறியும் விவரம்

சூரியன்-அரசன், சந்திரன்-அரசன், அங்காரகன்-சேனாதிபதி, புதன் - பிரதானி, குரு - மந்திரி, சுக்கிரன் - மந்திரி, சனி - குசன், இராகு-கேது-பசாசு.

	அங்காரகன்	சந்திரன்	
இராகு	மூலத்திரிகோண ராசிகள்		
சனி			சூரியன் கேது
தனுசு		சுக்கிரன்	புதன்

மீனம் $4\frac{1}{4}$	மேடம் $4\frac{1}{4}$	ரிஷபம் $4\frac{3}{4}$	மிதுனம் $5\frac{1}{4}$
கும்பம் $4\frac{3}{4}$	இராசிநாழிகை யறியும் சக்கரம்		கடகம் $5\frac{1}{2}$
மகரம் $5\frac{1}{4}$			சிங்கம் $5\frac{1}{4}$
தனுசு $5\frac{1}{2}$	விருச்சிகம் $5\frac{1}{4}$	துலாம் 5	கன்னி 5

ஜாதகப்பலனறியும் விவரம்

விருத்தம்

ஜெனித்திடுமோர் குழவிகட்கு நன்மைதீமை
சீருறவே தானுரைக்கும் விபரங்கேளு
கணித்திடவே சிரவுதைய மானபோது
கண்டிடுவாய் முகூர்த்தமது வாகவேதான்
தனித்திடவே யுதையவீ டடனேயின்னம்
தானறிவாய் ஜென்மலக்கன மென்றேதான்
இனித்திடவே சசியிருந்த வீடுதானும்
இயம்புவாய் சந்த்ரலக்ன முடலென்றேதான்.

இ-ள். ஜெனனமாகும்போது குழவிகளுக்கு ஜாதகம் யெழுத வேண்டியகிரமம் எவ்விதமெனில்? சிரசு வுதையமாகும்போது அப்போதுநடக்கும் நாழிகையாவது மணியாவதுகொண்டு ஜாதகம் எழுத வேண்டியது. உதையராசியெதுவோ அந்தராசி உயிரென்று அறியவும். அதாவது ஜென்மலக்கினம். லக்கினத்திற்கு எத்தனையாவது வீட்டில் சந்திரனிருந்தபோதும் அது சந்திரலக்கினமென்றும், உடலென்றும் அறியவும் எ-று. 1

உதையமெனு மிராசிகொண்டு யெண்ணிப்பார்க்க
உத்தமனே யைந்துபத்திற் செவ்வாய்நிற்கில்
விதியெனவே மாமனுக்கு ஆகாதப்பா
வினையாக சனியிருந்தால் குழவிக்காகா
மதியிருந்தால் மாதாவுக் காகாதென்று
மருவியே ரவியிருந்தால் தந்தைசாவன்
ததியான சுபக்கிரகம் நோக்கில்லாமல்
தானிருக்கச் சசிக்கேழா மிடத்திற்கேளே.

இ-ள். உதையராசியைக்கொண்டு மற்றராசிகளை வலமாக யெண்ணிவரில் 5-10-ல் செவ்வாய் நிற்கில் மாமனுக்காகாதென் றறியவும். 5-10-ல் சனியிருந்தால் குழவிக்காகாது. சந்திரனிருப்பானாகில் தாயாருக்காகாது. சூரியன் இருந்தால் தகப்பன் சாவான். ஆனால் சுபக்கிரகம் நோக்கில்லையாகில் சந்திரனுக்கு ஏழாமிடப்பலனைச் சொல்வேன் கேளும் எ-று. 2

சுங்கனுடன் முடவனுமே நிற்பானாகில்
சொல்லரிய அன்னையுமே மரணமாவாள்
அங்கனவே ரவிதனக்கு யேழாம்வீட்டில்
ஆரலொடு சனிநிற்கத் தந்தைசாவான்
பங்கமுறும் பாபக்கோள் தானுமேதான்
பனிரெண்டி லேறவுயிர் வுடலைப்பற்றத்
தங்காது பிள்ளையது மரணமாகுந்
தானறிய வோதுகிறே னின்னங்கேளே.

இ-ள். சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சுக்கிரனும் சனியும் நிற்பாராகில் தாய் மரணமாவாள். சூரியனுக்கு 7-ம் வீட்டில் செவ்வாயோடு சனிநிற்க் தகப்பன் சாவான். பாபக்கிரகங்கள் 12-மிடமும் உடலையும், உயிரையும்பற்றிநிற்கப் பிள்ளை மரணமாகும் எ-று. 3

செப்புமொரு வுதையத்திற் காறும்வீட்டில்
சூரியனும் நிற்கவே யதற்குயேழில்
தப்பிதமாய்க் கீரியொடு வாரல்நிற்கத்
தந்தையொடு பிள்ளையுமே மரணமாகும்
அப்படியே யாறுமிடத்திற் சனியும்நிற்க
அன்னையொடு குழவியுமே மரணமாகும்
ஒப்புடனே கணிதநூற் சொன்னவாறே
ஓதுகிறே னின்னமுந்தா னுகந்துகேளே.

இ-ள். உதையராசிக்கு 6-ம் வீட்டில் சூரியன்நிற்க அவர்க்கு 7-ல் சனியும் செவ்வாயும்நிற்க தகப்பனோடு பிள்ளையும் மரணமாகும். 6-மிடத்தில் சந்திரன்நிற்கத் தாயாரோடு பிள்ளை மரணமாகும் எ-று. 4

உன்னிதஞ்சே ருதையத்தில் மந்தன்நிற்க
ஓதுமொரு நாலதிலே செவ்வாய்நிற்க
நன்னயஞ்சேர் கதிரோனு மேழில்நிற்க
நற்கிரகம் நோக்கில்லா திருக்கில்தானும்
அன்னிதமா யன்றையப் பகலேதானும்
அருங்குழவி மரணமென வறிந்துகொள்ளு
சொன்னபடி ராகுகேது உதையந்தன்னில்
சூழ்ந்திடவே யன்றிரவு மரணமாமே.

இ-ள். உதையராசியில் சந்திரனிற்க, அதற்குநாலில் செவ்வாய் நிற்க, சூரியன் 7-ல் நிற்க சுபக்கிரகம் நோக்கில்லாதிருக்க அன்றையப் பகலே குழவி மரணமாகுமென்றறியவும். உதயத்தில் ராகு-கேது நிற்கில் அன்றைய இராத்திரியே குழவி மரணமாகுமென்று அறியவும் எ-று. 5

ஜென்மமுடன் சந்திரலக் கினத்திற்றானே
சேர்ந்துமே பாபக்கோள் வந்துநிற்க
நன்மைதருஞ் சுபக்கோளும் பார்த்துநிற்க
நஷ்டமே அப்பிள்ளையது மரணமாகும்
தன்மையிலா அமரபக்ஷ சசிதனக்குத்
தான்பார்த்து முன்பின்னும் பாபர்நிற்க
அன்னையொடு குழவிபோம் தூமாதிக்கோள்
அணுகிநிற்கக் கிரணமுண்டேல் அழியுஞ்சேயே.

இ-ள். ஜென்மலக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும் பாபக்கிரகங்கள்வந்து நிற்கில் அவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்கப் பிள்ளை மரண்மாகும். அமரபக்ஷத்து சந்திரனுக்கு முன்னும் பின்னுமாக

பாபக்கிரகங்கள் நிற்கத் தாயாரோடு குழவி மரணமாகும். தூமாதிப் பஞ்சக்கிரகஞ்சூழ கிராணந்தீண்டி ஜெனிக்கில் குழவியானது மரண மாகுமென்று அறியவும் எ-று. 6

பூசமொடு சித்திரை பூராடநாளில்
புகழ்சோம நிற்கமுதற் கால்ஜெனிக்கில்
தோஷமெனப் பிதாவவனு மரணமாவான்.
தொடுத்த ரெண்டாங்காலன்னை சாவாள்மற்றும்
மோசமடா மூன்றுங்கால் மரணம்பிள்ளை
மொழியுமொரு நான்காங்கால் மாமன்சாவான்
வாசமுடன் வொன்பது பதினொன்றிற்றுன்
வந்துநிற்கச் சேய்சனியும் வழுத்தக்கேளே.

இ-ள். பூசநக்ஷத்திரம் சித்திரைநக்ஷத்திரம் பூராடநக்ஷத்திரம் இந்தநாளில் சந்திரனிற்க, முதற்காலில் ஜெனிக்கில் தகப்பன் மரண மாவான். இரண்டாங்காலாகில் தாயார் மரணமாவாள். மூன்றுங்காலா கில் குழவிசாகும். நாலாங்காலாகில் மாமன் மரணமாவான். 9-11-ல் செவ்வாய்-சனி நிற்கில் பலன்கேளும் எ-று. 7

கேட்டிடுவாய் வொன்பதிலே பாம்புநிற்கக்
கெடுதியைக்கே ளிம்மூன்று கிரகத்தாலே
நஷ்டமுள பிதாவவனு மரணமாவான்
நவிலுமின்ன மேயெட்டில் சனிதானிற்க
கூட்டமுள குழவியது மரணமாகும்
குணமான சுபக்கோள்நோக் கில்லாவிட்டால்
வாட்டிடுமே வொருபலனு மில்லையில்லை
வறையுகிறே னின்னமுங்கேள் முன்னோர்வாக்கே.

இ-ள். 9-ல் பாம்புநிற்க இந்த மூன்றுகிரகமும் செய்யும்கெடுதி யாதெனில், தகப்பன் மரணமாவான். 7-8 சனிநிற்கில் குழவி மரண மாகும். சுபக்கிரகங்கள் நோக்கில்லாதிருந்தால் ஒருபலனுமில்லை எ-று. 8

நிலமகனு மூன்றினிலே வந்துநிற்க
நேராக வுடன்பிறந்தார் மரணமாவார்
கலகமேழா மிடத்தி லாரல்வெள்ளி
காரியவ னிற்கப்பிள்ளை மரணமாகும்
இலகசசி யேழில்நிற்க வன்னைசாவாள்
இரவியுமே யேழில்நிற்கக் குழவிசாகும்
நலமுறுநண் டுதிக்கமூன் றுறிற்பாபர்
நற்கோள் பனிரெண்டுதிக்க மரணம்பிள்ளையே.

இ-ள். செவ்வாய் லக்கினத்திற்கு 3-மிடம் நிற்க உடன்பிறந்தார் மரணமாவார், 7-மிடத்தில் செவ்வாயும்-சுக்கிரனும்-சனியும் நிற்கில்

பிள்ளைமரணமாகும். 7-மிடத்தில் சந்திரன்நிற்கில் தாயார் மரண மாவாள். 7-மிடம் சூரியன்நிற்க ஜெனனமான பிள்ளை மரணமாகும், கடகலக்கினமாக 3-6-ல் பாபக்கிரகங்கள் 12-மிடம் சுபக்கிரகங்கள் நிற்க குழவி மரணமாகும் எ-று. 9

உதயத்திற் காறேழு பனிரெண்டெட்டில்
உறுதியுள்ள சீரண சசிதானிற்கச்
சதியாக வவருடனே பாபர்சேர
சாற்றுமொரு சுபக்கோள்நோக் கில்லாதாக
மதியென்ற சீரணசந்தி ரனுக்குந்தான்
மருவியே நாலுமெட் டானவீட்டில்
விதியாகப் பாபக்கோள் நிற்குமாகில்
மேவியதோர் குழவியுந்தான் மரண்மாமே.

இ-ள். உதயராசிக்கு 6-7-8-12-ல் சீரணசந்திரன்நிற்க அவிருடன் பாபக்கிரகங்கள்சேரச் சுபக்கிரகங்கள் பார்வையில்லாதிருக்கச் சந்திரனுக்கு 4-8-ஆமிடம் பாபக்கிரகங்கள் நிற்குமாகில் குழவி மரணமாகும் எ-று. 10

ஆதித்தன் சந்திர னங்கங்கூட
அதுவுதிக்க வடுத்தபனி ரெண்டிற்றுனும்
நீதியிலாப் பாபர்நிற்க ரவியஸ்தமாக
நிகழ்த்து மொருப் பிறையதுவு முதையமாக
சோதிமதி தனக்குப்பன்னி ரண்டிலேதான்
சொல்லுமொரு பாபர்நிற்கச் சுபர்நோக்கில்லா
மேதினியிலே யுதித்த பிள்ளைசாகும்
விளம்பியதோர் முன்னோர்கள் வாக்கிதாமே.

இ-ள். சூரியன் சந்திரலக்கினஞ்சேர அதுவே லக்கினமாக 12-மிடத்தில் பாபக்கிரகங்கள் நிற்க சூரியன் அஸ்தமாக சந்திரன் உதையமாகச் சந்திரனுக்கு 12-மிடத்தில் பாபக்கிரகங்கள் நிற்க சுபக்கிரகம் பார்வையில்லாதிருக்கக் குழவி மரணமாகும் எ-று. 11

சுத்தமுள வுதையத்தின் பனிரெண்டெட்டில்
சூழ்ந்துமே சந்திராதித்தர் நிற்கப்
பத்தியதோர் பிள்ளைக்கு ரெண்டுகண்போம்
பார்க்கவே யொருவர்நின்று லொருகண்போகும்
குற்றமுடன் பனிரெண்டா மிடத்தோர்தன்னைக்
கூடியே சனிசெவ்வாய்ப் பார்ப்பாராகில்
முற்றுமே யிருகண்ணுங் கெடுதியாகும்
மொழிந்திட்ட முன்னோர்கள் வாக்கிதாமே.

இ-ள். உதையராசிக்கு 12-8-ல் சூரியன் சந்திரன் நிற்க குழவிக்கு இரண்டு கண்போகும். ஒருவர்நிற்கில் ஒருகண்போகும்.

12-மிடத்தோர்களை சனி-செவ்வாய் பார்ப்பாராகில் இரண்டுகண்ணும் போகும் எ-று. 12

ஜென்மமுடன் சந்திரனுர் லக்கினத்தைச்
செழுங்கிரகந் தானதுவே நோக்காதாகி
தன்மையுள சசியோடு பாபர்நிற்கத்
தான்பிறந்தோன் பரசாத கனேயாவான்
அன்னியராம் சோரபத்தா யின்னுனென்று
அறியவே சசியோடு ரவிதான்நிற்கில்
நன்னயமாம் நால்ஜாதிக் கீழோனுகும்
நவிலுமதி லாரல்நிற்கப் புலையனுமே.

இ-ள். ஜென்மலக்கினத்தையும் சந்திரலக்கினத்தையம் சுபக்கிரகம் பார்க்காதிருக்க, சந்திரனேடு பாபக்கிரகங்கள்நிற்க, அப்போது ஜெனித்த குழவி பரசாதகனுவான். சோரபர்த்தா யின்னுனென்று அறியவேண்டில் சூரியனேடு சந்திரன்நிற்க நாலுஜாதியாருக்கும் கீழாகும். அவரோடு அங்காரகன் நிற்கில் புலையனென்று அறியவும் எ-று. 13

சிக்கெனவே சுபக்கிரக நோக்கேயற்றுச்
செழுமையுளச் சந்திரனைச் சனியேநோக்கப்
பக்குவமாய்ச் சசிசேயும் மேடனிற்கப்
பாலனவன் பிறந்திட்டா லிறந்தேயுண்பான்
மிக்கதொரு ஜென்மலக் கினத்தினேடே
மேன்மையுள சந்திரலக்கினத்தைத் தானும்
நிற்கவே சுபக்கிரகம் நோக்கேயற்று
நேர்க முடவன்முழுநோக்கு நோக்கவே.

இ-ள். சுபக்கிரகம் நோக்கில்லாமல் சந்திரலக்கினத்தைச் சனி நோக்க, சந்திரனும் செவ்வாயும் மேடராசியில் நிற்க அப்போது ஜெனித்திடும் குழவி இரந்துண்பான். ஜென்மலக்கினத்துடன் சந்திரலக்கினத்தையும் சுபக்கிரகம் நோக்காதிருக்க, சனி முழுபார்வை பார்க்க எ-று. 14

விந்தையுட னதில்பிறந்த பிள்ளைதானும்
விளம்பிடுவாய் சீர்கேட னுவனென்றே
நிந்தையுளத் செவ்வாயுறையிற் ருனும்
நிகழ்த்துமொரு ஜென்மசனி கண்டந்தன்னில்
சந்திரன்தா னிற்கவே பிறந்தோன்தானும்
சஞ்சலமாம் சிறைபுகுவா னென்றேசொல்லு
பந்தமுறுஞ் சாதகத்தின் பலந்தானின்னம்
பகருகிறேன் செவிகொடுத்துப் பரிந்துகேளே.

இ-ள். இப்படி பார்வையுற்றுப் பிறந்தபிள்ளை சீர்கேடனுவான். செவ்வாயுரையில் சனிகண்டத்தில் சந்திரன் நிற்கப் பிறந்தபிள்ளை சிறைபடுவான்யென்று அறியவும் எ-று. 15

சனியவனு முதையாதி தன்னில்நிற்கச்
சார்ந்துமே யதிற்கேழில் பாம்புநிற்க
இனிதான கன்னியிலே வெள்ளிநிற்க
இயம்புமொரு வமரபக்ஷ சசிதன்காலில்
வினையான பாம்பதுவுங் கூடநிற்க
வந்துதித்தப் பாலனுக்கு அறையக்கேளு
கனியான கையுடனே காலுந்தானும்
கண்டிதமாய் வெட்டுண்டுப் போகும்பாரே.

இ-ள். சனி உதையராசியில்நிற்க அவருக்கேழில் பாம்புநிற்க கன்னியில் சுக்கிரன்நிற்க அமரபக்ஷத்து சந்திரன்காலில் பாம்பு அங்கத்தில் நிற்க அப்போது சனித்த பிள்ளைக்குக் கையுங்காலும் வெட்டுண்டுப்போகும் எ-று. 16

செவ்வாயின் அங்கிசத்தே யிரவிநிற்க
சீராகத் தானுமது வுதையமாக
ஔவியமாய்த் தேய்பிறைச் சந்திரனும்
அவனோடு பாம்பதுவு மொருகாலேறில்
ஓவ்வியே யப்பொழுது வுதித்தபாலன்
உடலதுவும் பிளப்புண்டு மறித்துகொள்ளு
இவ்விதமாய் ஜாதகற்குப் பலனைச்சொல்லி
இப்புவியில் கீர்த்திபெற யின்னங்கேளே.

இ-ள். அங்காரகன் அங்கிசத்தில் சூரியன் நிற்க அதுவே யுதையமாக தேய்பிறைச்சந்திரன் தன்னோடு பாம்பும் ஒருகாலேற அப்போது ஜெனித்தபாலன் உடல் பிளப்புண்டுப்போகும் எ-று. 17

ஆனதொரு வமரபக்ஷத் தம்மாவாசை
அருங்கடகஞ் சந்திரலக்கினந் தாநிற்க
ஊனமுள்ள யிரவியவ னோடுகூட
உள்ளதொரு பாம்புநிற்கச் சுன்னுதையமாகத்
தானெனவே பிறந்ததொரு குழவிதானும்
தப்பாமல் வுடலதுவே பிளப்பேயுண்டு
நானெனவே கேதுராகு நோக்கப்பெற்று
நவிலுமொரு சீரண சந்திரனுக்கேதான்.

இ-ள். அமரபக்ஷத்து அமாவாசையில் கடகலக்கினமாகி அதில் சந்திரன்நிற்க அவரோடு சூரியன்கூட பாம்புநிற்க சனியுதையமாகப் பிறந்தபிள்ளை உடல்பிளப்புண்டுப்போகும். இராகு-கேதுக்கள் நோக்கப்பெற்றச் சீரணசந்திரனுக்கு சொல்லக்கேளும் எ-று. 18

உடலதுவே சில்வாகும் பிறந்தோன்தானும்
உற்றதொரு வவன்தலையு மறுப்பேயுண்ணும்
தடையின்றி மேடவிருச்சிகத்திலே தான்
தானெனவே செவ்வாயும் வந்துநிற்க

முடவனுமே மங்கனமே யுதையமாக
மூன்றிடத்தில் புதனவனும் வந்துநிற்க
அடவாகத் தான்பிறந்த பாலன்தானும்
ஆகுமவன் குளிர்பெறுவா னென்றுசொல்லே.

இ-ள். உடல் சிலவாகப் பிறந்தபிள்ளை தலையறுப்புண்டுப்போகும். மேஷ விருச்சிகத்தில் அங்காரகன் வந்துநிற்கச் சனி யுதையமாக 3-மிடத்தில் புதன்நிற்கப் பிறந்தபிள்ளை குளிர்ந்துபோகும் எ-று. 19

ஆதித்தன் முதலான் யேழுகோளும்
அமர்ந்துமே தானிருக்க வதிலேயாறு
சோதியாய் தன்தன்னுச் சத்துநிற்கச்
சுத்தமுடன் சிங்கமுமே யுதையமாக
நீதியுள பொன்னவனும் நிற்கத்தானும்
நிகழ்துமொரு வைந்துகோ ளுச்சமாக
ஓதுமிவ் வாறுக்க் கிரகம்நிற்க
உதையமதுப் பொன்னவனு மாகயின்னம்.

இ-ள். சூரியனோடு முதலாய் 6 - கிரகங்களும் அமர்ந்திருக்க அதில் 6-கோள் தன்தன் உச்சத்தில்நிற்க சிம்மராசி யுதையமாக அதில் வியாழன் நிற்க 5-கோள் உச்சமாக இவ்விதமாக கிரகங்கள் நின்று குரு உதயமாதக் கேளும் எ-று. 20

நாலுகோள் தன்தன்னுச் சத்துநிற்க
நன்றாகக் கும்பத்திற் சொல்லக்கேளு
மேலான புகர்தானு முதையமாக
மைந்தனவன் வந்துதிக்கப் பலனைக்கேளு
சாலவே யரசனுக்கு யரசனுவான்
சாற்றுமிந்தத் திரைகடல்சூ ழுலகமெங்கும்
ஏலவே யொருகுடைக்கீ ழாள்வனென்று
இயம்பிய முன்னோர்வாக் கிதுவென்றோதே.

இ-ள். 4-கோள் உச்சத்தில்நிற்க கும்பத்தில் சுக்கிரன் உதையமாகப் பிறந்தபிள்ளை அரசனாகும் எ-று. 21

நண்டுதனில் பூரணமாஞ் சசிதானிற்க
நாட்டமுடன் ஆறுகோள் தன்னைநோக்கக்
கண்டிடுவாய் ரிஷபமது வுதையமாகக்
காளையவன் தானுதிக்க பின்னங்கேளு
விண்டதொரு பாபக்கோ ளுச்சமாக
விளங்கிய மற்றவைக் கிரகமெல்லாம்
அண்டியதோர் நட்புடனே யுச்சமாக
அவரவர்கள் நின்றிடவே யுதித்திட்டாலும்.

இ-ள். கடகத்தில் பூரணசந்திரன்நிற்க 6-கோள் பார்க்க ரிஷபம் உதையமாகப் பிறப்பினும், பாபக்கோள்கள் உச்சமாக நிற்கக், கிரகங் கள் நட்பு உச்சமாகநிற்கப் பிறந்தாலும் எ-று. 22

கன்னிதனில் புந்தியவன் வந்துநிற்கக்
கருத்துடனே மீனத்தில் வியாழன்நிற்க
உன்னிதமாந் தனுசுதனில் வெள்ளிநிற்க
உற்றதொரு மற்றக்கோ ளெல்லாந்தானும்
தன்னிகரா மவரவர்கள் தானந்தன்னில்
தானிருக்க நட்புடனே யாக்ஷியாகிக்
கன்னல்மொழி மாதேகேள் பிறந்தபிள்ளைக்
கடல்சூழு முலகாளு மரசனாமே.

இ-ள். கன்னியில் புதன்நிற்க மீனத்தில் வியாழநிற்க, தனு சில் வெள்ளிநிற்க. மற்றக்கோள்கள் அவரவர் ஸ்தானத்தில் நட்பு டன் ஆக்ஷியாகியிருக்கப் பிறந்தபிள்ளை அரசனாவான் எ-று. 23

கடகத்தில் வியாழனுமே யுதையமாகக்
கதிரோனு மேடமுற விடைக்கேழ் தன்னில்
அடைவாகப் புகர்புந்தி யதிலேநிற்க
அன்பாகப் பிறந்தானு மரசனாவான்
விடையதனிற் சசியுறவே கதிரோன்சிங்கம்
வியாழன் வில்லுறப்புகரு முதையமாகத்
தடையசிலை வியாழனங் கிசத்திலேதான்
தான்குழவி யுதித்தானு மின்னங்கேளு.

இ-ள். கடகத்தில் வியாழன் உதையமாக சூரியன் மேஷத்தில் நிற்க சுக்கிரனும் புதனும் ஏழில் நிற்கப் பிறந்தபிள்ளை அரசனும். ரிஷபத்தில் சந்திரன்யேற சிங்கத்தில் சூரியன்யேற வியாழன் தனு சில்நிற்க சுக்கிரன் உதையமாக குரு அங்கிசத்தில் பிறக்கில் கேளும் எ-று. 24

சந்திரனுக் காறதனில் புந்திநிற்க
சாற்றுமே ழாமிடத்தில் வியாழன்நிற்க
விந்தையுள யெட்டதனிற் புகருநிற்க
விளங்கிடவே சாதகமானோன் தான்பூவிற்
பந்தமுறும் சத்துருவை ஜெயங்கள்செய்துப்
பாரெங்கு மோர்குடைக்கீ ழாள்வானென்று
சிந்தைமகிழ்ந்தே யுரைத்தார் முன்னோர்தானும்
செகத்திலுள்ள மானிடற்கு வேணுமென்றே.

இ-ள். சந்திரனுக்கு 6-மிடத்தில் புதன்நிற்க, 7-மிடத்தில் குரு நிற்க, 8-மிடத்தில் சுக்கிரன்நிற்கப் பிறந்தவன் சத்துருக்களை ஜெயஞ் செய்து இராஜ்ஜியமாள்வான் எ-று. 25

சனிமகரம் சேய்மேடஞ் சசிதான்நண்டு
சார்ந்திடவே வெள்ளிநிறை சிலைபிற்பொன்னும்
புனிதமுடன் ரவிதானும் புலியில்நிற்கப்
புந்தியுமே வீணையுறப் புகலக்கேளும்
இனிதான மதிமுடவ னுச்சம்நிற்க
இரவிபுந்தி ஜென்மத்திற் காறில்நிற்கக்
கனியதுபோல் புகர்பொன்லு மாக்ஷியாகக்
கடல்சூழு முலகாளுந் தனவானுமே.

இ-ள். சனி மகரத்தில்நிற்க, அங்காரகன் மேஷத்திலிநிற்க, சந்திரன் கடகத்தில்நிற்க, சுக்கிரன் துலாத்தில்நிற்க, தனுசில் குரு நிற்க, சூரியன்-சிங்கத்தில் நிற்க, புதன்-மிதுனமேற, சந்திரனும்-சனியும்-உச்சமாக, சூரியனும் - புதனும் - ஜென்மத்திற்கு 6-மிடம் நிற்க, சுக்கிரனும்-குருவும் ஆக்ஷியாக கடலால்சூழு முலகத்தை யாளு மரசனுவான் ஏ-று. 26

வெள்ளிதண்டு மதிகுருவுஞ் சிலையில்நிற்க
விருச்சிகத்தில் சேய்நிற்கக் கன்னிதன்னில்
தெள்ளுமணி போல்புந்தி யுதையமாகத்
தான்பிறந்த பாலனுமே யுலகையாள்வான்
கள்ளமிலா ரவிமதியு முச்சமாகிக்
காணவே யவருவுதைய மாகயின்னம்
விள்ளபுந்தி வீணையிற்றேள் சேய்ஜாடி
விபாழனண் டேறவந்தோ னரசனுமே.

இ-ள். சுக்கிரன்-ரிஷபத்தில்நிற்க, குருவும்-சந்திரனும்-தனுசில் நிற்க, செவ்வாய்-விருச்சிகத்தில்நிற்க, கன்னியில்-புதன் உதையமாக பிறந்த பாலன் உலகமாள்வான். சூரியனும் - சந்திரனும் உச்சமாகி, அவர்களே உதையமாக, புதன்-மிதுனம்நிற்க, செவ்வாய்-கடகத்தில் நிற்க, சனி - கும்பத்தில்நிற்க, குருவு - கடகமேறப் பிறந்த பாலன் அரசனுவான் ஏ-று. 27

மேடரவி சிலைபொன்னு மாகநிற்க
மருவிய சந்திரனுக் கேழாம்வீட்டில்
வீடாகப் புகர்பார்த்து நில்லாவிட்டால்
நெருங்கி யொருக்கால்சேரப் பிறந்தோன்தானும்
தாடாண்மை யுடன்பொறுமை வலுமையோடுத்
தனங்கீர்த்தி யீகையுட னின்னங்கேளு
கோடாக நவரத்ன முடையோனுகிக்
குவலயத்தில் குபேரனைப்போல் வாழ்வானுமே.

இ-ள். மேஷத்தில்-சூரியன்நிற்க, தனுசில்-குருநிற்க, சந்திரனுக்கு 7-மிடத்தில் சுக்கிரன் பார்வையில்லாவிட்டாலும் ஒருகால் சேர்ந்திருக்கப் பிறந்தபிள்ளை ஆண்மையோடும்; பொறுமையும்-வலு

மையும் - தனமும்-ஈகையும் - நவரத்தின முடையவனுய்ப் 'பூலோகக் குபேரனென வாழ்வான் எ-று. 28

சந்திரனும் விடைதனிலே நிற்கக்கேளுஞ்
சார்ந்து யேழாமிடத்து வியாழன்நோக்க
அந்தமுள பொன்முதற்கால் பிறந்தோனின்னம்
அவ்வருதையமாக சேய்மகரம் நிற்கச்
சுந்தரமாம் புகர்அங்கிசத் துதித்தோன்
சூழ்ந்துபொன் னிறைமதியுங் கூடிநிற்கப்
புந்திகன்னி நிற்கவெள்ளி யுதையமாகப்
பிறந்தவனுங் கல்விக்கு அரசனுவான்.

இ-ள். சந்திரன்-ரிஷபத்தில்நிற்க, 7-மிடத்து வியாழன்நோக்க, வியாழன் முதற்காலில் பிறந்தோனும், குருவுதையமாக, செவ்வாய், மகரத்தில்நிற்க, சுக்கிரன்-அங்குசத்தில் உதித்தபாலனும், குருவும்-சந்திரனும்-துலாராசியில் கூடிநிற்க, புதன்-கன்னியில்நிற்க, சுக்கிரன் உதையமாகப் பிறந்தவன் கல்விக்கரசனும் எ-று. 29

சுக்கிரனு மீனமதிற் றனிலேநிற்கச்
சூழ்ந்துமே பொன்னவனு முதையமாக
சிக்கியே தீக்கோள்வளர் மதியைநோக்கச்
செனித்ததொரு பாலவன் சீமானுகும்
சிக்கினவே புகர்பொன்னேக் கத்திலாதல்
சனியுதைய மாகவே பிறந்தோன்தானும்
மிக்கவே தனவானுய் வாழ்வானப்பா
மேதினியி லொருவருக்கு மொன்றீயானே

இ-ள். சுக்கிரன் - மீனத்தில்நிற்க, குரு உதையமாக, அங்காரகன் சந்திரனைநோக்க, பிறந்தபாலன் சீமானுவான். சுக்கிரன்-குரு இவர்கள் நோக்கத்தில் சனியுதையமாகப் பிறந்தவன் மிக்கதனவானுக வாழ்வான். ஆனுல், ஒருவருக்கும் உபகாரம் செய்யமாட்டான் எ-று. 30

வளர்மதிக்கு முன்பின்னும் நற்கோள்நிற்க
வந்துதித்தோன் சாமளவுஞ் செல்வனுகும்
தளராமல் அம்மதிக்கு முன்னேதானும்
தானிற்கப் பாலியத்தில் ஸ்திரீயுண்டாகும்
வளர்மதிக்குப் பின்நிற்க விர்த்தாப்பியத்தில்
வந்துதவும் அவன்தனக்கே ஸ்திரீதானப்பா
வளர்சந்திர லக்கினத்தைச் சுபர்கள்பற்றி
உச்சக்கோள் நோக்குதித்தோ னரசனுமே.

இ-ள். சந்திரனுக்கு முன்னும் பின்னும் நாற்கோள்நிற்கப் பிறந்தபிள்ளை தன் ஆயுள்பரியந்தம் செல்வவானுக யிருப்பான். சந்திரனுக்கு முன்னிருக்கப் பாலியத்தில் ஸ்திரீயுண்டாகும். சந்திரனுக்

குப் பின்னிருக்க விர்த்தாபியத்தில் ஸ்திரீயுண்டாகும். சந்திரலக்கினத்தைச் சுபர்கள்பற்றி உச்சக்கோள்நோக்க உதித்தோர் அரசனுவான் எ-று. 31

புந்தியுமே யுதையமாக சசிக்கேழில்
பொன்னிற்கப் பிறந்தோன் சேனதியாம்
விண்ணியுட னேபுகர் பொன்னுங்கூட
விளங்குமுட லுயிருக் கஞ்சாமிடத்தில்
தொந்தமுடன் வியாழன்புகர் கூடிநிற்கத்
துலங்கவே புந்தியுமே யுதையமாக
வந்துதித்த பாலனையே வரசர்போற்ற
வாணியைப்போல் கல்விமா னுவானுமே.

இ-ள். புதன் உதையமாக, சந்திரனுக்கு 7-மிடத்தில் குரு நிற்கப் பிறந்தபிள்ளை சேனதிபதியாவான். சுக்கிரனும்-குருவுங்கூட உயிருடல் இவைகளுக்கு 5-மிடத்தில் குருவும் சுக்கிரனும் கூடிநிற்க, 5-மிடத்தில் புதன் உதையமாகப் பிறந்தபிள்ளை அரசர்கள் போற்றக் கல்விமானுயிருப்பான் எ-று. 32

கலிவிருத்தம்

பொன்னுடன்புகர்புந்தியும்நோக்கிட
சென்மமானதோர்செல்வன்தனக்குமே
வன்மமேபாபர்செய்யும்வன்மைகள்
ஆதித்தனைக்கண்டபனிபோல்பறக்குமே.

இ-ள். குருவும் - சுக்கிரனும் - புதனும்நோக்க, ஜெனனமான பிள்ளை பாபக்கிரகங்கள்செய்யும் கெடுதியெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் பறக்கும் எ-று. 33

நீசபங்க ராஜயோகம்

1 எந்த கிரகம் எந்த ராசியில் நீசமடைந்தனவோ அந்த ராசி நாதன் ஆக்ஷியாகவோ அல்லது உச்சமாகவோ இருக்கின் மேற்படி நீசபங்கமாகி ராஜயோகத்தை தருமென்பது சில சாஸ்திரக்கொள்கை. இவை பொது விதியேயாகும்.

2 மேலே சொன்னபடி நீச்சமடைந்த ராசியதிபன் முன் சொன்னபடி ஆக்ஷி அல்லது உச்சம் பெற்றிருக்கினும் சந்திரனுக்குக் கேந்திரங்களா யிருந்தாலன்றி மேற்படி நீசபங்கமாகி ராஜயோகத்தை தாராது எனச் சில ஆசிரியர் கூறியுள்ளனர். இவையும் முழுப்பொருத்த மானதன்று. ஏதோ சிலகாலம் சுல்பயோக முண்டாகலாம்.

3 நீச்சமடைந்த கிரகமிருக்கும் ராசியானது ஜென்மலக்கினப்படி கோணமாகி முன்சொன்னபடி மேற்படி நீச்சராசியதிபன் சந்திர

கேந்திரத்தில் ஆக்ஷி உச்சம் பெற்றிருக்க அந்த ஜாதகனுக்கு மேற்படி நீச்சகிரகத்தினது திசையிலோ அல்லது ஆக்ஷி உச்சம் பெற்றவனது திசையிலோ பூரண ராஜயோகம் உண்டு.

4 மேலே சொன்னபடி நீச்சராசிக்குடையோன் ஆக்ஷி உச்சம் பெற்று குரு சம்மந்தமேனும் பார்வையேனு மிருக்க மேற்படி கிரகங்களது திசையில் அரசர்களது உபகாரத்தால் பிரபலயோகம் உண்டு.

5 நீச்சமடைந்த கிரகம் சுக்கிரனுடன்கூடி அல்லது பார்வை பெற்றிருக்கவும், மேற்படி நீச்சவீட்டுக்குடையவன் லக்கினகேந்திரங்களில் ஆக்ஷி உச்சம் பெற்றிருக்கவுமாயின் அந்த ஜாதகனுக்குத் தன் மனைவியாலும் போகஸ்திரீயாலும் பூரணராஜயோகம் உண்டு.

6 ஓர் ஜாதகனுக்கு குரு உச்சமும், சந்திரன் ஆக்ஷியும், சுக்கிரன் நீசமுமாகி, இவர்கள் ஒருவர்க்கொருவர் கேந்திர திரிகோணங்களாகியிருக்க அந்த ஜாதகனுக்குப் பிரபலயோகம் உண்டு. மேற்படி யோகம் பற்பல விதத்தாலும் உண்டாகலாம்.

சகடை

மேலெழுவியாழன்நின்ற ராசிக்கோரீராரெட்டில்
மாலைவெண்மதியும்சேரில் வந்தநாள்சகடயோகம்
பாலகன்பிறக்கிற்சாவாம் பழிபடுமணத்தைச்செய்யின்
ஞாலமேற்வழியிற்போகின் நலமில்லைநறுமின்கொம்போ.

இ-ள். குருநின்ற ராசிமுதல் 6-8-12-ஆம் ராசியில் சந்திரன் நிற்க அவை சகடயோகம் எனப்படும். இதன்பலன் என்னவெனில் மேற்படி காலத்தில் ஓர் குழவி ஜெனிக்குமாயின் அவை மறிக்கும் எனவும், மேற்படி காலத்தில் விவாகம் முதலியன செய்யின் பழிக்கிடமாகும் எனவும், பிரயாணம் செய்வது நன்மையாகாதெனவுங் கூறுக ஏ-று.

இவை சூடாமணி நூலாசிரியரது கருத்தாகும். மற்றும் சாதக அலங்கார நூலாசிரியரோ எனில்,

அகடிமன்னனுக் காறெட்டொடுவியத்
திகடிலாமதி யெய்தியிருந்திடில்
சகடயோகமிதிற் பிறந்தாற்கெலாம்
விகடத்துன்பம் விளையுமரிட்டமே.

இ-ள். குருநின்ற ராசிக்கு 6-8-12-ஆமிடங்களில் சந்திரனிருக்க அவை சகடையோகமாகும். அதன்பலன் என்னவெனில்? மேற்படி சகடையிற் பிறந்தோர்க்கு அளவிடமுடியாத அனேகதுன்பமும் அரிட்டங்களும் உண்டாகும் ஏ-று.

இவ்விருபாட்டாலும் குருநின்ற ராசிக்கு 6-8-12-ல் மதிநிற்பதே சகடை எனவும் மேற்படி சகடையிற் பிறந்தோரனைவரும் படமுடியா

துன்பத்திற்கும் அரிட்ட தோஷத்திற்கும் ஆளாவர் எனக் கூறியுள்ளனர். ஆனதால் மேற்படி சகடையிற் பிறந்த ஜாதகங்களுக்கு ஆயுள் நிர்ணயம் செய்வதாயின் லக்கினாதி சந்திரன் - சனி என்னும் இவர் பலம்பெற்றிருந்தாலன்றி தீர்க்காயுளெனக் கூறுதல் கூடாது. மற்றும் மேற்படி தோஷம் எந்நாள் வரையில் என்பதை குருவுக்கு 6-ல் சந்திரனிருக்க 6-மாதம் அல்லது 6-வருடங்கள் எனவும், 8-ல் நிற்க 8-மாதம் அல்லது 8-வருடங்கள் எனவும், 12-ல் நிற்க 12-மாதம் அல்லது 12-வருடம் எனவும் கூறுக. இதனை அப்போதுள்ள திசைபுக்தியால் நிர்ணயிக்கவும்.

பாலாரிஷ்டம்

1 ஒருவர்முகம் ஒருவருக்குக் காணப்படும் காலமுதல் சூரிய மண்டலத்தின் அர்த்தோதயசமயம் வரையிலுமுள்ள இரண்டு நாழிகையளவும் காலைசந்தியாம்.

2 சூரியமண்டலத்தின் அர்த்தாஸ்தமயசமயம் முதல் நக்ஷத்திரப்பிரகாசம் காணப்படும் காலவரையிலுள்ள இரண்டுநாழிகையும் மாலை சந்தியாகும்.

3 மேற்படி சந்திகாலங்களில் ஜனனமானது சந்திரவோரையாகி எந்த ராசியாயினும் கடைசி நவாம்சையாகி பாவர்களால் பார்வை பெற்றிருக்கப் பிறந்த குழவி உடனே மரிக்கும்.

4 லக்கினத்திற்கு 1-4-7-10 முதலிய இடங்களில் சனி-ராகு-கேது இவர்களிருந்து சந்திரன் ஈனமடைந்திருக்கப் பிறந்த குழவி 3-நாளில் மரிக்கும்.

5 விருச்சிகம் அல்லது கடகம் ஜென்மலக்கினமாகி பாவர்கள் பூர்வார்த்தத்திலும், சுபர்கள் உத்தரார்த்தத்திலுமிருக்கப் பிறந்த சிசு உடனே மரிக்கும்; அல்லது மாதம் 1-க்குள் மரிக்கும்.

6 ஜென்மலக்கினத்திற்கு 2-12-ஆகிய இருபுரத்திலும் பாவர்களிருந்து சுபகோட்களால் பார்வையற்றிருக்க அந்த குழவியானது நாட்கள் 48-க்குள் மரணமடையும்.

7 2-12-ல் பாவர்களிருந்து லக்கினாதிபதி ஆறிலும் 12-ஆம் வீட்டோன் ஜென்மலக்கினத்திலுமிருக்க பிறந்த குழவி வருடம் 1-க்குள் மரணமடையும்.

8 2-ஆம் வீட்டோன் ஜென்மலக்கினத்திலும் அட்டமாதிபதி ஏழிலுமிருந்து 2-8-ஆமிடங்களில் சனி-ராகு-கேது இவர்களிருக்க மேற்படி குழவி பிறந்த 8-மாதங்களில் மரணமடையும்.

9 ஜென்மலக்கினத்தில் சனி 7-ல் ராகு கூடியும், சந்திரனுடன் பாவர்கள்கூடி சுபர் நோக்கமற்றிருக்க அந்த ஜாதகன் ஜெனித்த வருஷம் ஒன்றுக்குள் மரணமாவன்; அல்லது பிறந்த அன்றே மரிக்கினும் மரிக்கும்.

10 1-8-ல் பாவர்களும் 12-ல் க்ஷீணமதியுமிருந்து கேந்திரங்களி லொன்றில் சுபர்களது பார்வையாவது சேர்க்கையாவது அற்றிருக்க அந்த ஜாதகன் மாதம் ஒன்றுக்குள் மரிப்பான்.

11 மாதுருகாரகனாகிய சந்திரன் பாவர்களது நடுவே நின்று சுபர்களது பார்வையற்று 7-8-லும் பாவர்களிருக்க மேற்படி சிசுவும் தாயும் மரிக்கும்.

12 முன்சொன்னபடி பாவர்களது மத்தியில் சந்திரனிருந்து சுபர்களால் பார்வைபெற்று 7-8-ல் பாவரிருக்கின் தாய்க்குப் பிரபல நோயுண்டாகும் எனவும், மேற்படி குழவி மாத்திரம் மரிக்கும் எனவும் கூறுக.

13 சனியும் சந்திரனும் கூடி ஜென்மலக்கினத்திலிருக்க 8-ல் செவ்வாய் நிற்க முன்சொன்னபடி தாயும் குழவியும் மரணமாவார்.

14 சனியுடன் சூரியன்-புதன் கூடி ஜென்மலக்கினத்திலிருக்க செவ்வாயிருந்த ராசிக்கு எட்டில் சந்திரனிருக்க மேற்படி குழவியும் தாயும் மரணமாவார்.

பாலாரிஷ்ட பங்கம்

1 மேலே சொன்னபடி கிரகங்களமைந்தாலும் ஜென்மலக்கி னத்தில் குருபலம் பெற்றிருப்பாரே யாமானால் மேற்படி தோஷம் எவையும் பாதிக்கப்படமாட்டாது.

2 ஜென்மத்திற்கு 8-ல் சந்திரனிருந்தாலும், மேற்படி சந்திரன் புதன்-குரு-சுக்கிரன் என்னு மிவர்களது திரேகாணம் பெற்றிருக்க, மேற்படி அரிட்டங்கள் யாவும் பங்கமாகும்.

3 புதன்-குரு-சுக்கிரன் என்னும் மூவருள் ஒருவர் மிக்கபலம் பெற்று கேந்திரங்களி லொன்றிலிருக்க மேற்படி தோஷம் எவையாயி னும் பாதிக்கப்படமாட்டாது.

4 1-4-7-10 குரு-சுக்கிரன் - புதன் - சந்திரன் என்னு மிவர்க ளிருந்தால் மேற்படி தோஷங்கள் எவையாயினும் அவை பாதிக்கப்பட மாட்டாது.

மற்றுமுள்ள விவரங்களுக்கு எம்மால் வெளியிட்டுள்ள சோதிடக் களஞ்சிய விருத்தியுரையில் காணவும்.

யோகம்

1 மேஷலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குரு - சனி என்னும் இருதிசையும் யோகத்தைத்தரும்.

2 ரிஷபலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சனிதிசை யொன்றே யோகத்தைத்தரும்.

3 மிதுனலக்கினத்தவர்க்கு சனிதிசை யொன்றே யோக முடையது.

4 கடகத்தோற்குச் செவ்வாய் ஒருவனே யோககாரகன்.

5 சிங்கலக்கினத்திற் பிறந்தவர்களுக்கு செவ்வாய் முழுயோகத்தையும், சுக்கிரன் அரையோகத்தையும் தருவர்.

6 கன்னியாராசியிற் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன் ஒருவனே யோகத்தைத் தருவன்.

7 துலாராசியிற் பிறந்தவர்களுக்குச் சனி முழுயோககாரகனும், புதன் அரையோகத்தையும் தருவர்.

8 விருச்சிகராசியிற் பிறந்தவர்களுக்கு குரு-சந்திரன் என்னும் இருவரும் யோகத்தைத் தருவர்.

9 தனுசலக்கினத்திற் பிறந்தவருக்கு இரவி முழுயோகத்தையும், செவ்வாய் அரையோகத்தையும் தருவர்.

10 மகரலக்கினத்தில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன் முழுயோகத்தையும், புதன் கால்யோகத்தையும் தருவர்.

11 கும்பராசியிற் பிறந்தவர்களுக்கு மேற்படி புதன் கால்யோகத்தையும், சுக்கிரன் அரையோகத்தையும் தருவர்.

12 மீனலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குரு கால்யோகமும், செவ்வாய் அரையோகத்தையும் தருவர். ஆனதால் மேற்படி யோககாரகாளிருக்கும் ராசிபலத்தாலும் பார்வை சேர்க்கை முதலியனவற்றாலும் ஆராய்ந்து அவ்வவர்களது திசையில் யோகம் உண்டென்றும் இல்லை யென்பதையும் கால் அரை முக்கால் யோகமுண்டென்பதை ஆராய்ந்து கூறுக.

கோசாரப்பலனறியும் விவரம்

கலிவிருத்தம்

சூரியன்

ஆறுபத்துப்பதினொன்றுமூன்றினில்
சூரியனுனவன் துலங்கியேநின்றிடில்
வீரியமானநற்பலனதைத்தருகுவான்
காரியம்யாவுமேகையதுகூடுமே.

இ-ள். சூரியன் 3-6-10-11° இவ்விடங்களில் இருக்கில், நற்பலனைத் தருவதுமன்றி சகல காரியமும் கைகூடுதலுண்டாம் எ-று. 1

சந்திரன்

ஒன்றுமூன்றுரேழுபத்துப்பதினொன்றில்
நின்றிடச்சசிநல்லபலன்தரும்

கன்றுகாலிநற்கனகமும்வந்திடும்
சென்றதோர்பொருள்சேருமென்றறிகுவீர்.

இ-ள். சந்திரன் 1-3-7-10-11 இவ்விடங்களில் நிற்கில், நற்பலனைத் தருவதுமன்றி மாடுகன்றும் வரும், திரவியஞ்சேரும், போன பொருள்கிடைக்கும், திரேகசௌக்கிய முண்டாம் எ-று. 2

அங்காரகன்

காணமூன்றைந்தாறேழுவொன்பது
பூணவேபதினொன்றுடன்பனிரெண்டில்
வேணவேவரவெகுபலன் தருகுவார்
நாணமன்றியேநாட்டினில்வாழ்வரே.

இ-ள். அங்காரகன் 3-5-6-7-9-11-12 இவ்விடங்களிலிருக்கில் நற்பலனைத் தருவதுமன்றி யாவரும்புகழ வாழ்வார் எ-று. 3

புதன்

விந்தையாயொன்றுரெண்டுமூன்றைந்தினில்
தொந்தநவம்பத்துப்பதினொன்றுபன்னிரண்டில்
அந்தமாயவரன்புடன்நின்றிடப்
பந்தமகற்றிநற்பலனதுதருகுமே.

இ-ள். புதன் 1-2-3-5-9-10-11-12 இவ்விடங்களில் நிற்கில், மனவியாகூலம் விலகி நற்பலனைத் தருவார் எ-று. 4

வியாழன்

இரண்டுஐந்துயேழ்வொன்பதுபதினொன்றில்
கண்டிடக்குருகருணையால்நின்றிடில்
விண்டிடும்பொருள்வேணபலன் தரும்
மண்டலத்தோர்கள்மகிழுடன்போற்றவே.

இ-ள். வியாழன் 2-5-7-9-11 இவ்விடங்களில் நிற்கில், பொருள் சேரும், புகழுண்டாகும், நல்ல பிரபுக்கள் உதவியுண்டாகும் எ-று. 5

சுக்கிரன்

பார்கவனென்றுரெண்டுமூன்றுநாலுடன்
ஏற்கப்பதினொன்றேழஞ்சில்நவம்நிற்க
தீர்க்கமானநற்பலனைத்தருவராம்
பூர்க்கவேபுகழ்பெருகவென்னுளுமே.

இ-ள். சுக்கிரன் 1-2-3-4-5-7-9-11 இவ்விடங்களில் நிற்கில், தீர்க்கமாக நல்லபலனைத் தருவார் புகழுண்டாகும் எ-று. 6

சனி

ஒன்றுமூன்றுறுவொன்பதஞ்சியேழுடன்
நின்றிடப்பத்துப்பதினொன்றுபனிரெண்டில்

வென்றிடவேவெகுவெற்றியுண்டாகிடும்
நன்றெனநிகழ்யாவும்பலிக்குமே.

இ-ள். சனி 1-3-5-6-7-9-10-11-12 இவ்விடங்களில் நிற்க, வெற்றியுண்டாகும், தனலாபங் கிடைக்கும் எ-று. 7

இராகு-கேது

விள்ளுமொன் றுரெண்டுமூன்ற றுடன்
உள்ளதோரேழுபதினொன் றுபனிரெண்டில்
கள்ளமிலாமலேவந்தவர்நின் றிட
தெள்மணிப்போல்நற்பலனதுதருவரே.

இ-ள். இராகு-கேது 1-2-3-6-7-11-12 இவ்விடங்களில் வந்து நிற்க, நற்பலனைத்தருவார் நன்மையுண்டாம் எ-று. 8

மேற்படி கிரகங்கள் கெடுதியிடமறியும் விவரம்

வேறு-விருத்தம்

சூரியன்

இவ்வித மிராசிதா னறிந்துகொண்டு
இலக்கினத்தை யெண்ணியே பார்க்கும்போது
ஒன்றைந்து நாலேழு யெட்டுதன்னில்
உதவாது சூரியரு மிருப்பாராகில்
நின்றதினால் விபரீதம் விளையுமப்பா
நிந்தனையாம் பழியோடு வியாதியுண்டாம்
கன்றுநோய் கலகமுட னில்லம்விட்டுக்
கலங்கியே தேசாந்த்ரம் போவர்தாமே.

இ-ள். சூரியன் கோசாரராசிக்கு 1-2-5-7-8 இவ்விடங்களில் நிற்க விபரீதமான கெடுதிநேரும், வியாதியோடு கலகமுண்டாகும், கன்று நோய்காணும், அபவாதமான பழிநேர்ந்து வீட்டைவிட்டு ஓட்டும், தேசாந்திரப்போக்கு முண்டாமென்றறியவும் எ-று. 1

சந்திரன்

சந்திரன் கெடுதியிடஞ் சாற்றக்கேளும்
சஞ்சலமா மிரண்டுநான் கைந்துயெட்டும்
பந்தமா யவர்தங்கி நிற்பாராகில்
பலன்மாறி கைப்பொருளும் விரையமாகும்
மந்தரவாதி வாய்மூடி நின்றுப்போலும்
மனவருத்த மாவதுட னின்றுங்கேளு
சிந்தைதனில் நினைத்ததுவும் பலித்திடாது
செய்தொழிலும் சபலமதாயாகும்ப்பாரே.

இ-ள். சந்திரன் 2-4-5-8 இவ்விடங்களில் நின்ருல் பலன் மாறும், கைப்பொருள் விரையமாகும், வாய்ப்பேச்சு செல்லாது, பந்தனமாகும், மனவியாகூலமுண்டாகும், செய்யுந்தொழில் சபலமாகும், நினைத்தகாரியம் முடியாது எ-று. 2

அங்காரகன்

செவ்வாயால் துன்பமென்ற வீட்டையானும்
செப்புகிறேன் கவனமதாய்ச் சீராய்க்கேளு
ஒவ்வாது வொன்றிரண்டு நாலுமெட்டோ
டுத்தமனே பத்ததுவு முதவாதப்பா
இவ்வாறு கிரகமுள்ளோன் வாழ்க்கைதன்னை
இயம்புதற்கு வொருநாவால் முடியாதப்பா
அவ்விதமாய்ப் பிணியோடு அலைச்சல்பட்டு
ஆராத துயர்வருமென் றரைந்திட்டாரே.

இ-ள். அங்காரகன் 1-2-4-8-10 இவ்விடங்களில் நிற்கில், வாழ்க்கை அவகேடாகும், மனதில் துயரமுண்டாகிச் சஞ்சலப்படுவன், திரேகத்தில் வியாதிகாணும், போஜன சௌக்கியமில்லாமல் அலைச்சல்பட்டுத் திரியவைப்பான் எ-று. 3

புதன்

புதனிற்கும் பொல்லாத யிடத்தைக்கேளும்
புகன்றிடவே நான்காறு யேழுயெட்டில்
சதியாக அவர்தங்கி யிருக்குமட்டுஞ்
சார்ந்துமே யவருடனே பாபர்சேரில்
விதியாக மூளுமப்பா துன்பம்மேலும்
விருந்தொடு பந்துக்களும் பகையதாவார்
நிதியோடுங் கல்வியது பலியாதென்று
நிகழ்த்திய முன்னோரின் வாக்கிதாமே.

இ-ள். புதன் 4-6-7-8 இவ்விடங்களில் நிற்க, அவருடன் பாபக் கிரகங்கள் நிற்க துன்பமுண்டாகும், பந்துக்களே பகைப்படுத்தும், கல்வி பலிதமிராது எ-று. 4

வியாழன்

குருவேதான் ஒன்றுநான்காறெட்டில்
கூறிடும் பத்துபனி ரெண்டுமூன்றில்
கருமமா யவன்தங்கி யிருப்பானாகில்
கஷ்டமுடன் மெய்தனிலே வியாதிகாணும்
உருகுலைந்து நின்றுமே புலம்பச்செய்யும்
உற்றதொரு ராமர்சீதை நளன்புரூரவன்
பருவமுள தமயந்தி ஐவர்பட்ட
பாடதுபோ லாகுமென்று பகர்ந்திட்டாரே.

இ-ள். வியாழன் 1-3-4-6-8-10-12 இவ்விடங்களில் நிற்கில், திரேகத்தில் வியாதிகாணும், உருவைக்குலைக்கும், ராமர் - சீதை - புரூரவசக்கிரவர்த்தி - நளச்சக்கிரவர்த்தி - தமயந்தி - பஞ்சபாண்டவர் இவர்கள் முற்காலத்திற்பட்ட கதைபோல் செய்வார் எ-று. 5

சுக்கிரன்

சுக்கிரன் தங்கும்பொல்லா யிடத்தைக்கேளும்
சொல்லுமொரு ஆறெட்டு பத்தோடின்னம்
துக்கமே பனிரெண்டி லிருந்துவிட்டால்
துலையாத மனவருத்தப் படுவாரப்பா
அக்காமா மழுகையவ மானங்காணும்
ஆகாத பகைகளெல்லா மடுத்துத்தோன்றும்
சிக்கனவே யிருந்தவிடம் விட்டுவேறே
சேரவே செய்யுமென்று செப்பினரே.

இ-ள். சுக்கிரன் 6-8-10-12 இவ்விடங்களில் நிற்பானாகில், துலையாத மனக்கவலை யுண்டாக்குவான், அவமானம் வருவிப்பான், எந்த இடமும் பகைபடுத்தி வைப்பான், இருக்குமிடம்விட்டு வேறே போகும்படி செய்வான் எ-று. 6

சனி

வினையாக சனிநிற்கு மிடத்தைக்கேளும்
விளம்புமொரு நாலிரண் டெட்டுதன்னிற்
பிணியாளன் தங்கியே நிற்பானாகில்
பில்லிசூன்னியம் பிசாசு யேவல்காணும்
அனியாய்ப் பகைநேரும் வியாதிகாணும்
அலைச்சல்பட்டு நிற்பா னனாதிபோலே
தனியாக தேசாந்திர மேகவைப்பான்
தானறிவீ ரென்றுமுன்னோர் சாற்றினரே.

இ-ள். சனி 2-4-8 இவ்விடங்களில் நின்றால் பில்லி - சூனியம் - பிசாசுபயம் - ஏவல் இவைகளைச் செய்விப்பான், அனியாயமான பகை யுண்டாக்குவான், வியாதிகாணும், அலைச்சல்படுத்தி அனாதியாக்கு வான், தனியாகத் தேசாந்திரமோட்டி வைப்பான் எ-று. 7

இராகு-கேது

கேதுராகு கெடுதியிடங் கேளும்நன்றாய்
கஷ்டமப்பா நான்குமெட்டும் பத்துமைந்தும்
ஓதுமொரு வொன்பதுவு முந்தவாதப்பா
உள்ளபொருள் விரையத்தா லழிந்துபோகும்
மேதினியி லவன்தனக்கு வெறிபோல்காணும்
மனம்போன படிபேசி மயங்கிநிற்பான்
நீதிமொழி அவறவைப்பா னென்றுமேலோர்
நிகழ்த்திய கோசார பலனிதாமே.

இ-ள். இராகு-கேது 4-5-8-9-10 இவ்விடங்களில் நின்ருல், பொருள் விரையமாக அழியும், பேயனைப்போல் அலையச்செய்வான், மனம்போன படிக்கெல்லாம் பேசித்திரிய வைப்பான், நீதியான மொழியை பிசகுசெய்விப்பா னென்று மேலோர் கூறுகிருர் எ-று. 8

காலசக்கிர திசைவருஷம்

மேஷச்செவ்வாய்க்கு	திசை வருஷம்	7
ரிஷபச்சுக்கிரனுக்கு	ஷ்டி	16
மிதுனபுதனுக்கு	ஷ்டி	9
கடகசந்திரனுக்கு	ஷ்டி	21
சிங்கரவிக்கு	ஷ்டி	5
கன்னிபுதனுக்கு	ஷ்டி	9
துலாசுக்கிரனுக்கு	ஷ்டி	16
விருச்சிகசெவ்வாய்க்கு	ஷ்டி	7
தனுசுகுருவுக்கு	ஷ்டி	10
மகரச்சனிக்கு	ஷ்டி	4
கும்பச்சனிக்கு	ஷ்டி	4
மீனகுருவுக்கு	ஷ்டி	10
	ஆகமொத்த ஷூ	118

இடவோட்டு நாள்

உரோகணி-மிருகசிரம்-திருவாதிரை-மகம்-பூரம்-உத்திரம்-விசாகம்-அனுஷம்-கேட்டை - திருவோணம்-அவிட்டம்-சதயம் என்னும் 12-ம் இடவோட்டு நாள்.

வலவோட்டு நாள்

அஸ்வனி-பரணி-கார்த்திகை - புனர்பூசம்-பூசம்-ஆயிலியம்-அஸ்தம்-சித்திரை-சுவாதி-மூலம்-பூராடம்-உத்திராடம்—பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி ஆகிய 15-ம் வலவோட்டு நாள்.

காலசக்கிரபுக்தி விவரம்

அஸ்வனி-கார்த்திகை-பூசம்-சுவாதி -மூலம்-உத்திராடம்-ஆயிலியம் - அஸ்தம்-பூரட்டாதி - ரேவதி என்னும் 10-நக்ஷத்திரங்களின் 1-ஆம் பாதத்திற்கு மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கடகம்-சிங்கம்-கன்னி-துலாம்-விருச்சிகம்-தனுசு ஆகிய ராசிகள் 9-க்கு வருஷம்-100.

மேற்படி 2-ஆம் பாதத்திற்கு மகரம்-கும்பம்-மீனம்-விருச்சிகம்-துலாம் - கன்னி - கடகம் - சிங்கம் - மிதுனம் ஆ ராசிகள் 9-க்கு வருஷம்-85.

மேற்படி 3-ஆம் பாதத்திற்கு ரிஷபம்-மேஷம் - மீனம்-கும்பம்-மகரம் - தனுசு - மேஷம் - ரிஷபம் - மிதுனம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-83.

மேற்படி 4-ஆம் பாதத்திற்கு கடகம் - சிங்கம்-கன்னி - துலாம்-விருச்சிகம் - தனுசு - மகரம் - கும்பம் - மீனம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-86.

பரணி-பூசம்-சித்திரை - பூராடம் - உத்திரட்டாதி என்னும் 5-நக்ஷத்திரங்களின் 1-ஆம் பாதத்திற்கு விருச்சிகம் - துலாம்-கன்னி-கடகம்-சிங்கம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம்-மீனம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-100.

மேற்படி 2-ஆம் பாதத்திற்கு கும்பம்-மகரம் - தனுசு-மேஷம்-ரிஷபம் - மிதுனம் - கடகம் - சிங்கம் - கன்னி ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-85.

மேற்படி 3-ஆம் பாதத்திற்கு துலாம்-விருச்சிகம்-தனுசு-மகரம்-கும்பம்-மீனம் - விருச்சிகம்-துலாம் - கன்னி என்னும் ராசிகள் 9-க்கு வருஷம்-83.

மேற்படி 4-ஆம் பாதத்திற்கு கடகம்-சிங்கம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம் - மீனம் - கும்பம் - மகரம் - தனுசு ஆக ராசிகள் 9 - க்கு வருஷம்-86.

உரோகணி-மகம் - விசாகம்-திருவோணமாகிய நான்கு நக்ஷத்திரங்களினதி 1-ஆம் பாதத்திற்கு தனுசு - மகரம் - கும்பம் - மீனம்-மேஷம் - ரிஷபம் - மிதுனம் - சிங்கம் - கடகம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-86.

மேற்படி 2-ஆம் பாதத்திற்கு கன்னி-துலாம்-விருச்சிகம்-மீனம்-கும்பம் - மகரம் - தனுசு - விருச்சிகம் - துலாம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-83.

மேற்படி 3-ஆம் பாதத்திற்கு கன்னி-சிங்கம் - கடகம்-மிதுனம்-ரிஷபம் - மேஷம் - தனுசு - மகரம் - கும்பம் ஆக ராசிகள் 9 - க்கு வருஷங்கள்-85.

மேற்படி 4-ஆம் பாதத்திற்கு மீனம்-மேஷம்-ரிஷபம்-மிதுனம்-சிங்கம் - கடகம் - கன்னி - துலாம் - விருச்சிகம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-100.

மிருகசிரம்-திருவாதிரை-பூரம் - உத்திரம்-அனுஷம்-கேட்டை-அவிட்டம்-சதயம் என்னும் 8-நக்ஷத்திரங்களின் 1-ஆம் பாதத்திற்கு மீனம்-கும்பம்-மகரம்-தனுசு-விருச்சிகம் - துலாம்-கன்னி-சிங்கம்-கடகம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-86.

மேற்படி 2-ஆம் பாதத்திற்கு மீனம் - ரிஷபம்-மேஷம்-தனுசு-மகரம் - கும்பம் - மீனம் - மேஷம் - ரிஷபம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-83.

மேற்படி 3-ஆம் பாதத்திற்கு மிதுனம்-சிங்கம்-கடகம்-கன்னி-துலாம் - விருச்சிகம் - மீனம் - கும்பம் - மகரம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-85.

மேற்படி 4-ஆம் பாதத்திற்கு தனுசு - விருச்சிகம் - துலாம்-கன்னி-சிங்கம்-கடகம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம் ஆக ராசிகள் 9-க்கு வருஷம்-100.

இவ்வாறு அந்தந்த ராசியின் அதிபதிகளுக்கு காலசக்கிரதிசைக்குள் சொல்லியிருக்கிற வருஷக்கணக்கின்படி கொள்ளவேண்டும்.

காலசக்கிர கதிகள்

மேஷம்-தனுசு-மீனம்-விருச்சிகம் இவற்றிற்பாய சிங்ககதியும், கன்னி-கடகம்-சிங்கம்-மிதுனம இவற்றிற்பாய தவளைகதியும், வலமாகப்பாய சர்ப்பகதியும், இடமாகப்பாய மற்கடகதி யெனவுங் கொள்க. மற்றும் இதனது முழுவிவரங்களும் கற்றோர் மற்றோர் முதலிய யாவரும் எளிதிலறியும் வண்ணமாய் எழுதி எம்மால் வெளியிட்டுள்ள சோதிடக்களஞ்சிய விருத்தியுரையில் விரிவாய்க்கண்டு கொள்க.

மேற்படி காலசக்கிரதிசைப் பாய்ச்சலால் வயது யோகம் கெண்டாதிகெண்டம் முதலியனவற்றை நிச்சயமாய் யறியல்லாமாதலால் இதனை இங்கு மிக்க சூக்ஷமமாய் விளக்கியுள்ளனம்.

அஷ்டவற்கம்

சூரியன்பரல் 48-க்கு விவரம்

சூரியன்	1-2-4-7-8-9-10-11	குரு	5-6-9-11
சந்திரன்	3-6-10-11	சுக்கிரன்	6-7-12
குஜன்	1-2-4-7-8-9-10-11	சனி	1-2-4-7-8-9-10-11
புதன்	3-5-6-9-10-11-12	லக்கினம்	3-4-6-10-11-12

சந்திரன்பரல் 49-க்கு விவரம்

சூரியன்	3-6-7-8-10-11	குரு	1-4-7-8-10-11-12
சந்திரன்	1-3-6-7-10-11	சுக்கிரன்	3-4-5-7-9-10-11
குஜன்	2-3-5-6-9-10-11	சனி	3-5-6-11
புதன்	1-3-4-5-7-8-10-11	லக்கினம்	3-4-10-11

குஜன்பரல் 39-க்கு விவரம்

சூரியன்	3-5-6-10-11	குரு	6-10-11-12
சந்திரன்	3-6-11	சுக்கிரன்	6-8-11-12
குஜன்	1-2-4-7-8-10-11	சனி	1-4-7-8-9-10-11
புதன்	3-5-6-11	லக்கினம்	1-3-6-10-11

புதன்பரல் 54-க்கு விவரம்

சூரியன்	5-6-9-11-12	குரு	6-8-11-12
சந்திரன்	2-4-6-8-10-11	சுக்கிரன்	1-2-3-4-5-8-9-11
குஜன்	1-2-4-7-8-9-10-11	சனி	1-2-4-7-8-9-10-11
புதன்	1-3-5-6-9-10-11-12	லக்கினம்	1-2-4-6-8-10-11

குருபரல் 56-க்கு விவரம்

சூரியன்	1-2-3-4-7-8-9-10-11	குரு	1-2-3-4-7-8-10-11
சந்திரன்	2-5-7-9-11	சுக்கிரன்	2-5-6-9-10-11
குஜன்	1-2-4-7-8-10-11	சனி	3-5-6-12
புதன்	1-2-4-5-6-9-10-11	லக்கினம்	1-2-4-5-6-7-9-10-11

சுக்கிரன்பரல் 52-க்கு விவரம்

சூரியன்	8-11-12	குரு	5-8-9-10-11
சந்திரன்	1-2-3-4-5-8-9-11-12	சுக்கிரன்	1-2-3-4-5-8-9-10-11
குஜன்	3-5-6-9-11-12	சனி	3-4-5-8-9-10-11
புதன்	3-5-6-9-11	லக்கினம்	1-2-3-4-5-8-9-11

சனிபரல் 39-க்கு விவரம்

சூரியன்	1-2-4-7-8-10-11	குரு	5-6-11-12
சந்திரன்	3-6-11	சுக்கிரன்	6-11-12
குஜன்	3-5-6-10-11-12	சனி	3-5-6-11
புதன்	6-8-9-10-11-12	லக்கினம்	1-3-4-6-10-11

இவை மேற்படி எண்ணுள்ள ராசியில் ஓர் பரல் என்பது கருத்தாகும். இவ்வாறு சப்தகிரகங்களினது அஷ்டவற்கினது மேஷ முதல் மீனந்தம் வரையிலுமுள்ள ராசி எண்களை ஒவ்வொன்றாய்க் கூட்டி சர்வா அஷ்டவற்கம் காண்பதாகும்.

<table>
<tr><td>12-ம் மிடம் மீனம் - விரயம்-சயனம் - மோக்ஷம்- அனித்தியம் நோய்</td><td>மேஷலக்கினம் உதயம் - ஆண் ராசி சரராசி நாற்கால் ராசி கால் உதயம்பகற்குருகேந்திர</td><td>2-ம் மிடம் ரிஷபம் நேத்திரம்-வாக்கு-தனம்-முகம் - குடும்பம்</td><td>3-ம் மிடம் மிதுனம்-சகோதரம் - வெற்றி கேள்வி - காதுஅடுமை</td></tr>
<tr><td>11-ம் இடம் கும்பம் சிரேஷ்டம் ப்ராதுர் இலாபம் இஷ்டம்</td><td colspan="2" rowspan="2">1-வது
மேஷ லக்கினமானல் இந்தச் சக்காத்தைக் கொண்டு இராசி விவரம் அறிந்துக் கொள்ளவும்</td><td>4-ம் மிடம் கடகம் - கேந்திரம்-தாயார், கல்வி, பூமி-பந்து-சுகம், வியாபாரம்</td></tr>
<tr><td>10-ம் மிடம் மகரம் - கருமம் ஜீவனம்-கீர்த்தி கேந்திரம் ஆதாரம்</td><td>5-ம் மிடம் சிங்கம் புதல்வர், மாதுலன் பிதா ஞானம் - புண்ணியம்</td></tr>
<tr><td>9-ம் மிடம் தனுசு - பிதா தருமம் பிரபுத்துவம் - பாக்கியம்-குரு</td><td>8-மிடம் விருச்சிகம் - ஆயுள், தீர்க்க வியாதி, அபமிருத்து</td><td>7-ம் மிடம் துலாம் களத்திரம்-காமம் - மாரகம் - நித்திரை, கேந்திரம்</td><td>6-ம் மிடம் கன்னி-ரோகம் சத்துருசோரம் சிறை-வழக்கு</td></tr>
</table>

முதலாவது

இலக்கினபாவ பலன்

ஆதித்தன் ரிஷபத்திலாதல் சிம்பத்திலாதல் நிற்க, மற்ற கோள்கள் உபயராசியிலும், கடகத்திலும் வலுத்துநிற்க, குழவி இரண்டென்று அறியவும். அங்காரகனுக்கு 8-மிடத்தில் ஆதித்தன் நிற்க, மற்றக்கோள்கள் சரராசியில் நிற்க, ஒருபலனுமில்லையென்று அறியவும்.

சந்திரன் பாவராசியில் நிற்க, செவ்வாய் திரிகோணமேற, சந்திரனுக்கு 2-மிடத்திலும், 12-மிடத்திலும் சுபக்கிரகங்கள் நிற்க அப்போது ஜெனித்த குழவியோடுகூட பாம்பு பிறக்கும். அல்லது பாம்பாகிலும் பிறக்குமென்று அறியவும்.

4-மிடத்தோனும், பாக்கியாதிபதியுங்கூடி லக்கினத்தில் நிற்க, சுபக்கிரகங்கள் பார்க்கப் பிறந்தவன் இராஜபூஜிதன். சனி 1-மிடம் நிற்க, அங்காரகன் 7-மிடம் நிற்க, சுக்கிரன்-சந்திரன்-புதன் இவர்கள் வியத்தானத்தில் நிற்கப் பிறந்தவன் தகப்பனுடைய ஊரில் வாழ்ந்திருப்பானென்று அறியவும்.

இலக்கினத்தைச் சந்திரன் பாராதிருக்க, இராசியாதிபதி லக்கினத்திலும், 5-மிடத்திலும், சரராசி இவைகளில்நிற்க சராங்கிசம் பெற்றும் பிறந்தபாலன் தகப்பனைத் தேசாந்திரம் திரியவைப்பான் என்று அறியவும்.

சூரியனுக்கு 2-மிடத்தில் பாவக்கிரகங்கள் பாவராசியில் நிற்க, தந்தை தேசாந்திரியாவன். பாவக்கிரகங்கள் பாவராசியில் நின்று சூரியனுக்கு 5-7-9-மிடம் பாவர்நிற்க, தந்தை பரதேசத்தில் சிறைபடுவானென்று அறியவும்.

அங்காரகனுக்கு 11-மிடத்தில் சந்திரன் நிற்க, அப்போது ஜெனித்த குழவிக்கு ஈனமென்று அறியவும். சுபக்கிரகங்கள் பார்க்கில், குழந்தையை இன்னொருவர் வளர்ப்பார். பாபக்கிரகங்கள் பார்க்கில், குழவி சேதமாகும். பாக்கியாதிபதி பார்க்கில், தகப்பன் வாழும் மனையில் ஜெனனமாகுமென்று அறியவும்.

நீசஸ்தானத்தில் சுபக்கிரகங்கள்நின்று சந்திரனைப் பார்க்கில் மரத்தின்கீழ் ஜெனித்த பிள்ளையென்று அறியவும். பாபக்கிரகங்கள் நீச்சம்பெற்றுச் சந்திரனைக் காணில், நீசர் வீட்டில் ஜெனித்த பிள்ளையென்று அறியவும்.

சந்திரனாகிலும் சுபக்கிரகங்களாகிலும் இராசியிலிருக்கப் பார்க்கப் பிறந்தசேய் மனிதரில்லாவிடத்தில் ஜெனித்ததென்று அறியவும். சந்திரனுக்கு 7-மிடத்தில் சனிநிற்க, சனிக்கு 7-மிடத்தில் செவ்வாய் நிற்கப் பிறந்த குழந்தையால் தாயார் தகப்பனுக்கு அரிட்டமோடு வருத்தமுண்டாகுமென்று அறியவும்.

சனிக்கு 7-மிடத்தில் செவ்வாய்நிற்கப் பிறந்த குழவிக்கு ஈனமாம். இலக்கினாதி பாவரோடுங்கூடி 6-8-12 இவ்விடங்களில் நிற்கப் பிறந்தவன் ரோகவானாயிருப்பானென்று அறியவும். ஜென்மலக்கினாதிபதி பலனில்லாதிருந்தால் நோயுடையவனென்று அறியவும்.

6-மிடத்ததிபனும், 2-மிடத்ததிபனுங் கூடிநிற்க, அங்காரகன் 3-மிடம்நிற்க, இலக்கினத்திலேறக் காதறும். அல்லது செவியில் ரோகமுண்டாகும். புதன் வீட்டில் சனி நிற்கில் புஞ்சகனாகப் பிறப்பானென்று அறிந்துச்சொல்லவும்.

புதன்வீட்டில் ஜெனனமாக புதன் 6-மிடத்தில்நிற்க 6-மிடத்ததிபன இலக்கினத்தில்நிற்க நலிப்படுவன். சன்மாதியோடு புதனும், சனியுங்கூடில் வடிவனாகவும், குள்ளனாகவும் இருப்பானென்று அறியவும்.

மேஷத்திலாதல், விருச்சிகத்திலாதல், மங்கலனிருக்க, சனி இலக்கினத்தில் நிற்க, 3-மிடத்தில் சுக்கிரன்நிற்க, உடல் சிறுத்துக் குள்ளனாகயிருப்பான் அங்காரகன் உரையாகி சனி திரிகோணமேற சிறைபடுவான்.

1-7-8 இடத்தில் சந்திரன் பாவருடனேகூடி சுபக்கிரகங்கள் நோக்கற்று உயிரிலாதல், கேந்திரத்திலாதல் நிற்கப் பிறந்த குழந்தை குருடாகும். 12-6-8 உடையவர்கள் பாவர்களாகில் பிறந்த குழந்தை துர்ப்பலனுடையவனும். சன்மாதிபதி பாவியாகி பன்னிரண்டிலும் 6-8-ல் நிற்கில் நன்மையுண்டாமெனக் கூறுவார் மேலோர்.

பாவக்கிரகங்கள் ஜன்மத்திலும், ஜன்மாதி பலமன்றி 12-மிடத்திலும், கேந்திரகோணங்களு மேறில் கோபியாவன். ஜென்மத்தானின்ற வீட்டோன் 8-12-ல் மேவில் துர்ப்பலன். ஜென்மாதிபதி கன்மாதிபதி, 8-மிடத்தோன், சனி இவர்கள் திசைநடக்கும்போது துர்ப்பலன் நடக்கும். சனி சஞ்சாரத்தில் அரிட்டம் வருமென்று அறியும்படி முன்னோர்கள் கூறுகிறார்.

ஆதித்தன் 6-மிடத்தில்நிற்க, அவர்க் கேழாமிடத்தில் சனி-செவ்வாய்நிற்க, அரிட்டமாகும். சனி-அரவு ஜென்மத்திலும், அங்காரகன்-நாலிலும், சூரியன்-ஏழிலும், நாலிலும், வியத்திலும் நிற்க சந்திரனுக்கு இருபாலும், தீக்கிரகங்கள்நிற்க, குழவியோடு தாயாருக்கும் அரிட்டமாம். நற்கோள்கள் லக்கினத்திலும், 3-மிடத்தில் தீயோர்களும், சுபக்கிரகம் 12-ல் நிற்கிலும் தீதுண்டாகுமென்று அறியவும்.

இலக்கினதிபதி பாவனாகி விரயம் 6-8 இவைகளில் நிற்கில் நன்மையுண்டாம், சவுக்கியமுண்டாம். இலக்கினதி யுக்தம மத்திபனாகி 5-9-ல் நிற்கப் பலனுண்டாம்.

சூரியன் விரயம் 6-8-ல் நிற்க, உருவு குறைந்த அங்கத்தையுடையவனாகும். 2-9-11-ல் நிற்க, அல்லது சிங்கத்திலாதல், மேஷத்திலாதல் நிற்க, திரேகசவுந்திரியனவன். குழலழகன், சிவந்தவாயன் என்று அறியவும்.

ரிஷபம்-மேஷம்-கடகம் இம்மூன்றுராசியும் இலக்கினமாக அதில் இராகு சூழ்ந்திட உத்தமமென்று அறியவும்.

இலக்கினதிபதி 2-மிடம், 10-மிடம் நிற்க ஆகாவாம். இலாபாதிபதி 10-மிடம், 2-மிடம் நிற்க, அல்லது 4-5-ல் நிற்க சுகமுண்டாகுமென்று அறியவும்.

இலாபாதிபதி ஜென்மலக்கினத்திலாதல், சரராசியிலாதல் நிற்க, பாக்கியாதிபதி திசைநடக்க, அவர் உபையராசியில் நிற்க, 7-மிடத்தோன் 7-ல் நிற்க இம்மூவர் திசையில் வாதை செய்விக்கும். இம்மூவர் ஸ்தானத்தில் முதல்வர் நிற்கினுந் தீதாமென்று அறியவும்.

ஜெனனகாலத்தில் சூரியன் 8-மிடம் நிற்கில் சுரம் காணும். சந்திரன் நிற்கில் ஜலகண்டம்வரும். அங்காரகன் நிற்கில் ஆயுதத்தால் பீடையுண்டாம். புதன் நிற்கில் வியாதி. வியாழன் நிற்கில் மிருத்யு.

சுக்கிரன் நிற்கில் தரித்திரமாம். சனி நிற்கில் தாயாருக்குத் தோஷ முண்டாம். ஒருவரும் நிற்கலாகாது என்று கூறுகிறுர்.

இலக்கினதிபதி உச்சமாகி கேந்திரமேறி சுபக்கிரகங்களுடன் கூடிநிற்க பாவர் மனையிருந்துப்பார்த்திட ஜெனனமாவது நிச்சய மென்று அறியவும்.

ஜென்மாதிபதி திர லக்கினத்தும் அவையே அங்கிசமாகி கேந் திரமேற அவன் யிருக்குந்தலத்தில் வெகுபலன் கிடைக்கும். சுபவங் கிசம்பெற்று நிற்கில் அவன் சீவபரியந்தம் ஆபரணங்கள்பெற்று வாழ்வன் ஜென்மாதிபதிபலமற்று கேந்திரத்தில்நிற்க அதிககோப முடையவனுகி வியாதிபடுவனென்று அறியவும்.

ஜென்மாதிபதி 10-மிடத்திலிருக்க, பத்தாமிடத்ததிபன் பல வீனனுக வியத்திலும், 6-8-லும், சுபர்நோக்க நிற்கில் தத்து புத்திர னுவான், வயது பூரணமுடையவன். இலக்கினத்தில் பாவர்கள் நிற்க, ஜென்மாதிபதி பலவானுக நிற்கில் பிணிகொள்வன். சுபர் ஜன்மத் தைப்பார்க்கில், பிணிகொடுமை செய்யாதென்று அறியவும்.

புதன் பாவாங்கிசத்தில் நிற்கினும், உபயவங்கிசத்தில் நிற்கினும் இரட்டைப்பிள்ளை பெறும். தனுசுலக்கினமாகிப் பிற்பாதியாகில், அதில் நின்றவர் சிங்காசனமேற, புதனும்-சனியும் இலக்கினத்தைப் பார்க்க, கருப்பையோடுகூட குழவியொன்று ஜெனிக்குமென்று அறியவும்.

ஜென்மலக்கினத்தில் சூரியன்-புதன் - சுக்கிரன்-குரு இவர்கள் நிற்கில் அப்போது ஜெனித்த குழந்தைக்கு வலதுபக்கத்தில் மச்சமுண் டாம். அங்காரகன்-சனி-சந்திரன் இவர்கள் நிற்கில் இடதுபக்கத்தில் மருவுண்டென்று அறியவும். சூரியனுக்கு வயிற்றிலும், சந்திரனுக் குச் சிரசிலும், செவ்வாய்க்கு இடுப்பிலும், புதனுக்குப் பக்கத்திலும், வியாழனுக்கு முகத்திலும், வெள்ளிக்குத் துடையிலும், சனிக்குக் காலிலும் இவ்விதமாகக் கோள்நிலையைக்கண்டு மருவின் இருப்பிடங் கண்டு சொல்லவும்.

சூரியன் தனுசில் நிற்கப் பிறந்தவன்வார்த்தை பிரசண்டனுயும், சூரனுமாயுமிருப்பன். ஒருநாசியீனன், தனமில்லாதவன். சிங்கத் தில் நிற்க, பிதுர்த்துவன் மேடத்தில் நிற்கப் பிறந்தவன் கண்டமழ கன், தனவான். சந்திரன்வீட்டில் சூரியன் நிற்கப் பிறந்தவன் விழி யுன்னதமாகயிருக்கும். திரவியவான்-துலாம் இலக்கினமாகச் சூரியன் நிற்கப் பிறந்தவன் திரவியவான், கண்ணில்லாதவனும்.

மேஷம்-ரிஷபம்-சிங்கம் இவை லக்கினமாகி, சனியும் - செவ்வா யும் கூடிப்பார்க்கில், பிறந்தபிள்ளைக்குக் கொடி இரண்டுண்டாம். செவ்வாய் ஒருவன் பார்க்கில், கொடிசுற்றிப்பிறக்கும். சனிபார்க்கில் கருப்புக்கொடி சுற்றிப் பிறக்குமென்று அறியவும்.

பாம்பினோடு ரவிகூடிநிற்கில் கொடி தலையில் சுற்றிப்பிறக்கும். ஜென்மாதிபதியும், அட்டமாதிபதியும் நெருங்கில், ரோகவானும். செவ்வாயும்-சனியும் ஜென்மத்தைப்பற்றி நிற்கில் கல்லடிப்படுவன். விழியுரக்கமுடையவனாக யிருப்பானென்று அறியவும்.

ஜென்மம் திரராசியாகி, அதில் ஜென்மாதிபதி நிற்கப் பிறந்தவன் அந்த ஊருக்குக் கிராமாதிபதியாவன். அட்டமாதிபதி திரராசியில் நிற்கப் பிறந்தவன் மரிப்பன். ஜென்மம் சரமாகில் தேசசஞ்சாரந் திரிகுவனென்று அறியவும்.

ஜென்மம் உபையராசியாகில், சிலநாள் தேசாந்திரியாவன். சூரியன் ஜென்மாதிபதியாகில், மலையிடத்துச் சஞ்சாரஞ் செய்குவன், சிரசுநோய்க் கொஞ்சமுள்ளவன். செவ்வாய் ஜன்மாதிபதியாகில், ஆயுதத்தாலும், அக்கினியாலும் ஒருநோய்க்காட்டுமென்று அறியவும்.

புதன் ஜென்மாதிபதியாகப் பிறந்தவன் வித்தையும், கணிதமும், வியாபாரமும் பலிதமுடையவனாவான். வியாழன்-வெள்ளி வீடாகில் புத்தியோடு தனவானும். தான்பிறந்த யிடம்விட்டு நீங்கான், சுப காரியங்களுக்கு உதவிவானாக யிருப்பானென்று அறியவும்.

சந்திரன் ஜென்மாதிபதியாகப் பிறந்தவன் சரீரகாந்தியுள்ளவன், சுகவான், நாணற்புல்லை விற்றுண்பான். சந்திரன் இலக்கினத்தைப் பார்க்கில் தகப்பன் அரசிலிருக்க ஜனித்தவனென்று அறியவும். சரத்தில் சந்திரன் நிற்கப் பிறந்தவன் தந்தையை வருவிப்பானென்று அறியவும்.

சுக்கிரனுக்கும், புதனுக்கும் நடுவில் சந்திரன் நிற்க தந்தை அருகேயிருந்திடுவன். சூரியன் சரத்திலும், சந்திரன் பத்திலுமிருக்க பிதாவுடைய தலத்திற் பிறந்தவனென்று அறியவும். குரு 6-லும், சனி ஜென்மத்திலும், செவ்வாய் 7-லும் நிற்க தந்தை தேசமென்று அறியவும்.

மிதுனம்-கன்னி-துலாம்-கும்பம் இவை லக்கினமாகி, அங்காரகன் பார்க்க ஜனித்தவன் வறுமையுறுவன். சனி - செவ்வாய்க்கூடி திரிகோணத்தில் சந்திரனுடன் நிற்கப் பிறந்த குழவியைத் தாயார் எறிந்துவிடுவாள். குருபார்க்கில் கைக்கொள்வாளென்று அறியவும்.

சந்திரன் பாபர்வீடேறி ஜென்மத்தில் செவ்வாய்நின்று, சனி 7-ல் நிற்க, வியாழன்நோக்க ஒருவர்யெடுத்து வளர்க்கப்படுவன். பாம்பு-புதன்-குரு-சந்திரன் இவர்கள் சேர்ந்து ஜென்மத்திலிருக்கப் பிறந்தபிள்ளை வம்மிசத்தைக் கெடுப்பானென்று அறியவும்.

இலக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும் தூமன் யிருந்திட வாழ்நாள் குறைந்திடும், புகழ்நாசமாகும். சுக்கிரன் ப்ரிவேடந்தங்க

மதிபோகும். புதன் தனுசில்நிற்க குலங்கள் நசியும். குஜன்மேவில் தனம்போமென்று அறியவும்.

இலக்கினம் மீனம்-கடகமாகி பிறந்தவர்களுக்குத் திசைபலன் பார்க்கும்போது பாம்பின்திசையில் பாக்கியமோடு சோபனுதி சுப பலன் பெறுவரென்று அறியவும்.

இலக்கினம் மகரம் கன்னியாகப் பிறந்தவன் தனக்கு திசை பார்க்கில், கேதுதிசை வரும்போது எல்லாம் இராஜசமானமான யோகம் வரும்.

ஜென்மம் சரராசியாகி சரத்தில் சூரியன் நிற்கப் பார்க்கப்பிறந்த வன் தூலசரீரனும். இலக்கினம் சரமாக அயல்வீட்டோன் சரத்தில் நிற்க தன் தேசத்தைவிட்டு அயல்தேசந் திரிவான்.

இலக்கின பாவபலன்.

முற்றிற்று.

11-ம் இடம் மீனம் சிரேஷ்டம் ப்ராதுர் - இலாபம் - இஷ்டம்	12-ம் மிடம் மேஷம்-விரயம் சயனம் - மோக்ஷம் - அனித்தியம்-நோய்	ரிஷபலக்னம் உதய பெண்ராசி ஸ்திராசி- நாற்கால் ராசி கால் உதயம் பகற்குருடு கேந்திரம்	2-ம் மிடம் மிதுனம்நேத்திரம்-வாக்கு-தனம்-முகம் - குடும்பம்
10-ம் மிடம் கும்பம் கேந்திரம் கருமம் சீவனம் - கீர்த்தி ஆதாரம்	**2-வது ரிஷப லக்கினமானல் இந்தச் சக்கரத்தைக் கொண்டு இராசி விவரம் அறிந்துக் கொள்ளவும்**		3-ம் மிடம் கடகம் - சகோதரம் - வெற்றி கேள்வி - காதுஅடுமை
9-ம் மிடம் மகரம் - பிதா- தருமம் பிரபுத்துவம் - பாக்கியம்-குரு			4-ம் மிடம் சிங்கம்-கோத்திரம்-தாயார்- கல்வி, பூமி-பந்து-சுகம், வியாபாரம்
8-ம் மிடம் தனுசு - ஆயுள் தீர்க்க-வியாதி - அபமிருத்து	7-மிடம் விருச்சிகம் - கேந்திரம்- களத்திரம்- காமம்-மாரகம் - நித்திரை	6-ம் மிடம் துலாம் - ரோகம்- சத்துருசோரம் சிறை-வழக்கு	5-ம் மிடம் கன்னி புதல்வர் மாதுலன் பிதா ஞானம் - புண்ணியம்

இரண்டாம்பாவம்

நேத்திரபலன்.

நேத்திரஸ்தானதிபதி தீக்கோளாகி நிற்க, 8-மிடத்தில் சனியும் சந்திரனும் கூடிநிற்க, 6-மிடத்தில் சூரியன் நிற்கப் பிறந்த பிள்ளைக்குப் பூனைக்கண்ணும். நேத்திரஸ்தானதிபதி பாவனுய் இலக்கினதிபதியைமேவி 6-8-ல் நிற்கப் பிறந்தசேய் குருடாகுமென்று அறியவும்.

சுக்கிரன் நேத்திராதிபதியாகத் தோன்றி 8-மிடத்தில் நிற்க, சூரியன் 6-மிடத்தில் நிற்கப் பிறந்தோனுக்கு பிற்காலத்தில் கண்ணேய் உண்டாம். மேஷத்தில்-ரிஷபத்தில் சனியாகிலும், செவ்வாயாகிலும் நிற்க ஊனமாகக் கொடிசுற்றிக்கொண்டு பிறக்குமென்று அறியவும்.

இலக்கினதிபதியோடு 2-மிடத்ததிபனும் சுக்கிரனுங்கூட, 3-மிடத்தில் சூரியன் நிற்க பிறந்த சேய்க்குக் கண்ணிராது. சூரியனில்லாமல் சந்திரன் நிற்கில் மாலைக்கண்ணாகுமென்று மேலோர் கூறுகின்றனர்.

நேத்திராதிபதி சுக்கிரனும், லக்கினாதிபதியுங்கூடி 3-மிடத்தில் நிற்க நேத்திரநோயுண்டாம். இலக்கினாதிபதியும் 2-மிடத்ததிபனும், சுக்கிரனும் ஓரிடத்தில் நிற்கில் அந்தகனாவானென்று அறியவும்.

நேத்திரஸ்தானாதிபதி சுக்கிரனாகி, ஜென்மாதிபதியைக்கூடி, 3-ல் நிற்க நேத்திரரோகம் நேத்திராதி சந்திரனாகி, சுக்கிரனுடனே கூடிநின்றால் நேத்திரம் ஒளிகொடாது. கடகம் இலக்கினமாக நேத்திராதிபதி சந்திரனாகிச் சுக்கிரனுடன் கூடிநின்றால் பிறவிக் குருடனாவன்.

சிங்கம் நேத்திரஸ்தானமாக சூரியனும், சுக்கிரனுங்கூடி சிங்கத்தில் நிற்க, அவரோடு எந்தஸ்தானாதிபதியேனும் காரகராக வந்தாலும் நேத்திரநோயுண்டாம். தனதுபதியாகில் நன்மை. சந்திரன் வியஸ்தானத்தில் நிற்க ஒருகண் ஹீனம். கூட சூரியன்கூடில் 2-கண்ணும் போமென்று அறியவும்.

இலக்கினத்தில் செவ்வாய்நிற்க, அஷ்டமாதிபதி நேத்திரஸ்தானத்தி லிருக்க, அஷ்டமத்தில் பாவர்கள் நிற்க நேத்திரநோயுண்டாம்.

சுக்கிரன்-சன்மாதிபதி-சந்திரன் இவர்கள்கூடி 6-8-லும், வியத்திலும் பலமற்று நிற்கில் மாலைக்கண்ணாகும். சூரியனும், சன்மாதிபதியும், 2-மிடத்தோனும், சுக்கிரனும் ஒன்றாய்க்கூடி வியஸ்தானத்திலும், 6-8-லும் நிற்க பிறவிக்குருடனாகும்.

நேத்திராதிபரைக்கொண்டு பார்வைபலன் சொல்லவேண்டில், செவ்வாயாகில் மேல்பார்வையாம். சந்திரனுங் குருவுமாகில் சமபார்வையாம். சுக்கிரன் - புதனாகில் பக்கப்பார்வையாம். சனி - இராகுவாகில் கீழ்ப்பார்வை யுடையவன்.

ஜென்மாதிபதியை சனிபார்க்க கண்ணோயாம். 2-மிடத்தோனுடன் - சூரியன் கூடிநிற்க, குளிகனோடு - சனியும் நின்று பார்க்க, கண்ணோயாம். அவ்வீடே சராசியாகிப் பாவர்கள்காணில், அவன் கண் துடிக்குமென்று அறியவும்.

சூரியன் - பாவருடன்கூடிப் பலமற்று வியஸ்தானத்திலிருக்க, வலதுகண்போகும். செவ்வாய்ப் பலமற்று வியத்தி லிருக்க, இடது கண்போகும். சூரியனும் - செவ்வாயும் வியஸ்தானத்தில்கூடி நிற்க, இரண்டுகண்ணுந் தெரியாது.

சனியுஞ் செவ்வாயுங்கூடி 2-12-ல் நிற்கில், விழிக்கூனமாம். சூரியனுஞ் சந்திரனும் வியத்தில் நிற்க, விழிநோயுண்டாம். பிறருக்குச் சொல்ல வேண்டில், சூரியன்-அங்காரகன் - சந்திரன்-வியாழன்-சுக்கிரன் இவர்கள் ஸ்தானத்தைக்கொண்டு சொல்லவேண்டும்.

சூரியன்-சுக்கிரன் பலனில்லாதிருக்க, அவருடனே சன்மாதிபன்கூடில், பிறவிக்குருடனும். 5-மிடத்தோனும், 6-மிடத்தோனும்

சன்மத்திலிருக்க, சுக்கிரன் 2-மிடத்தோனைக்கூடி நிற்க, இரண்டு கண்ணும் பிடுங்கப்படும்.

சூரியன்-செவ்வாய்-சந்திரன்-சனி இவர்கள் 2-6-8-லும், விய ஸ்தானத்திலும் நிற்க கண்ரோகமுண்டாம். 2-12-ல் சந்திரனும்-சூரியனுங்கூடிநிற்க, 2-8-ல் பாவக்கிரகங்கள்நிற்க, கண்ணோயுண்டாம்.

வாக்குஸ்தான பலன்

குடும்பஸ்தானாதிபதியோடு புதன்கூடி, 6-மிடத்தில் நிற்கப் பிறந்த குழவி ஊமையாகும். 3-ஆமிடத்தோனும், இலக்கினாதிபதி யுங்கூடில், ஊமையாகுமென்று அறியவும்.

வாக்குஸ்தானாதிபதியோடு - புதன்கூடி கர்மம் 3-6 இவ்விடங் களில்நிற்க ஊமையாம். இவருடன் களத்திராதிபதி தங்கள் ஸ்தா னங்களில் சார்ந்து காரகராகிவந்தாலும் ஊமையாம். இவர்கள் தன் பதியில் உச்சமாகிநிற்கில், வாக்கு ஊனமாய் மொழியுண்டாமென்று அறியவும்.

மாதுலனோடு வாக்குஸ்தானாதிபதிகூடி 6-8 வியத்தில் நிற்க, ஊமையாம். தந்தை-தாயார் - ஸ்தானத்திலும் இவ்வாறிருக்க, ஊமை யாகுமென்று அறியவும். (மாதுலனென்பது-புதன்.)

இலக்கினாதிபதி-சுக்கிரனுடன்கூடி 6-8 வியத்தில் நிற்க, ஊமை யாம். 2 - மிடத்தோன் கூடினும் ஊமையாம். மற்றக் கிரகங்கள் கூடினும் ஊமையாகத் திரிவானென்று அறியவும்.

வித்தியா பலன்

வியாழனும் - சுக்கிரனும்கூடி 2-ல் நின்று புதன் கேந்திரமுற திரிகோணமேறில், வித்தை பலிதமுண்டாம். இவர்கள் 8-6-ல் நிற்க, வித்தைப்பலியாதாம். புதன் உச்சமாக இருக்கில் வித்தை பலிக்கு மென்று அறியவும்.

புதனும் 7-மிடத்ததிபனும், வியாழனுங்கூடி கேந்திர திரி கோணம் பெறினும், அல்லது தனது வீடாயினும், 2-ம் வீடாயினும் பகையில்லாதிருக்கில் திடமுள்ள வித்துவானுவானென்று அறியவும்.

புதன் - கேந்திரத்தில் இருக்க, 2-மிடத்தோன் உச்சமாக சுக் கிரன்-உபயராசிமேவ, 3-மிடத்தில் சுபக்கிரகங்கள் நிற்க, சுக்கிரன்-உச்சமாக, பிறந்தபிள்ளை உலகமெங்கும் புகழ சோதிடத்தில் வல்லவ னுவானென்று கூறுகின்றனர்.

2-மிடத்தோனும் வியாழன்-சுக்கிரன் இவர்கள் மூலத்திரிகோண உச்சமாய் நிற்க, அவர்களை பாவர்நோக்காதிருக்க சேராதிருக்க தர்க்க சாஸ்திரவல்லவனுவான்.

நலம்பெற்ற 2-மிடத்தோனே குலஞ்சிறந்த குரு பலவானுகிநிற்க, அவர்களே பலம்சிறந்த சுக்கிரன் பார்க்க, பிறந்த குழவி நல்ல சாதுரிய மான இலக்கணம் பேசுவானென்று அறியவும்

பிறைக்கு இணையாகச்சேர்ந்து திரிகோண கேந்திரத்தில் புதன் நிற்கில், தமிழ்வித்தைபெருக ஓதுவன். உயிரில் - செவ்வாய் ஒருவன் நிற்கில், தெலுங்கு வித்வானுவான். கருங்கோள் நிற்கில். துலுக்கர் ஆரியர்பாஷை ஓதுவன்; நிபுணவித்வானுவான். சுக்கிரன்-வியாழன் இவர்கள் மேவில், சாஸ்திரங்களுக்கு வல்லவனுய், மதியோடு வித்து வானுவானென்று அறியவும்.

2-மிடத்தோனும் புதனும் உச்சமாய் நிற்க, ஜென்மத்தில் சூரி யன் நிற்க, சனி 8-மிடத்தில் நிற்க, பிறந்த குழவி கணிதம் ஓதுவன். இவனுக்கு கோபுராங்கிசத்தில் சனிநிற்க, அங்காரகன் அங்கிசத்தில் வியாழன் நிற்க, மறை ஓதுவன். 2-மிடத்தோன் சூரியனுக, அவரை புதன்பார்க்க, தர்க்கசாஸ்திர வல்லவனுவானென்று அறியவும்.

ஜென்மலக்கினத்தில் சுக்கிரனும் வியாழனும் இவர்கள் கலந்து நிற்க, குருவும் சூரியனும் கலந்து சிங்காங்கிசத்தில் யேறி நிற்க, சுக்கிரன் கடகவாங்கிசமேற, இந்தப்படி சனி அண்டியிருக்க, பிறந் தவன் ஆறுசாஸ்திரமுங்கற்று, அவனியெங்கும் கீர்த்தியுடையவனுக யிருப்பானென்று அறியவும்.

ஜென்மலக்கினத்தில் சனி சூரியன் குரு இவர்கள் நிற்கில், தன முடையவனுய்ப் புலவனுவான். சூரியன்-சுக்கிரன்-புதன்-சந்திரன்-சனி - வியாழன் இவர்கள் ஒருவீட்டில்கூடி நிற்கில் பிறந்த குழவி பிரபலவித்துவானுமாய், புயவலிமையுடையவனுய், சாந்தகுணத்தோடு வாழ்வானென்று அறியவும்.

தனபலன்

ஜென்மாதிபதிக்கு 2 - மிடத்தோர் நல்லவராக, 3-மிடத்தில் தீயோராக, 4-மிடத்தில் நல்லோராக, நன்மார்க்கம்பெற்று நிற்கப் பிறந்தவன் தனவானும். சன்மார்க்கமுடன் தனஸ்தானத்தைப் பாக்கி யாதிபதி இலாபாதிபதி பார்க்கில் நிற்கில் பிறந்த குழவி குபேரனைப் போல் குறைவில்லாத தனவானுக வாழ்வானென்று அறியவும்.

ஜாதகன் லக்கின முதற்கொண்டு இலக்கினுதிபதி யிருக்கும் வீடளவும் எண்ணிக் கண்ட தொகையை இலக்கினுதிபதியைத் தொட்டு யெண்ணிவருகையில் பாவர்வீடாகில் தரித்திரயோகமென்று அறியவும். சுபர்கள் வீடாகில் தனவானுவான். ஜென்மலக்கினத் திற்கு 2-5-12 இவ்விடங்கள் புனிதர்மனேயாகில் தனவானென்று அறியவும்.

ஜென்மத்தில் சனியும், 4-மிடத்தில் சந்திரனும், 7-மிடத்தில் அங்காரகனும், கும்பத்தில் சூரியனும் நிற்க, புதனும் சுக்கிரனுங்கூடி

ஒருவீட்டில் நிற்க, பிறந்த குழவி பூலோக வாசனைப்போல் தனவானாய் வாழ்வானென்று அறியவும்.

3-6-8-12-ல் பாவக்கிரகங்களிருந்து, இலக்கினத்தைப் பாரா திருக்கப் பிறந்த குழவிக்குச் செல்வமுண்டாம். சுபக்கிரகங்கள் நால்வரும் நீசராகி நீசர்மனையில் இருக்கில், தனவானுவானென்று அறியவும்.

சந்திரன் இலக்கினத்திலும், இலக்கினாதிபதி உச்சத்திலும்நிற்க, அல்லது நீசர்மனையேற தனவானும். சந்திரனோடு உச்சம்பெற்ற நற்கோள்கள் சேர்ந்திருக்க குடும்பஸ்தான முச்சமாகி சுபக்கிரகங்கள் நிற்க, பிறந்த குழவிக்குச் செல்வமுண்டென அறியவும்.

10-மிடத்ததிபனும்-ஜென்மாதிபனும்-குடும்பஸ்தானமாகி சுக்கிர அங்கிசமேற செல்வமுண்டாம். கேந்திரத்தில் சுபர்கள் காணில் சிறு வயதில் செல்வமுண்டென அறியவும்.

ஜென்மாதிபதியும், 3-மிடத்தோனும், பலவாகவிருக்க, புருஷக்கோள்நோக்க, 3-மிடத்தோனைசேர-காண, அண்ணன்-தாய்-தம்பி-இவர்கள் பரமாயிருந்து தனம் வருமென்று அறியவும்.

இலக்கினத்திற்கும் சந்திரனிருக்கும் வீட்டிற்கும் இருபுறத்தி லும் நல்லோர் நிற்கில் தனவானுகுவன். ஒரு வீட்டிலிருக்கில் பாதி பலனும். ஒருபுறத்தில் நிற்கில் கால்பலன் தருமென்று அறியவும்.

3-மிடத்தோன் 9-மிடத்தானோடுகூட இருவரும் நன்மையாக விருக்கப் பிறந்த குழவிக்குத் தமயனுடைய பொருள் கிடைக்குமென்று அறியவும்.

கிரகங்களைக்கொண்டு பொருள்வரும் விவரம் அறியவேண்டில், தாயார் சொத்தாகில் சந்திரன் செவ்வாயென்றறியவும். புதனுகில் பகைஞர் பொருள் கிடைக்கும். சூரியனுகில்-நல்லவுறவோர் பொருள் கிடைக்கும். சுக்கிரனுகில் - மனைவியால் பொருள் கிடைக்கும். சனியாகில் - அடிமையுள்ளோர் பொருள் கிடைக்கும்; சேவகாள் நிதியும் வந்தடையும். இந்தப்பலன் கூறுவது எவ்விதமெனில் ஜென்மலக்கினமும் சந்திரலக்கினமும் 10-மிடமுங்கொண்டு ஸ்தானம் விட்டு ஸ்தான மாறும் கிரகங்களைக்கொண்டு சொல்லவேண்டும்.

இலாபாதிபதி 9-மிடத்தோனைக்கூடிநிற்க, பழைய தனங்கிடைக்கும். 10-மிடத்தோன் பாக்கிய ஸ்தானத்தில் நிற்கினும் நற்கோளாகினும், உத்தமகிரகங்களின் மனையில் தருமவானுயிருக்கினும், பிரயாசைப்படாமல் நிதிதேடுவான். வியாழன் 2-மிடம் இருக்க பொருள் கிடைக்கும். 10-மிடத்தோன் மெலிவுற்று இருக்கில், ஒருவரைச் சேவித்துத் தேடிய பொருளும் அற்பமாகுமென்று அறியவும்.

10-மிடத்தோன் உத்தமனுகி பொருந்தி 10-ல் இருக்க, யாகாதி கருமங்கள் செய்வன். அருளோடு பொருள்தேட சுகித்திருப்பன்.

3-மிடத்தோன் பலவானாக ஜென்மாதிபதி துர்ப்பலவானாக லாபாதிபதி 3-மிடம் மருவ, உடன்பிறந்தார் பொருள்வந்து சேரும். கர்மஸ்தானத்திலும், சந்திரலக்கினத்திலும் எவர்கள் நின்றார்களோ, அந்த திக்கிற்கு உரியவர்களுடைய தனங்கிடைக்குமென்று அறியவும்.

தனஞ்சேருவது 9-மிடத்தோன் திசையில், 10-மிடத்தோன் புசிப்பில், அப்போது நடக்கும் கோசாரத்தில், 4-மிடத்தோன் 10-மிடத்திலிருக்க, 10-மிடத்தோன் 4-மிடத்திலும், அல்லது அங்காரகனுடைய கேந்திரத்திலேனும் கலந்து நிற்கப் பிறந்தோனுக்குப் புராதனமாகக் காணி மனையுடன் 10-மிடத்ததிபன் நிற்கும் திக்கின் முதற்கொண்டு க்ஷேமமாக வாழ்வானென்று அறியவும்.

ரிஷபத்தில்-சந்திரன், விருச்சிகத்தில்-சூரியன்நிற்க, தனவானும். சுக்கிரன் வீட்டில்-வியாழன்நிற்க, மகரத்தில்-குஜன்நிற்க, குருவோடு-சந்திரன்கூட, புதனும்-குருவும்கூடி இலக்கினத்தில் நிற்க கூட சுக்கிரனுமிருக்க, நிறைந்த தனவானாய்க் கல்விக்காசனுமிருப்பான். சுக்கிரன்-உச்சம்பெற, வியாழன்-லக்கினத்திலிருக்க, சந்திரனைப் பாவர்கள் பார்க்க, புகழோடு தனம் படைப்பானெனக் கூறுகின்றனர்.

9-மிடத்ததிபன் 6-மிடத்தில் நிற்க, மாதுலனுடைய பொருள் வந்து சேரும். 9-மிடத்ததிபன் குருவாகி, 6-மிடம் நிற்க மாமியார் கையில் இசைந்தபொருள் சேரும். 5-மிடத்ததிபன் சுபனாய் பாக்கியஸ்தானத்தில் நிற்க, தன் புத்திரிக்கு மணஞ்சூட்டிவைத்து அந்த மருமகனால் தேடிய பொருள்களெல்லாம் தன் வசமாகி வாழ்வானென்று அறியவும்.

வியாழனும், 10-மிடத்ததிபனும், சுபனாகிநிற்க, இலக்கினத்ததிபனுக்குச் சூரியன் மித்துருவாய்க் கூடப்பிறந்தானுக்கு, பிதாவினுடைய பொருள் கிடைக்கும். சந்திரன்கூடத் தாயாருடைய பொருள் கிடைக்கும். சனிகூட தன்பொருள் கிடைக்கும். புதன்கூடில் மித்துருதனங் கிடைக்கும். வியாழன்கூடில் பிறருடைய பொருள் கிடைக்கும். சுக்கிரன் கூடில் தெரிவையென்னும் ஸ்திரீகளின் பொருள் கிடைக்கும். சனி 6-ல் நிற்க பொருள் கிடைக்கும். இராகு-கேதுகள் கூடில் ஈனத்தொழில்செய்து பொருள் சேர்ப்பானென்று அறியவும்.

10-மிடத்ததிபன் சுபக்கோளாயிருக்க, 10-ம் வீட்டில் சூரியனும் சந்திரனும் அன்றி, வியாழன் நீச்சமாகித் தீயோர் வீட்டிலிருக்கப் பிறந்தவன், திரவியமில்லாதவனும். 10-மிடத்ததிபன், 4-மிடம், கல்வியினால் திரவியங் தேடுவான்.

2-மிடத்திலும் கேந்திரத்திலும் சூரியன் நிற்க, 2-மிடத்தோன் 6-8-விபத்தில் நிற்கப் பிறந்தானுக்கு, தந்தையுடைய தனமில்லையென்று அறியவும்.

இலக்கினத்துக்கு அதிபனுக்கு, 2-ல் சனிநிற்கில், சந்திரனுக்கு 4-மிடத்ததிபன் சுபக்கிரகங்களுடன் கூடி கேந்திரத்திலிருக்கப் பிறந்

தவனுடைய தந்தையின் பொருளை வேற்ருேர் கைக்கொள்வர். தன்னுடைய அமிசையினுல் பொருள்தேடி பாக்கியவானுய் அரசர்களின் உதவிபெற்று வாழ்வானென்று கூறுகிருர்.

புதனும், 4-மிடத்ததிபனும், மகரத்தில் நிற்க, கேந்திரத்தில் சூரியன்நிற்க, சூரியனுக்கு 4-மிடத்தில் சுபர்கள் நிற்க பிறந்தவனுக்கு பிதாவின் சொத்தில் ஒருகாசும் கிடையாமல் பரதேசம் திரிவானென்று முன்னேர் கூறுகிருர்.

2-மிடத்ததிபன் மிகுத்திருந்து கேந்திரமேறி தனஸ்தானத் தானும் குலாவி உச்சமாகியிருக்கத் தனபதியாய் விளங்கி அறிவுள்ளோனுய்ப் பொருள்தேடி வாழ்வானென்று கூறுகிருர்.

2-மிடத்ததிபன் இலாபத்திலிருக்க, பாக்கியாதிபதி 2-மிடத்திலிருக்கப் பிறந்தவன் நல்ல தருமகுணமுடையவனுய் நான்குலக்ஷம் பொன்தேடி அல்லலில்லாமல் வாழ்வானென்று கூறுகிருர்.

தனுசு லக்கினமாகி அதில் வியாழன் நிற்க, துலாத்தில் சனியுச்சமாக, இலாபாதிபதி 4-மிடத்தில் நிற்கப் பிறந்தவன் திரிந்து பொன்தேடி நீதிவழுவாமல் பலரையும் இரக்ஷித்து கோடிபொன் தேடுவானென்று கூறுகிருர்.

தனுசு-கும்பம்-மீனம் - கன்னி-ரிஷபம் இவைகளுள் நற்கோள் நிற்க, தேவயோகம்பெற்று நவகோடிச் செம்பொன்தேடி, இராஜ்யம் ஆள்வன். இலக்கினம் தனுசாகப் பிறந்தவனென்று முன்னேர் கூறுகிருர்.

திரிகோணத்தில் சுக்கிரன்கூட இலாபாதிபதி சுபவர்க்கமேறப் பிறந்தான், உலகில் கோடிபொன்தேடி வாழ்வானென்று முன்னேர் கூறுகின்றனர்.

இரண்டாம் பாவபலன்

முற்றிற்று.

10-ம் மிடம் மீனம் கேந்திரம் கருமம் சீவனம் - கீர்த்தி ஆதாரம்	11-ம் இடம் மேஷம் சிரேஷ்டப் பிராதுர் இலாபம் · இஷ்டம்	12-ம் மிடம் ரிஷபம்-விரயம் சயனம் - மோக்ஷம் - அனித்தியம்-நோய்	மிதுன லக்னம் உதய ஆண்ராசி உபயராசி - இருகால் ராசி தலை உதயம் ராகு குருடு கேந்திரம்
9-ம் மிட்ம் கும்பம் - பிதா-தருமம் பிரபுத்துவம் - பாக்கியம்-குரு	3-வது மிதுனலக்கினமானால் இந்தச் சக்கரத்தைக் கொண்டு இராசி விவரம் அறிந்துக் கொள்ளவும்		2-ம் மிடம் கடகம் நேத்திரம்-வாக்கு-தனம்-முகம் - குடும்பம்
8-ம் மிடம் மகரம் - ஆயுள் வியாதி - அபமிருத்து			3-ம் மிடம் சிங்கம் - சகோதரம் - வெற்றி கேள்வி - காது அடிமை
7-மிடம் தனுசு - கேந்திரம்- களத்திரம்-காமம்-மாரகம் - நித்திரை	6-ம் மிடம் விருச்சிகம்-ரோகம்-சத்துருசோரம் சிறை-வழக்கு	5-ம் மிடம் துலாம்·புதல்வர் மாதுலன் பிதா ஞானம் - புண்ணியம்	4-ம் மிடம் கன்னி-கேந்திரம்-தாயார்-கல்வி, பூமி-பந்து-சுகம், வியாபாரம்

மூன்றும்பாவம்

ச கோ த ர ப ல ன்

1 சகோதரத்தானம் என்பது மூன்றுமிடமாகும். மூன்றுமிடத்தை ஏன் சகோதரத்தானம் எனக் கூறினார் என்பதைச் சாஸ்திரவாயிலாய் ஆராயப்புகின்,

"நின்றிடுமூன்று மிடத்தினிற்கு
நிருபரா லுறைசெயும்பலன்கள்
வென்றிகொள்போகம் அடிமையாள்கானம்
வீரியம்சத்துருத்துணைவர்
பொன்றிடாதணிய காதுநோய்கர்ண
பூஷணம்புசித்திடுங்கலன்கள்
துன்றுவிக்கிரமஞ் சேவகாவிருத்தி
சூழ்தைரியங்களுஞ்சொல்லே."

எனக்கூறி யிருத்தலால் வெற்றி-போகம்-அடிமை-கியானம்-வீரியம்-துணைவர்-விக்ரமம்-தைரியம் முதலியன்வற்றைத் தருவதும், கொடுப்பதுமாகிய ஸ்தானங்கள் மூன்றுமிடம் எனக் கூறவேண்டுவதாகிறது.

பொதுவாய் வெற்றி-தைரியம்-வீரியம் முதலியன எவ்வகையாலுண்டாகலாம் என்பதை ஆராயுமிடத்து தான் மிக்க சூரனுயிருக்கினும் தமக்கொரு உதவியிலிருந்தால் இவை யாவும் மென்மேலும் உண்டாகலாம். மேற்படி உதவியாட்களுக்கே துணைவர் என்பதாகும். துணைவருள் மிகச்சிரேட்டமானவர் சகோதரரேயாகும். ஆனதால் சகோதரருக்குரிய சிறப்புத்தானத்தை மூன்றுமிடம் எனக் கூறியுள்ளனர். இவ்வகையில் சகோதரவிஷயத்தைப் பலசாஸ்திரங்களினது ஆதாரங்களைக் கொண்டு ஆராய்வோம்.

சகோதரரைக்கொண்டு ஆராயவேண்டிய சில முக்கிய விஷயங்களைச் சோதிடசாஸ்திரங்களுள்கூறிய முக்கிய விதியினை இங்கு கூறுவாம்.

1 சகோதரர் உண்டா இல்லையா?

2 சகோதரர் உண்டெனில் அவை ஆணு அல்லது பெண்ணு?

3 இல்லையெனின் எவ்வகையிலில்லை.

4 அவ்வாறு இல்லையெனில் பிறந்தபின் இறந்துபோகுமா அல்லது பிறவியே இல்லையா.

5 உண்டு எனின் அவை ஆணு அல்லது பெண்ணு?

6 உண்டு எனின் அவை எக்காலத்தில் உண்டாகும்.

7 சகோதர ஒற்றுமை முதலியன.

8 சகோதர யோகம் எவ்வகை.

9 சகோதர ஆயுள் முதலிய விவரம் இவ்வகை ஆராய்வது முக்கியம் இவ்வாருன விஷயங்களை இங்கு விளக்குவாம்.

2 சகோதரத்தானம் எனக்கூறிய மூன்றுமிராசியில் பாவகிரகங்களிருந்து 2-4-ஆம் வீட்டுக்குடையவர்கள் அத்தமயம் பெற்றிருக்கவும் 9-ல் சனியும், 4-ல் புதனும் நின்று சுபர் பார்வையற்று நிற்க அந்த ஜாதகனுக்கு சகோதரர் என்பதே கிடையாது.

3 சகோதரத்தானமாகிய 3-ல் சனி செவ்வாய் நிற்கவும், 5-ல் செவ்வாய் நிற்கவும் ஆனுலும் லக்கினுதியுடன் சனிகூடி யிருந்தாலும், இரண்டாம் வீட்டவனுடன் ராகுடன் கூடியிருந்தாலும் அந்த ஜாதகன் சகோதரனின்றி தனித்திருப்பான்.

4 அட்டமதானத்தில் குரு நிற்க, சனி செவ்வாய் இவர்கள் ஒன்றுகூடியிருக்க, 3-ஆம் வீட்டோனுடன் குரு ராகு கூடி ஆறும் ராசியில் நிற்க, அந்த ஜாதகன் தனித்தவனுய்ச் சகோதரனற்றிருப்பான்.

5 ஆறும்வீட்டோன் மூன்றிலும், சந்திரனுடன் ராகு அல்லது கேது கூடியும், மூன்றுக்குடையவன் சூரியனுடன் கூடி ஆறில் நிற்கவும், அப்படி இல்லையேல் சனி செவ்வாய் இவர்கள் 7-க்கு 7-ஆம்

ராசியிலிருக்கினும் அந்த ஜாதகன் துணைவர் அற்றவனாகித் தனித்திருப்பன்.

6 சூரியன் சுக்கிரன் இவர்கள் மூன்றும்ராசியிலிருக்கவும், 5-ல் செவ்வாயும், 11-ல் சந்திரன் நின்று ஜென்மலக்கினத்தில் ராகுவும் நிற்கப் பிறந்தவனாயினும், சூரியனும் மூன்றும் வீட்டவனும் ஒன்று கூடியிருந்தாலும் அந்த ஜாதகன் சகோதரர் இன்றி வாழ்வான்.

7 சந்திரனுடன் பாவர்கள்கூடி மூன்றிலிருக்கவும், 9-ல் ராகு அல்லது கேது நின்று சந்திரனுக்கு ஏழாம் ராசியில் சனி நின்றாலும், 3-ஆம் வீட்டோனுடன் இரவி கூடிநிற்க அந்த ஜாதகனுக்குச் சகோதரர் இல்லை என்க.

8 மூன்றுமிராசியில் சனி இரவி கூடி நிற்கவும், அல்லது மூன்றும் ராசியதிபனுடன் சூரியன் கூடியிருந்து சுபர் பார்வையற்றாலும், ரிஷபத்தில் ராகு நின்று, சிங்கத்தில் சந்திரனிருந்துப் பிறந்தவனுக்கு எக்காரணத்தைக் கொண்டும் சகோதரர் என்பதே யில்லை.

சகோதர விருத்தி

1 மூன்றில் குரு சுக்கிரன் இவர்கள் நிற்க, சந்திரன் புதன் என்னும் இருவருடன் நல்லோர் கூடியிருக்க அந்த ஜாதகனுக்குச் சகோதரர் உண்டு.

2 செவ்வாயிருந்த ராசிக்கு நான்காம் ராசியில் குருவும், புதனுக்கு ஏழாம்ராசியில் மூன்றும் ராசியாதிபனும் நின்று, மூன்றில் சனி ராகு நின்றாலும் அந்த ஜாதகனுக்குச் சகோதரம் உண்டு.

3 ஆறும்வீட்டோன் ஆக்ஷிபெற்று அவனுடன் பாவகிரகங்கள் கூடியிருக்கவும், 3-ல் அரசன் என்னும் குரு நிற்கவும் ஆயின் அந்த ஜாதகனுக்கு விசேஷ சகோதரர்கள் உண்டு.

4 மூன்றும் வீடுமுதல் மூன்றும் ராசிநாதன் எந்த ராசியிலிருந்தானோ அந்த ராசிக்குள் எத்தனை கிரகம் நின்றனவோ அத்தனை சகோதரர்கள் உண்டாகும். அவற்றுள் ஆண் கிரகம் எத்தனை யிருந்தனவோ அதனை ஆண் எனவும், பெண் கிரகம் எத்தனை யிருந்தனவோ அதனைப் பெண் எனவுங் கூறுக.

5 சிலர் மூன்றும் ராசிமுதல் செவ்வாய் நின்ற ராசிவரைக்கும் மத்தியில் எத்தனை கிரகங்கள் நின்றனவோ அவையே அந்த ஜாதகனின் இளைய பிறவிகள் எனவும், அந்த கிரகங்களுள் ஆண் பெண் என்னும் கிரக பிரிவினையால் ஆண் பெண்ணறிதல் நலம் எனவுங் கூறுவர்.

சகோதரர்களது ஆயுள் முதலிய விவரங்களைப் பின்வருவனவற்றால் தெளிவாயறிக.

அங்காரகன் 3-மிடத்திலிருப்பினும், அல்லது பார்க்கிலும் துணைவரில்லையாம். 11-மிடத்திலிருக்கில் மூத்தோருண்டாம். 2-மிடத்திலிருக்க துணைவர் வுடனே பிறக்கும். மும்மூன்றுகப்பார்த்து யெண்ணி ஆண் பெண்ணென்று அறியவும்.

3-மிடத்ததிபன் அங்காரகன் 4-மிடத்ததிபனைக்கூடில் தனக்குப் பின் மூன்று துணைவர் பிறப்பார். தன்னுடைய தாயார் பங்கு மனை தனைக்குவந்து சேருமென்று அறியவும்.

அங்காரகன் இலக்கினத்தில் நிற்க, அந்த ஸ்புடத்தைக்கொண்டு யெண்ணி கருங்கோள் நிற்கும் இராசியைக்கண்டு அந்த இராசியில் வியாழன் நிற்க, இளையோனுக்கு அரிட்டம். கருங்கோள் இராசியில் அங்காரன் நிற்க, அங்காரகன் ஸ்புடத்தில் சூரியன் நிற்க, பிறந்த குழவி உற்றார் உறவோரறிய சிவபதமடையுமென்று அறியவும்.

மூன்றுமிடத்ததிபன் இலாபாதிபதிக்கு உறவாகி, அமர்ந்து பலவானுகி, மித்ருவுடன் கூடியிருக்க, இலாபத்தில் சந்திரன் யிருக்க அவருடன் வந்து கூடிநிற்கப் பிறந்த குழவிக்குத் துணைவருண்டா மென்று அறியவும்.

கடகம்-விருச்சிகம்-மீனம் இலக்கினமாகக்கண்டு, அதை ஒன்பது பாகமாகப் பண்ணி அதில் 5-ம்பங்கில் பிறந்த கன்னிக்கு இலக்கினம் கடகமாகில், தூலதேகத்தை யுடையவளாக யிருப்பாள். விருச்சிக மாகில், பேய்போல் கால் கைகள் குறுகிப்பெருத்து உருகுலைந்து யிருப்பாள். மீனமாகில் முடமாகித் திரிவாளென்று அறியவும்.

சகோதர லாபம் - சகோதர நஷ்டம்

சகோதரஸ்தானம் 3-மிடத்ததிபன், சகோதரகாரகனுகிய அங்காரகன் தனலாபத்திலும், கேந்திரதிரிகோணங்களில் நட்பு-ஆக்ஷி-உச்சம்பெற்று நிற்கினும் இப்படி சகோதரஸ்தானுதிபதியோடே கூடியிருந்தாலும் அவர்கள் ஆக்ஷியிலிருந்தாலும் அவர்கள் பார்வையுண்டானுலும், இவனுக்கு சகோதரலாப முண்டென்று அறியவும்.

இந்த சகோதரஸ்தானுதிபதி 6-8-12 அஸ்தமுச்சபகை நீசராசியிலே க்ஷீரணக்ஷேத்திரங்களிலே தான் இருந்தாலும், இந்த அதிபதிகளுடனே கூடியிருந்தாலும், அவர்கள் பார்வை பெற்றாலும் இவன் சகோதரநஷ்டமாம்.

பெண் சகோதரம்

சகோதரராசி அதிபதிராசியுமாய் அந்த ராசி பெண்ராசியும், அதிலே அந்த அதிபதியிருந்தாலும், இவன்யிருந்த ராசிக்கதிபதியும் ஸ்திரீகிரகராசியிலே யிருந்தாலும், ஸ்திரீகிரகம் நட்பு - ஆக்ஷி-உச்சமாய் நோக்கினும், ஸ்திரீகிரகங்கள் இந்த அடைவே அதிபதிக்குண்

டானுல் இந்தப் பிள்ளைக்குப் பின் பிறப்பது பெண்ணென்று அறியவும்.

இப்படி ஸ்திரீகிரகம் ஆக்ஷிராசியிலே அந்தப் பிதாவுக்கு அதிபதியிருக்க, அல்லது புருஷகிரகத்துடனே கூடியிருந்தாலும், அவன் இருந்த இராசியாதிபதி பிரபலனுயிருந்தாலும் புருஷகிரக அங்கிசம் ஸ்திரீயாய்ப் பிறக்கும். கிரகவதியறிந்து சொல்லும்படி கூறுகின்றனர்.

சகோதரமின்மை-சகோதரமடிபு

சூரியன் பிராதுர்ஸ்தானுதிபதியுடன்கூடி அஸ்தமனமாகி அந்த பிராதுர்ஸ்தானத்திலேயே இருந்தாலும், இவனிருந்த இராசியாதிபதி 6-8-12-மிடத்தில் அஸ்தமான பாபசீரண நீசராங்கிசத்திலிருந்தாலும், இப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடியிருந்தாலும், இவர்கள் பார்வையுண்டானுலும் இவனுக்குப்பின் பிள்ளை யில்லையென்று அறியவும்.

இப்படியிருந்த கிரகம் தனம்-இலாபம்-கேந்திரம் - திரிகோணம் சேர்ந்திருந்தால் இவனுக்குப்பின் சிலநாளில் பிள்ளையுண்டாகி பாலியத்தில் மரித்துப்போமெனக் கூறுகின்றனர்.

சகோதரசங்கை

3-மிடத்ததிபதி சுபக்கிரகமுமாய் எவ்வண்ணராய் நட்பாட்சியுச்சத்திலிருந்தாலும், இப்படி சகோதர கிரகங்களுடனே கூடியிருந்தாலும் இவர்கள் ஆக்ஷிராசியிலே இவர்களுடைய திருஷ்டியுண்டானுலும், இவர்கள் தனலாபகேந்திர திரிகோணத்திலிருந்தாலும், நட்பாக நயனத்தோடுபார்க்கினும், இவனுக்கு சகோதரலாபமுண்டு. தீர்க்க வாயுள் சுகமாய் தனவானுமாக யிருப்பானென்று அறியவும்.

இந்தப்படி பிராதுர்க்கிரகங்கள் எத்தனை கூடியிருந்ததோ அத்தனை சகோதரமுண்டென அறியவும்.

அப்போது கூடியிருந்த கிரகங்களில் ஆண் கிரகங்களெல்லாம் ஆணென்றும், பெண் கிரகங்களெல்லாம் பெண்ணென்றும், தீர்க்காயுளுண்டாமென்று அறியவும்.

வெகுசகோதரம்

3-ம் ராசியாதிபதி பிராதுர்காரகனுகிய அங்காரகனும், பிராதுர்ஸ்தானமாகிய மூன்ருமிராசியில் கிரகங்கள் உண்டானுலும் இந்த மூன்றுபெயருடைய ஆக்ஷிராசிகள் புருஷராசியாக இந்த மூன்று பேரும் புருஷகிரகமுமாய் இவர்கள் நட்பாட்சியுச்சம் யெவ்வண்ணராய்த் தனலாபகேந்திர திரிகோணங்களிலிருக்க, இப்படிக்கொத்த கிரகத்துடனே கூடியிருந்தாலும், இவர்களுடைய ஆக்ஷிராசியிலிருந்தாலும், இவனுக்குப்பின் பிறக்கும்பேரெல்லாம் புருஷராம். இவனுக்குச் சகலபாக்கியங்களுள்ள பிராதுர்கள் உண்டாமென அறியவும்.

இம்மூவரும் மிருத்துராசியாதிபதி கிரகங்களுடனே இந்தக் கிரகத்திலிருந்தால் இவனுக்குத் தீர்க்கவாயுள் சகோதரரும் சகலபாக்கியமும் சம்பூரணமாக உண்டென அறியவும்.

இந்தக்கிரகமத்தியிலே புருஷகிரக முற்பாதியும் ஸ்திரீகிரகம் பிற்பாதியும் கூடியிருந்தால் இவன் சகோதரர்கள் அளவில்லையாக யாவரும்மகிழ்ந்திக்க வாழ்வாரென்று அறியவும்.

பெண்சகோதர மின்மை

3-ம் ராசி புருஷராசியாய் இந்த ராசிக்கதிபதிகிரகம் ஸ்திரீகிரகமுமாய் இந்த ஸ்திரீகிரகம் புருஷகிரகராசியிலிருக்க, அந்த புருஷகிரக ராசி அதிபதியும் ஸ்திரீகிரகராசியிலே இவனுக்கு இலாபமாகிற 11-மிடத்தில் நிற்க, இவனுக்குப் பிறக்கின்ற சகோதரம் பெண்ணும். அது சுகத்திலே தீர்க்காயுளுண்டாமென அறியவும்.

இவர்கள் 3-பேரும், 6-8-12-மிடத்தில் அஸ்தமான நீசகிரகங்களுடனே கூடியிருந்தாலும், சகோதரம் பாலியத்தில் மரிக்குமென அறியவும்.

இந்தப்படி இலாபமாகிய 11-மிடத்திலிருந்தாலும் சிலநாள் அற்பசவுக்கியமெனக் கூறுகிறார்.

இவைகளெல்லாம் அந்தந்தக் கிரமனுதியை காலச்சக்கரங்களில் பலன் சித்திக்குமென அறியவும்.

மூன்றும்பாவ பலன்

முற்றிற்று.

9-ம் மிடம் மீனம் பிதாதருமம் - பிரபுத்துவம் - பாக்கியம் குரு	10-ம் மிடம் மேஷம் கருமம் சீவனம் கீர்த்தி ஆதாரம்	11-ம் மிடம் ரிஷபம்சிரேஷ்டப் பிராதுர் இலாபம் இஷ்டம்	12-ம் மிடம் மிதுனம் விரையம் சயனம் மோக்ஷம் அநித்தியம் நோய்
8-ம் மிடம் கும்பம் ஆயுள் வியாதி அபமிருத்து	4-வது மிதுனலக்கினமானால் இந்தச் சக்கரத்தைக் கொண்டு இராசி விவரம் அறிந்துகொள்ளவும்		கடகலக்கினம் உதயகேந்திரம் பெண்ராசி சரராசி பலகால் ராசி காலுதய ராசி ராக்குருடு
7-ம் மிடம் மகரம் கேந்திரம் களத்திரம் காமம் மாறகம் நித்திரை			2-ம் மிடம் சிங்கம் நேத்திரம் வாக்குதனம் முகம் குடும்பம்
6-ம் மிடம் தனுசு ரோகம் சத்துருசோரம் சிறை வழக்கு	5-ம் மிடம் விருச்சிகம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்	4-ம் மிடம் துலாம் கேந்திரம் தாயார் கல்வி பூமி பந்துகள் வியாபாரம்	3-ம் மிடம் கன்னி சகோதரம் வெற்றி கேள்வி காது அடிமை

நான்காம்பாவம்

வாகன பலன்

சந்திரன் வாகனாதிபதி ஜென்மாதிபதி இம்மூவர்களும் ஒன்றாய்க் கூடி நிற்கில், இவனுக்கு அசுவதானங் கிடைக்கும். இவர்களோடு சுக்கிரன்கூடில் தண்டிகை கிடைக்கும். ஒசிவிலாதல் வியத்திலாதல் நிற்கில் சிவிகையுண்டென்று அறியவும்.

பாக்கியாதிபதி பாவனாதி ஸ்தானத்தில் குரு சுக்கிரன்கூடியிருக்க, அல்லது பார்க்க, இவனுக்கு கனகதண்டி வரும். இவரோடு [illegible]திரன் பிரியமாகக்கூடி நிற்கில், இவனுக்குப் பூச்சக்கரக்குடை கிடைக்குமென்று அறியவும்.

வாகனாதிபதி பாக்கியத்தில் நிற்க, பாக்கியதானாதிபதி கேந்திரத்தைப்பற்ற, இவர்கள் நிற்கும் இராசி நல்லோர்மனையாக யிருக்க [illegible]க்கிரகங்களோடுகூட, இலக்கினாதிபதி வாகனஸ்தானத்திலும், கேந்திரத்திலுமேவ, இவனுக்குக் கனகதண்டிகையும், மிகுந்ததனமும், யானைவாகனமும் உண்டாமென்று அறியவும்.

சுக்கிரன் 4-ம் மிடத்ததிபனுடன் கூடினாலும், அல்லது இருவரும் கேந்திரமேறினாலும், 4-ம் மிடத்தோன் சூரியனுடன் கூடி கன்மத்தில் நிற்கினும் வாகனமுண்டாம். 4-ம் மிடம் குருவிருந்த போதும் வாகனங்கிடைக்கும். குருவோடு சுக்கிரன்கூடில் தண்டிகைகிடைக்கும். சுக்கிரன் வாகனாதியாகி ஜென்மாதிபதியைக் கூடில், வெறுஞ்சஞ்சாரநேயனென்று அறியவும்.

சந்திரனுக்கு 3-ம் மிடத்தில் சுக்கிரன்யிருக்க, சுக்கிரனுக்கு 3-ம் மிடத்தில் சந்திரன்யிருக்க, ஒருவர்க்கொருவர் பார்த்திருக்க, குடும்பஸ்தானத்தை நல்லோர்நோக்க அல்லது பார்க்க, அல்லது இலக்கினத்தைப்பார்க்கினும், இவனுக்கு வாகனங் கிடைக்குமென்று அறியவும்.

4-ம் மிடத்ததிபன் இலக்கினத்தில் நிற்க, இவனுக்குப் பல்லக்கோடு செல்வமுண்டாய் வாழ்வன். இலக்கினத்தில் வியாழன் நிற்க, அவரை நல்லோர்பார்க்க, தண்டிகைவருமெனக் கூறுக.

வாகனாதி நின்ற இராசி ஆக்ஷி உச்சமாய் சுபர்கள்வீடாகியும் கேந்திரமாகியுமிருக்க, சனித்தவிடம் சிறுகுடிசையாம். அந்தகிரகம் தாயாருக்கு இன்பமுண்டாகும். வாகனாதிபதி சனி குருவாகில், தண்டிகை கிடைக்குமாம். சந்திரனாகில் பூச்சக்கரகுடை கிடைக்குமாம். சுக்கிரனாகில் பல்லக்குண்டாம். பாம்பாகில் யாவும் வருவதரிதாம். புதனாகில் விசித்திரப்பல்லக்கு ஏறுவானென்று அறியவும்.

வாகனாதிநிற்கும் இராசியோடுகலந்து சுக்கிரன்நிற்கும் இராசியைக்கூட்டிக் கண்டராசியில் சூரியன்வந்து சேரினும், கேந்திரமேறினும், திரிகோண ஸ்தானத்தில் நிற்கினும், வாகனமுண்டாமென்று அறியவும்.

சுக்கிரனுக்கு 3-7-ல் சந்திரனிருக்கினும் சந்திரனுக்கு 3-7-ல் சுக்கிரனிருக்கினும், இவனுக்கு வாகனமுண்டாம். 4-ம்மிடத்தான்-சந்திரனாகி நல்லோருடன்கூடி கேந்திரமேறி நிற்க வாகனமோடு திரவியந்தேடி நாட்டில் அரசனைப்போல் வாழ்வானென்று அறியவும்.

4-ம்மிடத்ததிபதி மாதுருஸ்தானத்தில் இலக்கினாதி இவர்களுடன் கூடிநிற்க, தீயார்களும்கூடி நிறைந்து ஒருவீட்டில்நிற்க, ஜனித்த வீடு ஜென்மாதிபதியின் உச்சமனையாகில், இவனுக்கு பரிவாகனமோடு புத்திமானாய் மன்னர்களை நாளும் சேவித்து வாழ்வான். ஜென்மாதிபதியும், 4-ம் மாதிபதியும், நல்லோர்களும் கேந்திரத்திலிருக்கப் பலனுண்டாமென்று அறியவும்.

சூரியன்-சந்திரன்-சுபக்கிரகங்கள் இவர்கள் மூவரும் ஒன்றாய்க் கூடி கேந்திரத்திலிருக்க, ஆனைவாகனம் வந்துசேரும். ஜென்மாதிபதியும், 10-ம் மாதிபதியும் நிறைந்த சுபரோடுகூடி கேந்திரத்தில்

நிற்கினும் ஆனைவாகனம்சேரும். பருவத்தில் நல்ல சவுந்தரியமுள்ள மனையாளை மருவுவன். ஜென்மாதி-இலாபாதி-நல்லோர்கள் இவர்கள் மூவரும் சேர்ந்து கேந்திரத்திலிருக்க, சிந்தூரமுண்டாம்; தனமுண்டாமென்று அறியவும்.

ஜென்மத்திலும், 10-ம் மிடத்திலும், உத்தமகிரகங்களிருக்க, ஜென்மாதிபன், 10-ம் மதிபனோடு கூடி நல்லோர் மேவிநிற்க, இவனுக்கு அரசரால் மாணிக்கவகைகள் கிடைத்து, சத்திரசாமரைகளோடு மிகவும் கீர்த்திமானாய் வாழ்வான்.

ஜென்மாதிபதி 10-ம் மிடத்திலிருக்க, 10-மிடத்தாதி 4-ம் மிடத்திற்கூட, 4-ம் மிடத்தோன் உச்சமாக இவன் வேந்தனும் சுகவான் - வெகுலீலாவினோதன். 10-ம் மிடத்ததிபன், 4-ம் மிடத்தில் நிற்க, 4-ம் மிடத்தோன் 4-ல் நிற்க, ஜென்மாதிபதி உச்சமாய் மேவ, பலவிதமான வாகனங்களுஞ்சேர்ந்து மன்னவனுவானென்று அறியவும்.

2-ம் அதிபதி-இலாபத்தில்நிற்க, இலாபாதி 2-ம் மிடம்மேவ 2-ம் மாதி-உச்சமாகநிற்க, சகல வாகனங்களோடு அரசனுவானென்று கூறுகிறுர். ஜென்மத்திற்கு 2-ம் மாதியும், இலாபாதி இருவரும் 2-ம் மிடத்திருக்க, 10-ம் மாதிபன்-உச்சமாயிருக்க, தண்டிகையுண்டாம்; பேர்பெறவாழ்வானென அறியவும்.

மாதுர்பலன்

மாதுர்ஸ்தானதிபதியும்-அட்டமாதிபதியும்-சந்திரனும்- சனியும் இவர்கள்கூடி ஜன்மராசிக்கு 5-9-ல் சனி மேவிடில், தாயாருக்கு அரிட்டம் சொல்லவும். நற்கோள்-உச்சமாகி நிற்கில், நன்மையுண்டாமெனக் கூறுகிறுர்.

2-ம் மிடம், 4-ம் மிடம், 7-ம் மிடம் இதில் நிற்கு மூவரும் 2-4-7-இவ்விடங்களிலும், கடகத்திலும், அங்காரகன் சனி நிற்க 2-4-7-இவ்விடத்தில் அங்காரகன் நிற்க சனிபார்க்க, தாயாருக்கு அரிட்டமாமென்று அறியவும்.

சனிக்கு 5-7-9-ம்மிடங்களில்சனிசந்திரன்நிற்க-வியாழன்பார்க்க, மதி இலக்கினத்தில் நிற்க, சனி - சந்திரனை நோக்க, அங்காரகன் 5-7-ல் நிற்கப் பிறந்தபிள்ளையை பிறர் வளர்ப்பாரென்று அறியவும்.

12-ம் மிடத்தில் 2-ம் மிடத்ததிபன் அமர்ந்துகூடி நிற்கில், அன்னைக்கு அரிட்டம்வரும். அன்னையுடைய அதிபன் திசையாய் மாதுருஸ்தானத்திற்கு 9-ம் மிடம் சனி நிற்க, அன்னைக்கரிட்டம் வரும். மாதுருஸ்தானத்திற்கு 8-ம் மிடத்தில்-சனியும், 4-ம் மிடத்தாதிபனும் கூடிநிற்கில் அன்னைக்கரிட்டமாம். 4-ம் மிடத்தே

னுடனே செவ்வாய்கூடி அவர்க்கேழில் சூரியன்கூட இடறுண்டாம். புதன் கூடியிருக்க நோயுண்டாமெனக் கூறுக.

புதனும் 4-ம் மாதிபனும் தீயோர்வீட்டில்நிற்க, கோணத்தில் சனி நிற்க, மாதுர்ஸ்தானாதிபதியுடன் தானாதிபதி சேர்ந்து நிற்க, அன்னைக்கரிட்டமாம். 4-ம் மாதியுடன் சனி செவ்வாய் அணுகில் அவர்திசையில் அன்னைக்கரிட்டம்வரும். 5-ம் மிடத்தில் செவ்வாய் நிற்க சனியவருடன் மருவி நிற்க, அன்னைக்கு மரணம்வருமெனக் கூறுக.

புதன்-கன்னியிலும், மாதுர்ஸ்தானாதி-விரயத்திலும்நிற்க, 4-ம் மிடத்திலும் துலாத்திலும் மகரத்திலும் சந்திரன் நிற்க, இவர்க்கேழில் சனிநிற்க, சுக்கிரனுக்கு 7-ல் பூமிசுதன் நிற்க மாதுர்ஸ்தானத்திற்கு 2-ம் மிடத்தில் நற்கோள் நிற்க நன்றுமென அறியவும்.

சூரியனுடன்-சனிசேர அல்லது குடும்பஸ்தானத்திலிருந்து 4-ம் மிடத்ததிபனையும்,சூரியனையும், இலக்கினத்தையும். 4-ம்மிடத்தையும், மேற்படி சனிபார்க்க - பலமற்றுயிருக்க தீக்கோள்கள் - உச்சமாக, தாய்க்கு அரிட்டமென அறியவும்.

இலக்கினத்தில்-சந்திரனும்-சுக்கிரன் மூன்றிலும் இவர்க்கு 7-ல் 5-ம் மிடத்ததிபன்நிற்க, அவருடன் சூரியனும், 4-ம் மிடத்தோனும் நின்று, பகை-நீசமாக, இவரை - சனிபார்க்க, குடும்பஸ்தானத்தை அங்காரகன்பார்க்க, தாய்க்கு அரிட்டமென அறியவும்.

சுபக்கிரகங்கள்-மேஷத்திலும் இலக்கினத்திலும்நிற்க, மாதுர்ஸ்தானத்தில் சுக்கிரன்-புதன்நிற்க, இவர்களுக்கேழில் சூரியன் நிற்க, சந்திரனுக்கு 7-ல் சனியிருக்க, தாயாருக்குத் தாயார் அரிட்டமாம். சுபக்கிரகங்களும் பூரணசந்திரனும் நிற்கில், அன்னைக்கு அரிட்டம் செய்யாரெனச் சொல்லுகின்றார்.

சனியும்-அங்காரகனும் 2-ம் மிடத்தையும் 4-ம் மிடத்தையும் பார்க்கில், ஜாதகனுக்கரிட்டம். அன்னைக்கு ஒருநோய்காணும். அதனால் அரிட்டமுண்டாம். வியாழன்பார்க்கில், அன்னைசிலநாள் இருப்பாளென்று அறியவும்.

4-ம் மிடத்தும் 2-ம் மிடத்தும் இருந்தவர்கள் குடும்பாதிபன் பலத்தைப் பெற்றிருக்கில், அன்னைக்கு சௌக்கியமுண்டாம். 4-ம் மிடத்ததிபன் உச்ச அம்கிசத்தில் இருந்தால் குலத்துக்கொரு தண்டிப்பு உள்ளவளாக இருப்பாளென்று அறியவும்.

சந்திரலக்கினத்திற்கு 7-ல் செவ்வாய்நிற்கில், அன்னைக்கரிட்டமாம். மாதுர்ஸ்தானத்திலும்-கடகத்திலும்-மகரத்திலும் - சந்திரன் நிற்கில், வயது பூரணமாகும் இவருக்கு இரண்டுபுறமும் பொல்லா கிரகங்கள் நிற்க, சந்திரன் நடுவில்நிற்க, இவன் தாயாருக்கு அரிட்டமென அறியவும்.

மாதுர்ஸ்தானத்தையும், பிதுர்ஸ்தானத்தையும், சூரியன் - குருவுங்கூடி 6-8-2-னும் நீசமாகி நீசஸ்தானத்தில் நிற்கப் பிறந்த சேய், தாய் தந்தைக்குப் பிரியமில்லாத பிள்ளையாவானென்று அறியவும்.

மாதுர்ஸ்தானத்திலும், பிதுர்ஸ்தானத்திலும், வியாழனிற்கினும், சந்திரனும்-சூரியனுங்கூடி மாதுர்பிதுர்ஸ்தானங்களில் நிற்கினும், இவன்தாய் தகப்பனுக்கு மரணமுண்டாம். 4-ம் மிடத்தோனும், 9-ம் மிடத்தோனும் கூடியவருடன் பலரிருக்கில், பாலனுக்குப் பரிவுசொல்லெனச் சொல்லுகின்றார்.

4-ம் மிடத்தோனும் 9-ம்மிடத்தோனும்கூடி, தனத்திலும்-பாக்கியத்தினும்-இலாபத்திலும் சுகமாயிருப்பினும், அல்லது - உச்சத்திலும், கேந்திரத்திலும், திரிகோணங்களிலும் மேவிநிற்கில், தந்தை தாயார் மைந்தர் சந்தோஷமாக வாழ்ந்திருப்பாரென்று அறியவும்.

ஒன்பதாமதிபதியும், ஜென்மாதிபதியும், நான்காமாதிபதி இவர்கள் மூவரும் பலமற்றுயிருக்க, இவன்தாய் இவனுக்குப்பின் கர்ப்பமாக யிருக்கும்நாளில் மரிப்பாளென அறியவும்.

சந்திரனும்-செவ்வாயும் 6-ம் மிடத்தோனுங்கூடி 4-ம் மிடத்தில் நிற்கில், இவன்தாய் சோரம்போவாள். 4-ம் மிடத்தோனும் 9-ம் மிடத்தினும், ஓராமிடத்தோனும்கூடி கோணம் க்ஷேத்திரங்களில் மேவ, தாயார் மரிப்பள்.

க்ஷேத்திர பலன்

10-ம் மிடத்ததிபனும், 4-ம் மிடத்தோனும், அங்காரகனும், 6-8-12-ல் நீசஸ்தானத்தில்நிற்க, இவனுக்குப்பங்கு மனையில்லையாம், மற்றகிரகங்கள் பலமுற்றுநிற்க, மனைபங்கு லாபமுண்டாம். 4-ம் மிடத்தோன் உச்சம்பெறில் மாடகூடமுண்டாமென அறியவும்.

4-ம் மிடத்தோன்-சத்துருவீட்டிலும், நீசத்திலும்நிற்க, வியத்தானுதிபதி - தனஸ்தானத்தில்நிற்க, ஜென்மத்தில் - சூரியன்நிற்க, 4-ம் மிடத்தோனுடன் நல்லோர்கூட, அல்லது-நோக்க, இவன்தன் பங்குமனையாவும் பரிபோமென அறியவும்.

6-ம் மிடத்ததிபன் 7-10-ல் நிற்க, 9-ம்மிடத்தில்-அங்காரகன் நிற்க, சுபக்கோள்பார்க்க, அல்லது - சேர, சத்துருவாயுள்ள மனைகளெல்வாஞ் சேருமெனச் சொல்லுகின்றார்.

4-ம் மிடத்ததிபனும் - இலக்கனுதிப்தியும்கூடி 4-ம் மிடத்தில் நிற்க, இவன் ஒருவர்வீட்டி லிருந்துவாழ்வன். 4-ம் மிடத்தோனுடன் சேரும் பாவர் யெத்தனையோ அத்தனை வீடுகட்டிச் சேதமாகுமென சொல்லுகின்றார்.

இலக்கினாதிபதி பலமற்று 6-ம் மிடத்திலும், 4-ம் மிடத்திலும் நிற்க, ஜன்மத்தைப்பாபர்காண, இவனுக்கு மனையில்லையென்க.

வியஸ்தானாதிபதி 2-ம் மிடத்தில்நிற்க, வீடுகட்டிச் சகலபாக்கிய முஞ் சேர்ப்பன் வியஸ்தானாதியோடு எத்தனை கிரகங்கள் சேருகின் றதோ அத்தனை வீடுகட்டிச் சமர்த்தனாக வாழ்வானெனச் சொல்லுக.

ஜெனனமான இராசி சரமாகில், பரதேசசஞ்சாரஞ் செய்குவன் அதில் சந்திரன் நிற்கில், சுதேசந்தன்னில் வாழ்வன். உபயராசி யாகில், பரதேசத்தில் சிலநாளும், சுதேசத்தில் சிலநாளுமாய்ச் சஞ் சாரஞ் செய்குவானென அறியலாம்.

12-ம் மிடத்தோன்வீடு சுபர்வீடாக, இவன் அரசரைச்சேர்ந்து வாழ்வன், திராசியோன் வீடாகி இலாபாதி குறைவுபெற்றிருக்கில், சூத்திரர் மனைக்கு அருகில் வாழ்வானென்று சொல்லுக.

12-ம் மாதிபன்-மாதுர்ஸ்தானம் - சகோதரஸ்தானம்-பிதுர்ஸ்தா னம்-களத்திரஸ்தானம்-புத்திரஸ்தானம் இவைகளில் போய் நிற்கி னும், 10-ம் மிடத்தாதிபனுடன் சேரினும், அவரவர் விடுதி அவர் களுக்குக் கிடைக்குமென அறியலாம்.

பரவிஷயம்

4-ம் மிடத்தைப் பாபக்கிரகங்கள் மருவிநிற்க, அல்லது நோக்க, ஜென்மாதிபதி பலத்திருக்க, சுபக்கிரகங்களோடு கூடியிருக்க, அவர் கள் பார்வையுற, இவன்தன் விஷயம் பரவிஷயமென்று சொல் லுக.

ஜென்மாதிபதி, 4-ம் மாதிபதி, பாக்கியாதிபதி இவர்கள் மூன்று பேரும், 6-ம் மிடத்தைச் சேர்ந்திருக்க, சூரியன்-அங்கிசத்தில் திட மாக நிற்க, 6-ம் மாதிபனுடன். பாம்பிருக்க, அல்லது சனியுடன் மேவ, இவன் பரவிஷயமுள்ளானென அறியலாம்.

4-ம் மிடத்தாதிபனும், 6-ம் மிடத்தாதிபனும் உடலைப்பற்றி யும் பலருடன்விரைந்துகூடினும், சந்திரனும்-சுக்கிரனும்-துர்ப்பலராக விருக்க, 4-ம் மிடத்தை பாவக்கிரகங்கள் நோக்க, 4-ம் மிடம் சந்தி ரன் வீடாகிநிற்க, அவரோடு கருங்கோள்கூட, ஜன்மாதி 6-ம் மாதி, 9-ம் மாதி. இவர்கள் நால்வரும் 7-ம் மிடத்தில் கூடியிருக்க, இவன் பரவிஷயமாவானென அறியவும்.

சந்திரனையும், ஜென்மராசியையும், பாபக்கிரகமும், சூரியனும் நோக்க, சூரியனும்-சந்திரனும் 9-ம் மிடத்தில் நிற்க பிறந்தசேய் பரசாதகனாவானென அறியலாம்.

இலக்கினத்தில் சூரியனும்-சந்திரனும் நிற்க, சூரியனும்-வியாழனும் நீசனுய், சனியங்கிசத்திலிருக்கப் பிறந்தசேய் பாசாதகனுவானென அறியலாம்.

ஞாயிற்றுக்கிழமையில் சோதிநக்ஷத்திரத்தில் இராகு திசையிலும், புதன்கிழமை ரேவதிநக்ஷத்திரம் புதன்திசையிலும், அஸ்தநக்ஷத்திரமாகிப் பிறந்தசேய் பாசாதகனுவானென்று சொல்லுக.

சனிக்கிழமை அவிட்டநக்ஷத்திரத்தில் துவாதசியில் இன்னுளில் பிறந்தவன் பாசாதகனுவானெனச் சொல்லுக.

ஜன்மத்தில்சூரியன் இருக்க, செவ்வாயங்கிசத்தில் அங்கிசாதிபதி வீடு இலக்கினமாக, இலக்கினத்தை அங்காரகன், பார்க்க, இவன் தன் சிரசு பொடிபடுமென்று சொல்லுக.

மூன்றும்மிடத் ததிபன் சனியுங்கூடவும், 5-ம் மிடத்தில் சூரியனும், சூரியன் 4-5-6-இவ்விடங்களில் நிற்கில், இவன்தாய் போமென அறிக.

மாதுர் - பிதுர்த்தானதிபதிகள், தன்மனேமாறி வலுகுறைந்து அஸ்தமனமாகவிருக்க, அன்னே மரணமாவாளென அறியலாம்.

நான்காம் பாவபலன்

முற்றிற்று.

8-ம் மிடம் மீனம் ஆயுள் வியாதி அபமிருத்து	9-ம் மிடம் மேஷம் பிரபுத்துவம் பாக்கியம் குரு	10-ம் மிடம் ரிஷபம் கேந்திரம் கருமம் சீவனம் கீர்த்தி ஆதாரம்	11-ம் மிடம் மிதுனம் இரேஷ்டப் பிராதுர் இலாபம் இஷ்டம்
7-ம் மிடம் கும்பம் கேந்திரம் களத்திரம் காமம் மாறகம் நித்திரை	5-வது சிங்கலக்கினமானால் இந்தச் சக்கரத்தைக் கொண்டு இராசி விவரம் அறிந்து கொள்ளவும்.		12-ம் மிடம் கடகம் விரையம் சயனம் மோக்ஷம் அநித்தியம்
6-ம் மிடம் மகரம் ரோகம் சத்துருசோரம் சிறை வழக்கு			சிங்க லக்கினம் கேந்திரம் ஆண் ராசி ஸ்திரராசி நாற்கால்ராசி தலை உதயராசி
5-ம் மிடம் தனுசு புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்	4-ம் மிடம் விருச்சிகம்கேந் தாயார் கல்வி பூமி பந்து சுக வியாபாரம்	3-ம் மிடம் துலாம் சகோதரம் வெற்றி கேள்வி காது அடுமை	2-ம் மிடம் கன்னி நேத்திரம்வாக்குதனம் முகம் குடும்பம்

ஐந்தாம்பாவம்

பிதாபலன்.

கொண்டதோர் மாமன்பிதா பெறும்புதல்வர்
 குலவுபூருவஞ்செய் புண்ணியமும்
தண்டமிழ் வாணர்புகற் பிரபந்தந்
 தரித்திடும்கெற்ப மந்திரங்கள்
மிண்டிய வித்தைவித ரணபுத்தி
 விரும்புமிச் செல்வமீதெல்லாம்
கண்டுரைத் திடுவரைந்தா மிடங்கொண்டு
 கற்றுணர்ந்தருளு மாதவரே.

இ-ள். ஜென்மலக்கினமுதலாயுள்ள 5-ம் பாவத்தால் அம்மான், தந்தை, புத்திரர், பூர்வத்தில்செய்த புண்ணியபாவம், தமிழ்வித்தை, பிரபந்த முதலிய வாசிப்பு, மந்திர உபதேசம், வித்தைபெறுக்கம், தாம் கோறும் செல்வம் முதலியனவற்றை குறித்தாராயுமிடமாகும் எ-று.

5-ம் வீட்டோன் ஆக்ஷிபெற்று, குருபாவர்களுடன் சேராது பகையற்று நின்று, 1-4-7-10-ல் சுபகோட்கள்நிற்பகப் பிறந்தவர்கள். அனேக புத்திரபுத்திரிகளை யுடையர்வர்களாயிருந்து வாழ்வர்.

9-ம் வீட்டோன் 5-ம் வீட்டை நோக்கவும், குரு ஆக்ஷிபெற்று சூரியன் சனி செவ்வாய் இவர்கள் 6-8-12-ல் நிற்கினும் அந்த ஜாதகனுக்கு அநேகம் புத்திரபுத்திரிகள் உண்டு.

புத்திரத்தானத்தில் சுபகோட்கள் நின்றும் புத்திரத்தானாதிபன் மித்துருகோட்களுடன் கூடிய பாவர்களின் பார்வையற்றிருக்க அந்த ஜாதகனுக்கு அநேகம் புத்திரபுத்திரிகள் உண்டு.

பத்தாம்ராசியில் குரு ஆக்ஷிஉச்சம் பெற்றிருக்கவும், ஷை 10-ம் வீட்டோன் 7-ல் நின்று 6-8-12-ல் பாவகோட்கள் சம்பந்தமுறினும் அந்த ஜாதகனுக்குப் புத்திரர் உண்டு.

குருபலம்பெற 5-ம் வீட்டோன் நட்புபெற 5-ம் வீட்டைப் பாவர்கள் பாராதிருக்கப்பெற்று, பாவர்கள் ஆக்ஷிஉச்சங்களால் பலம் பெற்றிருந்தாலுங்கூட அந்த ஜாதகனுக்கு அநேக புத்திரருண்டு.

குருபலம்பெற்று கோணத்திலிருக்க 10-ம் வீட்டோன் லாபம் பெற்றிருந்து சனி செவ்வாயிவர்கள் 6-8-ம் ராசியிலிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு அநேக புத்திரர்கள் உண்டு.

குருமதிகூடி பகையற்ற க்ஷேத்திரங்களிலிருக்க, சூரியன் சந்திரன் என்னும் இருவருங்கூடி 4-7-10-என்னும் ராசியிலிருந்தாலும் அந்த ஜாதகனுக்குப் புத்திரர்கள் உண்டு.

மலடன்

7-ல் சனியும், 8-ல் சனிசெவ்வாயும் ஷை சனி செவ்வாய்க்கு 7-ல் குரு நின்று 5-ல் ராகுநிற்பாரேயாமானல் அந்த ஜாதகன் மலடன் என்பவனாகும்.

9-ல் செவ்வாய் நின்று அவனுடன்சூரியன்கூட அல்லது நோக்கமுற்றிருக்க, லக்கினாதியுடன் சனிகூடி லாபத்தானத்திலிருக்க அந்த ஜாதகன் தன் ஆயுள் உள்ளளவும் மலடனாவன்.

ஒன்பதாம் வீட்டவன் விரயத்திலும் 5-ம் வீட்டோன் 6-ல் நீசமும் பெற்று குரு அத்தங்கதம்-க்ஷீணம் முதலியன பெற்றிருக்க, அந்த ஜாதகன் மலடனாகும். இவர்களுடன் 7-ம் வீட்டவனும் நீசமாகியிருக்க அவனுக்குக் காட்டாயமாய் புத்திரருண்டாவதேயில்லை.

இதுகாறுங் கூறியபடி ஜாதகன் மலடனாயினும், அந்த ஜாதகனுடைய மனைவியினது ஸ்தனமாகிய ஏழாம் வீட்டவனது தாராதத்தால் புத்திரர் உண்டு இல்லையென்பதை நிச்சயிக்கலாம் என சிற்சில சாத்திரங்கள் கூறுகிற்கும். இவையும் பொருத்தமானதேயாகும்.

எவ்வாறெனின்? ஆண் மலடு உண்டு ஆயினும் பெண்மலடில்லையாதலால், ஓர் வரனது ஜாதகப்படி மலடன் என கூறுவற்கு இடமுண்டாயினும் பெண் மலடுண்டெனக்கூறச் சாத்திரங்கள் இடந்தரா. இது பற்றி சில சாத்திரங்களை யாராய்வோம்.

சுமார் 3000-வருஷங்களுக்குமுன் பல சாஸ்திரங்களது ஆதாரத்தைக்கொண்டு ஜாதக அலங்காரம் என ஏற்படுத்தி வெளியிட்ட நூல் அந்நாள்முதல். இந்நாள்வரையில் மிக்க சிரேட்டநூலெனக் கைக்கொண்டுவருதலானும் அந்நூலின்கண் மலட்டுஸ்திரீ இவள் என்பதைக் குறிப்பிடப்படாதலாலும் ஆறு ஆதாரமுங் கடந்து, மும் மண்டலத்தினது மத்தியில் பராசத்தி குடிகொண்டவண்ணமாயிருந்துள்ள பெண்களது கருப்பையானது, ஷை ஸ்திரீயினது பாவபுண்ணியங்களுத் தக்கபடி தானிருக்கும் திருவாயிலையடைந்த நாதவிந்து நாளடைவில் முதிர்ந்துப் பிறப்பதோ அல்லது பிறந்தபின் இறப்பதோ, அல்லது கருவின்கண் அழிவதோ, ஷை தேவியின் கருணையேயாகும். இதனாலேயே ஓர் புருஷன் தன் ஜாதகப்படி மலடன் எனத் தெரிந்துகொண்டனனாயின் தன் சரீர கூற்றினுக் கடுத்த பெண்ணை விவாகம் செய்துகொண்டு ஷை பெண்ணால் தான் புத்திரப்பேற்றினையடைந்து மோக்ஷமடைவதற்கெனவே இச்சோதிட சாஸ்திரம் ஏற்பட்டுள்ளனவென்பதை அறிவீர்களாக.

இதுவுமன்றி புத்திரப்பேற்றினையடைய அவாக்கொண்டவர்களுக்கு, நம் தமிழ்சாத்திரவாயிலாய் அனேக நுட்பவழியினையும் ஏற்படுத்தியுள்ளனர். ஆயினும் இவை மலடன் என்பவனுக்குப் பொருந்துமோ என வினவலாம். உதாரணமாய்ப் பாண்டு முதலிய அரசர்களை கவனிக்குமிடத்து எப்படியாயினும் தன் குலபத்தினிக்கு தன்னால் புத்திரர்உற்பவமுண்டாகாதெனத் தீர்மானித்தானாயின் தன் குலத்தவராலோ அல்லது தன்குலர்த்தவர்க்கு மேம்பட்டவராலோ அல்லது சர்வசமயமும் அறிந்தவராலேயோ தன் மனைவியினைக் கூடச்செய்து புத்திரர் உண்டாகச்செய்து அதனால் மோக்ஷமடையவேண்டுமென வற்புறுத்திக் கூறியுள்ளனர். ஆனதால் பெண்களது ஜாதக விஷயமாய் இங்கு நாம் சற்றுராய்வோம்.

எவ்வகையெனின்: ஜென்மலக்கினம் சந்திரலக்கினம் என்னும் இரண்டால் (பெண் ஜாதகப்படி) அவள் அழகு, நிறம், குணம் இவற்றினை யுரைக்க ஏதுவாகும். மற்றும் 7-ம் ராசியதிபனது குணத்தையே அவளுக்குக் கிடைக்கும் புருஷனது குணம் எனக் கூறுதல் வேண்டும். இவ்வாறு பெண் ஜாதகப்படி இலக்கினத்திற்கேழாம் பாவாதியில் அவள் புருஷனது குண குணத்தினை யிங்கு கூறுவோம்.

ஏழாம்வீட்டோன் சூரியனாகில், சிவந்த உருவுமுடையவன், பரிசுத்த மனமுடையவன் சகலமும் அறிந்தவன் வாயாடி.

சந்திரனாகில் பெண்களுக்கொப்பாகிய பேச்சு வெண்மைதேகி சிலகாலம் நிற்சலபுத்தியும், சிலகாலம் துற்புத்தியும், சம்பத்தும் உடைய புருஷன் கிடைப்பான்.

செவ்வாயாகில் அழகு, ஆண்மை தீரம் முதலியன உடையவனாயினும் கள்ளத்தனமுடையவன், சிலகாலம் சிறுத்தும் பெருத்துமிருக்கும் சரீரம்உடையவன், கருத்தநிறமுடைய புருஷன் கிடைப்பான்.

புதனாயின் வியாபாரி. சகலத்திரமும் அறிந்தவன். பொருள் ஈயின், பேச்சுநிலையில்லாதவன். மோகசாலியாகிய புருஷன் கிடைப்பான்.

குருவாயின் நிறம், அழகு குணம் முதலிய வாய்ந்தவன் கல்வியாளன். நிற்சலமனமுடையவன். தன் மனைவியைத் தன் வயப்படுத்தும் குணமுடையவனாகிய புருஷன் கிடைப்பான்.

சுக்கிரனாயின் தன் சொல் கேட்போன், தன் பேச்சுக்கஞ்சுவோன்; தன் நலங்கருதான், பிறருக்குபகாரம்செய்வோன், தன்னைப் பெருமையாய்ப் பேசுவோனாகிய வரன் கிடைப்பான்.

சனியாயின் துஷ்டாஹிதன், நீசகாரியன், கறுத்ததேகி, பொருள் குறைந்தோன், ஆத்மயிம்சைசெய்வோன், ஒன்றுமறியான், தன்பேச்சைக் கேளான், வைராக்கியமுடைய புருஷன் கிடைப்பான் என சாஸ்திரங்களால் கூறப்பட்டுள்ளன.

இனி எவ்வகைப் புருஷனுக்கு எவ்வகை ஸ்திரீ பொருத்தமானவள் என்பதை யாராய்வோம். அவையாவன: எவனுக்கு எவள் கிடைப்பாள் என்பதேயாகும்.

இவை புத்திரத்தானமாதலால் புத்திரன் எவ்வகையாலுண்டாகும் என்பதைக் கூறுவாம்.

வதூவரர்களது ஜன்மலக்கினம் சந்திரலக்கினம் என்னும் இவ்விரண்டும் ஒன்றுயிருத்தல் நலம், அல்லது ஜென்மலக்கினம் சந்திரலக்கினம் என்னும் இரண்டினுள் ஏதேனுமொரு ராசியாவது பொருந்தியிருத்தல் நலம்.

வதூவரர்களது ஜாதகங்களில் ஜென்மலக்கினத்திற்கு ஏழாம் வீட்டவனும் ஏழாம்வீட்டவனுக்குஜென்மலக்கினாதிபதியும் ஒருவருக்கொருவர் பூரணமித்துருவாயிருத்தல் அவசியம். இல்லையேல் சமகிரகங்களாக வமைவது இருத்தல்நலம்.

உதாரணமாக மேஷலக்கினத்தில் பிறந்தவருக்கும் விருச்சிக ராசியில் பிறந்தவருக்கும் ஏழாம் அதிபன் சுக்கிரனாயினும் ஷெ செவ்வாய்க்கும் சுக்கிரனுக்கும் மித்துருவல்லவாயினும் சமகிரகமாகும். ஆனதால் ஷெ இருராசியில் பிறந்தவர்களுக்கும் புருஷனாயின் மிக்க

அழகுடைய மனைவி கிடைப்பாள் எனவும், ஸ்திரீ ஜாதகமாயின் ஷ்டி அழகுவாய்ந்த வரனையடைவாள் எனவும், இவ்விருவரது பொருத்தங்களை யாராயுமிடத்து ஒருவருக்கொருவர் அந்தரங்கக்கருத் துடையவரும் சமமாகிய பொருத்தத்துடன் வாழ்வர் எனக் கூறலாம்.

இதுபோலவே ரிஷபம் துலாம் என்னும் ராசிகளில் பிறந்தவர்க ளது ஏழாம்பாவத்தினைக் குறித்தாராயுமிடத்து ஷ்டி குருராசியிற் பிறந்தவர்களுக்கும் 7-ம் வீட்டவன் சுக்கிரனுகும். செவ்வாய்க்கும் சுக்கிரனுக்கும் சமமேயாகும். ஆனதால் ரிஷபதுலாத்திற்கு பிறந்த வர்களுக்கு தன் குணகுணத்திற்குச் சமமாகிய குணம் வன்மை அழகுநிறம் வாய்ந்து மிகப்பொருத்தமாயுள்ளதாகிய மனைவி கிடைப் பாள் எனவும் ஸ்திரீ ஜாதகனுயில் தன் குண ரூபலாவண்யத்திற்குத் தகுந்த பொருத்தமாயமைந்துள்ள புருஷன் கிடைப்பான் என நிச்ச யிக்கலாம்.

இதுவன்றி மிதுனம், கன்னி என்னும் இருலக்கினத்தவர்களது 7-ம் பாவபொருத்தத்தை யாராய்வோம். ஷ்டி இருலக்கினத்தவ ருக்கும் ஏழாம் அதிபன் குருவாகும். ஆனதால் இவ்விலக்கினத்தி னும் பிறந்தவர்கள் ஆணுயின் தனது குணம் ரூபம் தன்மை முதலியவற்றில் தனக்கு மேம்பட்டவளாயிருக்கத் தகுந்த மனைவி கிடைப்பாள் எனவும், பெண்கள் ஜாதகமாயின் தானிருக்கும் அழகு, குணம், தன்மை முதலிய விசேஷங்களில் தன்னினும் மிக்க மேன்மை யுடனிருக்கத்தகுந்த வரனே கிடைப்பான் எனவும் இவ்விருவர்களது பொருத்தங்களை ஆராயுமிடத்து புருஷ ஜாதகமாயின் தன்னை சிலகாலங்களில் நிஷ்டூரமாய்ப் பேசுபவளாயும் தன்னை கீழ்மையாய் பேசுபவளாயுமிருப்பாள் எனவும், ஸ்திரீ ஜாதகமாயின் தன்னைச் சில காலங்களில் அவமதித்துப் பேசும் வரன் கிடைப்பன் எனவும் கூறுக. இவை யாதுபற்றியெனில் ஜென்மாதியாகிய புதனுக்கு குரு சம னுயினும் ஏழாம்பாவாதியான ஷ்டி குருவுக்கு லக்கினதியான புதன் பகைவனுகிய காரணத்தால் கூறியதென்க

இனி கடகலக்கினத்தைக் குறித்தாராய்வோம். கடகத்தோர்க்கு ஜென்மாதி சனியும் 7-ஆம் அதிபதி சனியுமாகும். ஷ்டி கடகத் தோர்க்கு புருஷ ஜாதகமாயின் தன்னினுங் குறைந்த அழகுடையவள் கிடைப்பள் எனவும், ஸ்திரீ ஜாதகமாயின் தன் அழகிலுங் குறைந்த அழகுடையவரன் கிடைப்பான் எனவுங் கூறலாம். இவ்விஷயமாய் இன்னும் ஆராயுமிடத்து ஜெனனகாலம் தேய்ப்பிறையாயின் தன் அழகிற்கு மேம்பட்டவரனே அல்லது மனைவியோ கிடைப்பள் என வுங் கூறலாம். இவ்விருவரது பொருத்தங்களை ஆராய்வோம். ஷ்டி சந்திரனுக்கு எந்த கிரகமும் பகையில்லையாதலால் ஷ்டி கடகத்தவம் புருஷனுயின் தன் மனைவியைப் பகையான் எனவும், ஸ்திரீ ஜாதகமா யின் மேற்படி ஸ்திரீ தன்புருஷனைப் பகையாள் எனவுங் கூறினுலும்,

மேற்படி லக்கினத்திற் பிறந்தவன் புருஷனுயின் அவன் மனைவியான வள் சிலகாலங்களில் தன்னைப் பகைத்துக்கொள்ளுபவளா யிருப்பள் எனவும், ஸ்திரீ ஜாதகமாயின் தனக்குக் கிடைக்கும் புருஷன் சில காலங்களில் தன்னைப் பகைத்துப் பிரிபவனுகியுமிருப்பான் எனவுங் கூற இடமுண்டாகும். இவை யாதுகாரணத்தால் எனில் சனிக்கும் சந்திரனுக்குமுள்ள பகையால் என்க.

இவ்வண்ணம் சிங்க லக்கினத்தில் பிறந்தவர்களைக் குறித்தாராயு மிடத்து மேற்படி ராசியில் பிறந்த புருஷர்களாயினும் ஸ்திரீகளாயி னும் தனக்குக் கிடைக்கும் மனைவிக்கும் அல்லது புருஷனுக்கும் தன் வாழ்நாட்களில் இடையிடையே சுவல்ப விரோதங்களுண்டாவதும், திசைபுக்தி அந்தரங்களுக்குத் தக்கபடி மேற்படி பகை மாறுவது மாகவேயிருக்கும். இவை யாதுகாரணத்தால் எனின், மேற்படி இரு வருக்கும் பூரண சத்துருவாதலால் கூறப்பட்டதென்க.

இவ்வாறே தனுசுராசியிற் பிறந்த ஆண்கள் தன்மனைவி தன் னைப் பகையிலாளாயினும் தான் தனது மனைவியைப் பகைத்துக்கொள் ளும் சுபாவமுடையவர்கள் எனவும், ஸ்திரீகளாயின் தன்புருஷனைத் தானே பகைத்துக்கொள்ள நேரும் எனவுங்கூற இடந்தரும்.

மகர கும்பத்திற் பிறந்தவர்களுக்கும் முன் சொன்னபடியே ஒரு வருக்கொருவர் பகைத்து வாழ்வார் என்றே கூறுதல்வேண்டும். இவ் வண்ணமே ஸ்திரீபுருஷ ஜாதகங்களை ஆராய்ந்து பெண் கொள்ளு தலோ அல்லது புருஷன் கொள்ளுதலோ அவசியம். இவ்வாறு ஆராயாது செய்யும் வதூவரர்களே தன் வாழ்நாளில் மிக்க வருத்த முடையவராயும், சந்ததியற்றவராயும் மற்றும் பல துன்பங்களுக்கும் ஆளாகின்றனர் என்பதை அறிதல்வேண்டும்.

இவ்வகை ஆதாரங்களால் இங்கு புத்திரமூல சில சங்கையினை ஆராய்வோம். எவ்வகை எனின்:—

உலகினில்வாழ்வுபூண்டுளோன்சகல
செல்வமுமுற்றிருந்தாலும்
இலகியமகவையினிதினீன்றிடாதா
ரிருமையிற்பயன்பெருர்அதனுல்
பலதவம்செய்துமகப்பெறல்வேண்டும்
பரவுகன்னியர்தமைவேட்டல்
நிலவுசந்ததியின்பொருட்டலார்காமப்
பொருட்டலவெனமறைநிகழ்த்தும்.

இ-ள். இவ்வுலகிற் பிறந்த ஒருவன் இப்புவியிற் சகல செல்வங் களும் உடையவனுகியிருந்தாலும் அவனுக்குச் சந்ததியென்றதில்லை எனின், அவன் இம்மையிற் பயன்பெறுன். ஆனதால், தான் மிக்க அழகு, குணம், தன்மை, நன்மை முதலியன் வாய்ந்த பெண்ணை

விவாகம்செய்து பல தவங்களையியற்றி மேற்படி புத்திரப்பேற்றினை யடையவேண்டுவ தவசியம். விவாகம் செய்துக்கொள்வது எதற்கெனின் அவள் மூலமாய் மேற்படி புத்திரப்பேற்றினை யடைவதற்கே யன்றித் தன் காமவெறியை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டல்ல என வேதங்கள் கூறும் எ-று.

5-ஆம் மிடத்தில் சனிநிற்க, அங்காரகனோடு-சூரியன்கூடிநிற்க, சுபர்கள் நோக்க, பலனில்லையாம். பூசகத்தில் சுபர்நடுவே நிற்கில், அன்னைக்கன்னை அரிட்டமாம். மிஞ்சிப்பிழைக்கில் தந்தைக்கரிட்டம்.

ஜென்மலக்கினத்தில் நிற்கும் ஜன்மாதிபதியோடு 5-ம்மிடத்ததிபன்நிற்க, அல்லது பார்க்க, ஒருவர் ஸ்தானத்தில் ஒருவர் மாறி நிற்க பெருமையாக புதல்வர்கள் பிறப்பார்.

5-ஆம் மிடத்தி லிருப்பவர் தோஷம்பார்க்கவேண்டில், சனியாகில் குழவிக்கும், தந்தைக்குமாம். சந்திரனாகில், அன்னைக்காம். புதனாகிலும், அன்னைக்காம். சூரியனாகில், தந்தைக்காம். கருங்கோளாகில், சுதனுக்காம். செவ்வாய்-கடகத்திலிருக்க, அம்மானுக்காம். சூரியன் 5-ஆம் மிடமேவ, இவனுக்குச் சந்தானம் மத்திபம்.

5-ஆம் மிடத்ததிபன், 5-ஆம் மிடத்தில் நிற்காமல், நோக்கில்லாமல், பகையுமில்லாமல், சுபாங்கிசத்தில் பதிந்துநிற்கில், ஆயுளுண்டாம். 5-ஆம் மாதிபன் ஊணில், தன்பதியில் நிற்கில், இவனுக்குப் புத்திரர் அற்பம்.

புத்திரதானாதிபதி யோகவானாய் புதன்வீடுபேற, புத்திரரில்லையாம். நல்லோர்கூடிநிற்கில், புத்திரர் பிறந்து மரிப்பார். பாவர்சேரில், மகவில்லையாம். ரிஷபம் - கும்பம் முறையாகப் பிறந்தவர்களுக்கு மகவில்லை.

7-ஆம் மிடத்தோன் உச்சம்பெற்று நீசமடையாமல் நிற்கில், மூத்தாளுக்குப் புத்திரனில்லையாம். 7-ஆம் மிடத்தோன் உச்ச நீச்சமானாலும், அங்கிசத்தி லிருந்தாலும், இளையாளுக்குப் புத்திருண்டாகும்.

5-ஆம் மிடத்தில் சூரியனோடு இராகு கூடியிருக்கில், தந்தைக்கும் மைந்தனுக்கும் பகையாம். திரவியசேதமோடு தேசாந்தரம் திரிகுவான்.

இலக்கினாதிபதியுடன் 4-ஆம் மாதிபன் உறவாகக் கூடியிருக்க, தந்தைக்குப்பின் மைந்தர்கள் மிக்க செல்வமாக மேவுவார்.

இலக்கினத்தில் அங்காரகனும், இவர்க்கேழில் சனியும், 12-ஆம் மிடத்தில் சூரியனும் குலவிநிற்க, ஆண்-பெண்-இரண்டுமில்லையாம். 5-ஆம் மாதிபன் 7-9-ல் பாவனாகில், புதல்வரில்லை.

புத்திரஸ்தானியிருக்கும் அங்கிசத்தைத்தொட்டு இலக்கினம் வரைக்கும் யெண்ணி கண்டலக்கம் யெத்தனையோ அத்தனை புதல்வர் பெறுவான்.

யோகஸ்தானத்தில் சந்திரன்நிற்க, அவர்க்கு 7-ல் சூரியன் நிற்க சனிக்கு 7-ல் புதன் நிற்கினும், அல்லது இரட்டைராசியில் சூரியன் மேவினும், அவரை செவ்வாய்பார்க்க, யோகம் உண்டு.

உதையராசியிலும், ஒற்றைராசியிலும் சூரியன் நிற்க, இரட்டை ராசியிலும், ஒற்றைராசியிலும் சந்திரன்நிற்க, அங்காரகனும்-புதனும் பார்க்க, சந்திரனும்-சனியும் அங்கிசத்திலும் இலக்கினத்திலும் நிற்க, இவன் தனக்கு நலியுண்டாம்.

அட்டமாதிபதி 5-ஆம் மிடத்திலிருக்க, 5-ஆம் மிடத்தாதிபதி, 8-ஆம் மிடத்திலிருக்க, சுபர்நோக்குபில்லாதிருக்க, புத்திரரில்லையாம். 5-ஆம் மிடத்தோன் வியத்திலும் 5-8-லும் இருக்க, மைந்தரில்லை.

மைந்தர்ஸ்தானத்தில் சனிநிற்க, அந்தஸ்தானம் புதன்வீடாக, அதனில் சனியும் - அங்காரகனும் அமர, அல்லது பார்க்க, 5-ஆம் மிடத்தோன்நோக்க, இவன் தத்துபுத்திரனுக வாழ்வான்.

மீனலக்கினத்திற்கு 5-ஆம் மிடத்தில் சூரியன் உச்சமாக நிற்க, பெண்பிள்ளைகள் பெறுவன். 5-ஆம் மிடத்தோன் அங்காரகன் 6-ஆம் மிடத்தோன் இவர்கள் மூவரும் நேசமில்லாமல் பார்க்கில், இவனுக்கு சத்துருக்களால் பீடைவரும்.

4-ஆம் மிடத்தில் சுக்கிரன்நிற்க, மாதுர்ஸ்தானத்தில் சூரியன் நிற்க, சனியோடு சந்திரன் பிதுர்ஸ்தானத்தில் நிற்க, தாயாருடைய கிரகத்தால் குழவியிறந்துவிடும். 5-ஆம் மிடத்தில் சுக்கிரன் மூர்க்கனுகயிருக்க தீதாகும்.

புத்திரஸ்தானுதிபதியும்-சந்திரனும்-சுக்கிரனும் இவர் மூவரும் மாதுர்ஸ்தானத்தில் நிற்க, இராகு உயிரில் நிற்க, மாதுர் அங்கிசத்தில் நின்றோர்களை நேயமில்லாத கிரகங்கள்பார்க்க, பெண்பிள்ளையே பெறுவான்.

சந்திரனின்ற ஸ்தானத்திற்கும், இலக்கினத்திற்கும், 5-ஆம் மிடத்தில் பிதுர்காரகன் நிற்க, சுபக்கிரகங்கள் பார்க்க, சிறுபாலரில் காரியம் முதற்கெடும்.

புத்திரஸ்தானத்திற்கு 5-ஆம் மிடத்தில் கேது நிற்க, அல்லது இராகு நிற்க, ஜென்மாதிபதி 5-ஆம் மிடத்தில் நிற்க, வாலிபத்தில் மைந்தர்களைப் பெற்று வாழ்வான்.

ஜென்மாதி 7-ல் நிற்க, 4-ஆம் மாதியும், 7-ஆம் மாதியும் ஒரு வீட்டில் நிற்க, அரவோடு 2-ஆம் மாதியும் சனிவீடாக பிறந்த சேய் சமர்த்தனுக வாழ்வன். 2-ஆம் மிடத்தோன் 5-ல் நிற்க, மகவுண்டாம்.

5-ஆம் மிடத்தாதிபன் ஸ்புடத்தில் சனிவாங்கிச இராசியில் சூரியன் நிற்க, புத்திரனுண்டாம். சூரியன் ஸ்புடத்தில் அங்காரகன் வாங்கிச இராசியில் சனிவரும்போது திரேகமிராது.

5-7-9, வியத்தில் இவ்விடங்களில் ஒன்றில் நட்பு-ஆக்ஷி-உச்ச மாகயிருக்க, நிருபன் மதியைக்காண, தந்தைக்கு அதிக செல்வமுள்ள புத்திரன் பிறப்பான் சந்திரனை சுக்கிரன்காண, வெகு போதகனுக இருப்பான்.

போகாதிபதி, 5-ஆம் மாதிபதி, இலாபாதிபதி இவர்கள் பொருந்தி மித்துருவாகயிருக்க, 5-ஆம் மாதி உச்சனுய் சுபனுய் மோகமாய் இலாபத்திலிருக்க, முறைதவருத புத்திரனும். 5-ஆம் மாதியோடு யெத்தனை கிரகம் கூறுகின்றதோ அத்தனை புதல்வருண்டாகும்.

5-ஆம் மாதிபனும் - சூரியனும் - அணுகில், வெகு புத்திருண்டாம். 5-ஆம் மாதிபனும்-பாம்பு-8-ல். கூடிநிற்கில், தத்துபுத்திரனுவன். 5-ஆம் மாதிபனுடன் பாம்பு சூரியனுங்கூடில், மிருகம்போலிருப்பான்.

மிதுனம் இலக்கினமாக, துலாத்தில் அங்காரக னிருந்திட, இவன் தந்தைமுன் மூவருக்கும் விரோதமாக யிருப்பன். பொல்லாத வஞ்சகராவர். கிரகங்கள் இப்படி நிற்காதிருக்கில், சுகமுடன் வாழ்வான்.

10-ஆம் மிடத் திறைவனை 5-ஆம் மிடத் தாதிபன் பொருந்தியிருக்கில், புண்ணியவானுய் உத்தமர்வீட்டுப் புதல்வனுய் வருத்தமின்றித் தனந்தேடி வாழ்குவான்.

5-ஆம் மிடத்ததிபனும், அங்காரகனும் கூடி 5-ஆம் மிடத்தில் நிற்க, சனிநோக்க, இவன் தத்துபுத்திரனுவான். 5-ஆம் மிடத்ததிபனும், அங்காரகனும், சனியும், இலாபத்தில் நிற்க, அங்காரகன்பார்க்க, அல்லது நிற்க, இவன் அன்னியர்களிடத்தில்போய் வளர்வன் சனி அமிசத்தில் நிற்க, சூரியன் 5-ஆம் மிடமேற, புத்திரரில்லை.

5-ஆம் மிடத்ததிபதி சூரியன் சனியினுடைய அங்கிசமேறி சனி பார்த்திடவும், அல்லது 5-ஆம் மிடத்தில் அமரவும், இவன் பரவிஷய புதல்வனுகப்பிறந்து வல்லவனுக வாழ்வான். 5-ஆம் மிடத்தில் அங்காரகனும், சனி அங்கிசத்திலும்சூழ, இவன் கருச்சுரோணிதன்.

இலக்கினத்தில் சந்திரனிருக்க, 6-ஆம் மிடத்தில் சுக்கிரன் நிற்க இவன் தனக்கு புதல்வ ரனேகருண்டாம். சூரியனும் சந்திரனுங்கூடி, இனிமையர்க் கேந்திரத்திலிருக்கப் பிதுருக்கு உரிமையொன்றுஞ் செய்யான். உபயராசியாகில், மரணகண்டம் இரண்டுவரும்.

சுபக்கிரகங்கள் 5-ஆம் வீட்டைப்பார்க்க, அல்லது 5-ஆம் மிடத்தோனுடன் இராகுவிருக்க, இவனுக்கு நாகசாபத்தினுல் புதல்வரில்லையாம். நாகப்பிரதிஷ்டைசெய்ய மைந்தருண்டாம். கேந்திரகோணத்

துள் அல்லலாய் சுபக்கிரகங்கள் சுற்றிலும் பார்வையிருக்குமாயின் மைந்தரில்லையாம். ஜெபம்செய்ய மைந்தருண்டாம்.

5-ஆம் வீட்டாதிபனுடன் 6-ஆம் மிடத்தோன்கூடி சுபக்கிரகம் பார்க்க, இவன் தனக்கு அண்டாத சத்துருவின் சாபத்தினால் மக வில்லையாம். 5-ஆம் வீட்டில் 5-ஆம்மாதிபதி மிண்டனுகவிருக்க, இவ ரைச் சுபக்கிரகங்கள் பார்க்க, தெய்வசாபத்தினால் புத்திரயாகஞ் செய்வான்.

4-ஆம் மிடத்துத் தீயோர்கள் நிற்க, அந்த அதிபனுடன் சனி கூட, 12-ஆம் மிடத்தில் பாபக்கிரகங்கள் பற்றி நிற்க, இவனுக்குச் சாபத்தினால் புதல்வரில்லையாம். ஓமங்கள்-ஜெபங்கள் அனேகமாகச் செய்விக்க அதனல் மைந்தருண்டாம்.

2-ஆம் மிடத்திலும், 12-ஆம் மிடத்திலும் சுபர்கள் நிற்க, அது பாவர் மனையாக, பாக்கியாதிபதி வியஸ்தானத்திலிருக்க, 5-ஆம் மிடத் திலும், ஜென்மத்திலும் பாவர்கள் நின்று அஸ்தமனமாகிக்கூடில், புத்திரரில்லை.

ஜென்மத்திலும், வியத்திலும், 8-ஆம் மிடத்திலும், சனி நிற்க, மீனத்தில் பாபக்கிரகங்கள் நிற்க, புதல்வரில்லையெனச் சொல்லவும். 10-ஆம் மிடத்தில் சுக்கிரனும் நிற்க, அல்லது 10-ஆம் மிடத்திலும், 8-ஆம் மிடத்திலும் இராகு நிற்க, 5-ஆம் மிடத்தில் 8-ஆம் மிடத் ததிபன் நிற்க, பாபக்கிரகங்கள் ஜென்மத்தில் நிற்க புத்திரரில்லை.

புத்திரகாரகனுடைய ஸ்புடத்தையும், 5-ஆம் மிடத்ததிபனு டைய ஸ்புடத்தையும்கூட்ட, அதில் வியாழன் வருங்காலில் மதலை தோன்றி இராசி அங்கிசமட்டும் மேஷமுதலாக யெண்ணிப்பார்க்கில், பாபர்நின்ற ராசிக்குடைய சேய்மறிக்கும்.

5-ஆம் மிடத்தில் சந்திரன் நிற்கில், பிறந்தசேய் ஒன்றும் பிழைக்காது.

9-ஆம் வீட்டிற்குடையவன் குருநிற்க, சனி அவரை நோக்க, புதனேடு சூரியன்கூடில், பிறந்தசேய் தன்னை அன்னியர் பேணுவார்.

5-ஆம் மிடத்திற்கதிபன் பாவனுகி, 6-8-12-ல் சூரியனேடு கூடி னும், அல்லது சுபர்கள் திருஷ்டியுரினும், 5-12-2-ல் நிற்கினும் நாச மாகும்.

புத்திரஸ்தானதிபதியும், 7-ஆம் மாதிபதியும், கேந்திரகோணத் தில் பாவராகி நிற்க 6-ஆம் மிடத்ததிபன் அவரை யடுத்தாலும், அல் லது பார்த்தாலும், சுத்தமாகப் புத்திரரில்லை.

ஐந்தாம் பாவபலன்

முற்றிற்று.

———

7-ம் மிடம் மீனம் கேந்திரம் களத்திரம் காமம் மாரகம் நித்திரை	8-ம் மிடம் மேஷம் ஆயுள் வியாதி அபமிருத்து	9-ம் மிடம் ரிஷபம் பிதா தருமம் பிரபுத்துவம் பாக்கியம் குரு	10-ம் மிடம் மிதுனம் கேந்திரம் கருமம் சீவனம் கீர்த்தி ஆதாரம்
6-ம் மிடம் கும்பம் ரோகம் சத்துருசோரம் சிறை வழக்கு	6-வது கன்னியா லக்கினமானால் இந்தச் சக்கரத்தைக்கொண்டு இராசி விவரம் அறிந்து கொள்ளவும்		11-ம் மிடம் கடகம் சிரேஷ்டப் பிராதுர் இலாபம் இஷ்டம்
5-ம் மிடம் மகரம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்			12-ம் மிடம் சிங்கம் விரையம் சயனம் மோக்ஷம் அநித்தியம்
4-ம் மிடம் தனுசு-கேந்திர தாயார் கல்வி பூமி பந்து சுக வியாபாரம்	3-ம் மிடம் விருச்சிகம் சகோதரம் வெற்றி கேள்வி காது அடிமை	2-ம் மிடம் துலாம் நேத்திரம் வாக்குதனம் முகம் குடும்பம்	கன்னி லக்கினம் கேந்திரம் - பெண்ராசி உபயராசிதலை உதயம் இராகு குரு

ஆறும்பாவம்

வழக்கின் பலன்

6-ஆம் மிடத்தில் நல்லோர்கள்மேவ, இவன் தன்தாய் அகத்தார்கள் வழக்கிட்டு தனத்தைப் பிரித்துக் கொடுமென ராஜாங்கமேறி அவர்கள் பக்ஷமாகக் கெலிப்பான்.

சுபக்கிரகங்கள் நட்பு-ஆக்ஷி-உச்சம்பெற்று 6-ஆம் மிடத்தில் நிற்கில், புவியில் வலியனாகி யிருப்பன். இவனைக் கண்டவர்கள் யாவரும் விகாதமாகச் சொல்வர். தன் வம்மிசத்தோர்களை மெலியசெய்விப்பான்.

6-ஆம் மிடத்தில் கடினமாகி யத்தீக்கோள்நிற்க, இவன் யெல்லாருக்கும் பொல்லாதவனாகி தங்கள் வமிசத்திற்கெல்லாம் மிடியனாகியும் உலகில் யாவரும் புகழ வாழ்வான்.

6-ஆம் மிடத்தில் மருவிய தீக்கோள்களின் வலுவினால், இவன் சிங்கத்தைப்போல யாவருங் கண்டு அச்சங்கொள்ளும்படி தீரனாகவும், இவனுக்கு எதிரியான சத்துருக்கள் இவன் தனக்குக் கைகூப்பி நிற்கவும் கும்பரனைப்போல் செல்வமுண்டாகி வாழ்வான்.

கருங்கோளாகிய இராகு 6-ஆம் மிடத்தில் நிற்க, இவனுக்குக் காலில் விலங்குவந்து தடையாக நீங்கும். யாவரும் போற்றக் கூத்தி மானுகவுமிருப்பன். தேள்முதல் பலவிஷங்களும் இவனைத் தீண்டாது.

6-ஆம் மிடத்ததிபன் பாவனுகி கேந்திரத்திலிருக்க, இவனை உலகத்தில் யாவரும் போற்றப் பிரதாபனுகவும் கொடியோர்களுக்கு மிண்டனுகக் கூறுவான்.

6-ஆம் மிடத்ததிபனும், இலக்கினதிபனும், சூரியனுடன் கூடி நிற்கில், சுரகெண்டம் வரும். சந்திரனுடன்கூடில், ஜலகண்டம் வரும். அங்காரகனுடன்கூடில், ஆயுதகண்டம். சனிகூடி நிற்கில், சோரர்களால்வருங் கண்டம். சுக்கிரன்கூடில், ஸ்திரீகளால்வருங் கண்டம். அரவுகூடில், விஷத்தினல்வருங் கண்டம்.

ஜென்மாதிபதியும், 4-ஆம் மாதிபதியும், தனுதிபதியும், அட்டமாதிபதியை 6-ல் கூடில், அஜீரணத்தால்வருங் கண்டம். இலக்கினுதியோடும், வாகனுதியோடும், சனிகூடில், விஷபக்ஷணத்தால் வருங் கண்டம். 4-ஆம் மாதியுடன் சனிசேர்ந்து ஜென்மலக்கினத்தில் நிற்க, பெரிய விஷபக்ஷணத்தால்வருங் கெண்டம்.

இலக்கினுதியோடும், வாகனுதியோடும், பாம்புகூடில், பந்தனமான மரணம்வரும். நல்லோர் வீடாகி இலக்கினுதிபதி 7ஆ-ம் வீட்டில் ஏகிநிற்க, 7-ஆம் மிடத்ததிபன் இலக்கினத்தில் நிற்க, இவன் தன் முறைதைக்கும் தாய்க்கும் மரணம்.

பெருமைவாய்ந்த 6-ஆம் மதிபனேடு பெரும்பாவராகிய கிரகங்கள்கூடி, இலக்கினத்திலும், 8-ம் மிடத்திலும் நிற்க, இவன் தனக்கு சித்தப்பிரமைகொண்டு அங்கத்தில் விரணமுண்டாகும். பெருமையுள்ள அவரவர் ஸ்தானங்கள் 8-லும் இருக்கில், மேற்கூறிய பிணியென்று சொல்லவும். தாயார் தகப்பனுர் பிறர்தாய் மைந்தர் இவர்களுக்கும் இவ்வாருக ஸ்தானங்களைக்கண்டு சொல்லவும்.

6-ஆம் மிடத்தில் சுபக்கிரகங்கள்மேவ, 6-ஆம் மிடத் தாதிபன் கேந்திரத்திலிருக்க, சுபகிரகங்கள் பார்த்திட, உபகாரங்கள் செய்வன். ஒருக்காலமும் நலிவில்லாமல் வாழ்வன். தீக்கோளாகினும் நன்மையடைந்து எதிரிகளுக்கு எதிரியாவான்.

சூரியனும் சனியும் ஒருவர்க்கொருவர் இசைந்துப்பார்க்கில் பிறந்த சேய் அலியாம். சனிநோக்கினும் அலியாம் அங்காரகன் இரட்டைராசியிலும், ஒற்றைராசியிலும், சந்திரலக்கினத்திலுமருவ, சந்திரன் அங்கிசத்தேயிருக்க, சூரியன் நின்றவீடு சுக்கிரன் வீடாக பிறந்தசேய் அலியாம்.

ஜென்மத்தில் சந்திரனிருக்க, சூரியன் - புதன்-சந்திரன்-மூவரு மிரட்டைராசியிலிருக்க, மற்ற கிரகங்கள் இம்மூவரையும் அங்காரகன் நோக்க; மாதர்களை இகழுவான்.

———

6-ம் மிடம் மீனம் ரோகம்-சத்துருசோரம் சிறை-வழக்கு	7-மிடம் மேஷம் கேந்திரம்- களத்திரம்-காமம்-மாரகம்-நித்திரை	8-ம் மிடம் ரிஷபம் ஆயுள் வியாதி - அபமிருத்து	9-ம் மிடம் மிதுனம் பிதா-தருமம் பிரபுத்துவம் - பாக்கியம்-குரு
5-ம் மிடம் கும்பம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் - புண்ணியம்	7-வது துலா லக்கினமானல் இந்தச் சக்கரத்தைக் கொண்டு இராசி விவரம் அறிந்துக்கொள்ளவும்.		10-ம் மிடம் கடகம் கேந்திரம் கருமம் சீவனம் - கீர்த்தி ஆதாரம்
4-ம் மிடம் மகரம் - கேந்திரம்-தாயார் கல்வி, பூமி பந்து சுகம், வியாபாரம்			11-ம் இடம் சிங்கம் சிரேஷ்டப் பிராதுர் இலாபம் - இஷ்டம்
3-ம் மிடம் தனுசு சகோதரம் - வெற்றி கேள்வி காது அடுமை	2-ம் மிடம் விருச்சிகம் நேத்திரம் வாக்கு முகம் தனம் குடும்பம்	துலாலக்னம் கேந்திரம் சர ராசி ஆண் ராசி இருகால் ராசி பகற்செவிடு	12-ம் மிடம் கன்னி-விரயம் சயனம் - மோக்ஷம் - அனித்தியம்-நோய்

ஏழாம்பாவம்

களத்திரபலன்

குறித்திடுங்கமனமணம்மடந்தையற்கும்
குமாரர்கள்தமக்கும்நல்லின்பம்
நிறுத்திடுவிவகாரம்தமர்கூட்டம்
நேமியோர்உறவுசன்மார்க்கம்
பிறித்தறிவியாபாரம்மணம்புரிநாள்
பின்மனையாள்வியம்பெறுதல்
மறிக்கயல்விழியர்யேதிடங்கொண்டு
வழுத்துவர்மறைமொழிப்புலவர்.

என்றபடி ஏழாம்பாவகத்தால் களத்திர விஷயத்தினை யாராய்வோம்:—

சனிக்கு 7-ல் சுக்கிரனிருந்து மேற்படி சுக்கிரனிருந்த வீட்டுக் குடையோன் நீசம்பெற்றும், சந்திரனுக்கு 7-ல் புதனும் செவ்வாய்க்கு 7-ஆம் ராசியில் களத்திராதிபதிநிற்க, அந்த ஜாதகனுக்கு களத்திரநாசம் உண்டென்க.

7-ல் செவ்வாயும் குரு மூடம் பெற்றும், 7-ஆம் வீட்டுக்குடையவன் ராகு சம்மந்தப்படவும், மேற்படி ராகு நின்ற ராசினுக்கு நான்கில் சுக்கிரனும் நிற்க, அவன் மனைவி தன் பாலபருவத்தில் இறந்து போவாள்.

1-7-ஆம் அதிபர்கள் கூடி சனிக்கு நான்கிலும், 7-ஆம் ராசியில் குருவும், மேற்படி குருவுக்கு 4-ல் சுக்கிரனும், ஜென்மலக்கினத்தில் செவ்வாய் நின்று சுபர்நோக்கற்றுநிற்க, அந்த ஜாதகனுடைய மனைவி சீக்கிரம் இறந்துபோவாள்.

குடும்பாதிபதி பலயீனம்பெற்றும் 7-ஆம் வீட்டோன் நீசம் பெற்று குரு 12-ல் நின்றாலும், சுக்கிரனுடன் செவ்வாய் கூடியும், ஜென்மாதிபன் சனியுடன்கூடியுமிருந்து ஜெனனகாலத்தில் தேய்ப்பிறைச் சந்திரனாக இருக்க, அந்த ஜாதகன் எத்தனை விவாகம்செய்தாலுமினும் அவர்கள் உடனுக்குடன் இறந்துபோவார்கள்.

7-ஆம் ராசியில் சனி இரவிகூடி நிற்கவும், சுக்கிரனுடன் பாம்பு கூடியும், 7-ஆம் வீட்டோன் பன்னிரண்டா மிராசியிலிருக்கவும், அவனுக்கு முன்சொன்னபடி எத்தனை விவாகம் செய்தாலும் உடனுக்குடன் மறிப்பர்.

குரு சந்திரன் என்னும் இருவர்களும் கூடி 7-ஆம் ராசியில் நிற்பாரேயாமாயின் அவை நன்மை என்பதைக் கொஞ்சமேனும் தராது. எப்படியெனின் தான் எத்தனை விவாகம் செய்துக்கொண்டாலுமினும் மேற்படி மனைவி மறிப்பதோடு மேற்படி களத்திர வம்மிசமும் நாசமாகும்.

மீனத்தில் சுக்கிரனும் கன்னியில் குருவுமிருந்து, மேற்படி இருவருள் ஒருவர் நின்ற ராசிக்கு நான்கில் சனி பாம்பு இவர்கள்கூடியிருக்கவும், ஜென்மத்தில் செவ்வாயும், 7-ல் சூரியனும் நிற்க, அந்த ஜாதகன் மனைவி உடனே இறந்துபோவாள்.

7-ஆம் வீட்டோன் ஆக்ஷிபெற்றுத் தன்னிருபுறத்திலும் பாவர்கள் நின்று, சுக்கிரன் சந்திரன் என்னு மிருவரும் ஒன்றுகூடியிருந்து இவர்களை குரு, மதி, வெள்ளி இவர்களிலொருவர் நோக்கவில்லை எனில், அந்த ஜாதகனது மனைவி இறந்துபோவதுடன் வாழ்க்கையும் குன்றும் என்க.

சுக்கிரன் சுபக்ஷேத்திரம் பெற்றிருந்தாலுயினும், தன்னிருபாரிசத்திலும் பாவகிரகங்கள் கூடியிருக்கவும், 5-7-ஆம் அதிபர்கள் சூரியனுடன்கூடியிருக்கவும், இவர்களை மேற்சொன்ன சுபகோட்களிலொருவர் பார்க்கவில்லையேல் அந்த ஜாதகன் மனைவிக்கு ஆனியுண்டு.

பதிவிரதை

7-ஆம் வீட்டோன் சுக்கிரன் என்னும் இருவரும் மிக்க பலம் பெற்றிருக்கவும் இவ்விருவரையும் பாவர்கள் பாராமலும் சுபகோட்-

களில் பார்க்கப்பட்டுமிருந்தால் அந்த ஜாதகனுக்கு கிடைக்கும் மனைவி யானவள் மகாபதிவிரதையாய் இருப்பாள்.

ஏகபத்தினி

7-ஆம் வீட்டில் சுபகோட்களிருந்தும், சுக்கிரனுடனும் பாவ கோட்கள் கூடாது. நற்கோள்கூடியிருக்குமாயின் அந்த ஜாதகன் ஏக மனைவியையுடையவனுயும், அவள் மிக்க பதிவிரதையாயு மிருப்ப துடன் தன் குடும்பத்திற்குச் சீதேவிபோன்று சகல வாழ்வையு முடையவனுகி விளங்குவான்.

ஏழாம்ராசிக் கிருபுறத்தினும் பாவர்கள் சம்மந்தமற்ற சுபர்க ளிருக்கவும் இவ்வாறே சுக்கிரனிருந்த ராசிக் கிருபுறத்தினும் மேற் சொன்னவாறே பாவர்களற்றுச் சுபரிருக்க அல்லது சுபர்நோக்க ஏழாம்வீட்டதிபன் 5-ஆம் ராசியில் வலுபெற்றிருக்க அந்த ஜாதக னுக்கு மனைவி ஒன்றெனவும் அவள் எக்காலத்தும் தாழ்வின்றி நிலைப் பள் எனவுங் கூறுக.

தீர்க்க களத்திரம்

சுக்கிரன் ஆக்ஷியாயும் ஏழாம்வீட்டோன் நட்பாயும் நின்று ஏழாம்ராசியில் குருவும், சந்திரனுக்கு நான்காமிராசியில் முன் சொன்ன சுக்கிரன் நிற்கவும், மேற்படி சுபகோட்களை பாவர்களணு காது மேற்படி பாவர்கள் 6-8-12-ஆம் ராசியில் நிற்கவுமானுல் அந்த ஜாதகன் தீர்க்காயுளையுடைய ஒரே மனைவியை யடைவான்.

குடும்பாதிபதி ஆக்ஷிபெறவும், ஜென்மலக்கினத்தில் குருவும் நின்று மேற்படி 7-ஆம் வீட்டோன் உச்சனுகியிருந்து அந்த ராசிக்கு ஏழாம் ராசியில் சந்திரன் நின்று சனி-ராகு-கேது இவர்களது பார் வையற் றிருப்பார்களேயாமானுல் அவனுக்குக் கிடைக்கும் களத்திரம் தீர்க்க வயதுடையவளாவள்.

ஏழாம்ராசியில் சந்திரனிருந்தும் பக்கத்தில் குருநின்றும் மேற் படி குருவினுக்கு நான்காம்ராசியில் சுக்கிரனிருந்து ஆக்ஷி அல்லது உச்சங்களால் பலம்பெற்றிருக்க அந்த ஜாதகனுக்குக் கிடைக்கும் மனைவியால் சகல பாக்கியங்களும் பொருந்தவாழ்வன்.

இரண்டாம் வீட்டோனும் ஏழாம் வீட்டோனும் நட்புடன் கூடி யிருக்கவும், பத்தாம்ராசியில் சுக்கிரன்-புதன் என்னுமிருவரும் ஒன்று கூடியிருக்கவும், ஜென்மலக்கினத்தில் குருவும், ஏழில் சந்திரனு மிருக்க அவனுக்குக் கிடைக்கும் மனைவியானவள் சகல ஐஸ்வர்யங் களு முடையவளாய்த் தீர்க்காயுளுடன் விளங்குவாள்.

களத்திரயோகம்

சுக்கிரன் ஆக்ஷி உச்சம் முதலியவைகளால் பலம்பெற்று சூரிய னிருந்த ராசிக்கு ஏழாம்ராசியிலிருக்கவும் லக்கினத்தில் புதனும் 7-ல்

குருவுமாக நின்று அவர்களுடன் சனி-ராகு-கேது இவர்கள் கூடாமலும் பாராமலுமிருக்க அந்த ஜாதகன் தன்மனைவி மூலமான யோகத்தை யடைவான்.

ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் வீட்டோனும் ஏழாம்வீட்டோனும் நல்லோர்களினது அங்கிசம் பெற்றிருக்கவும் அவர்களுடன் குரு-புதன்-சுக்கிரன் இவர்கள் கூடியிருக்க அல்லது பார்க்கப்படவுமானால் அந்த ஜாதகனுக்குத் தன் மனைவியால் விசேஷயோகம் உண்டெனக் கூறுக.

செவ்வாய் தோஷம்

வாக்கினு நான்கேழெட்டு மருவுமீராறிற் செவ்வாய்
றேக்கிய வரன்தனக்குத் திருந்தவே வந்துநிற்கில்
ஆக்கிய மனையாள்சாவாள் ஆயிழை தனக்குநிற்கில்
பாக்கிய புருஷன்செத்துப் பார்தனில் விதவையாமே.

என்றபடி ஜென்மலக்கினத்திற்கு 2-4-7-9-12-ஆம் இடங்களில் செவ்வாய் நிற்க அவையே செவ்வாய் தோஷமாகும். இவ்வாறு புருஷ ஜாதகத்திற்குண்டாயின் மனைவிக்கு ஆக்ஷி எனவும், ஸ்திரீக்குண்டாயின் புருஷனுக்கு ஆனி எனவும் பொதுவாய்க் கூறுவர்.

மற்றும் சிலர் ஜென்மலக்கினம் சந்திரலக்கினம் சனி நின்ற ராசி, சுக்கிரன் நின்றராசி இவைகளுக்கும் மேற்சொன்ன ராசிகளில் செவ்வாய் நிற்கினும் மேற்படி தோஷம் உண்டு என்பர்.

ஜெனனகாலத்தில் சுக்கிரனோடு வியாழன்கூடில், இராஜகன்னிகையாம். சூரியனும் அங்காரகனுங்கூடில், க்ஷத்திரிய ஸ்திரியாம். சந்திரனும் புதனுங்கூடில், வைசியகுலமாதாம். சனிகூடில், சூத்திர கன்னிகையாம். பாம்புகூடில், புலையர்குலத்தில் பிறந்த கன்னிகையாய்ப் பெருமையோடு இருப்பாள்.

களத்திராதாறுதிபனைக்கூடி எத்தனைகோள் நிற்கின்றதோ அத்தனை களத்திரமுண்டாம். களத்திரகாரகன் சுபனைப் யுற்றிடக்காண உத்தமம். பாவர்கள்காண மத்திபமாம். இராகு - கேதுகள் இருவரில் ஒருவர் களத்திரஸ்தானத்தில் உற்றிடக்காணில், உத்தமம்.

களத்திரலக்கினாதிபதி கலந்து தன்மனையில் நிற்கில், இவன் பல ஸ்திரீகளைக் கூடியபின் விவாகமாகும். களத்திராதிபதியும், குடும்பாதிபதியும், பாவர்களும், வெள்ளியுங் கூடிலும், 3-1-6-ல் மருவிநிற்க, மனையாளுக்கு ஈனமுண்டாம்.

இலக்கினாதிபதி யீனமாகி, 7-ம் மாதிபனுடன்கூடி, வியத்திலும் 6-8-லும் நிற்க, விவாகமில்லையாம். 7-ஆம் மிடம் சுத்தியாக, 7-ஆம் மிடத் ததிபனோடு ஊனமில்லா கிரகங்கள் கூடி நிற்கில், விவாகமொன்று.

சுக்கிரனும் அங்காரகனும் 7-ல் நிற்கில், விதவை ஸ்திரியை மணம்புரிகுவான். சந்திரனும் அங்காரகனும் 6-ஆம் மாதியும்கூடி 4-ஆம் மிடத்தில் நிற்க அல்லது-மாதுர் ஸ்தானத்திலும், ஜென்மத்திலும், 9-6-லும், இன்னூர்களும் கூடிநிற்கில், இவன் தனக்கு மாறு விஷயமுண்டாம்.

7-ஆம் மிடத்தில் பாவர்கள்நிற்க, இவன் களத்திரத்திற்கு ரோகமுண்டாம். சூரியனோடு பாம்புகூடி 2-ஆம் மிடத்தில் நிற்க, வெகு நோய்காட்டும். 2-ஆம் மிடத்தை பாபர்கள் பார்க்கில்-நிற்கில், பிணிகொண்டுவாழும். குடும்பம் ஏழையாகும்.

7-ஆம் வீட்டிற்கதிபன் சரராசியில் நிற்கில், இவன் தனக்குத் தாரம் இரண்டுடன் வாழ்வன். உபயராசியில் நிற்கில், மாதர்கள் பலருண்டாம். ஸ்தானத்தைநோக்கி அக்கோள்களால் பலன்கள் கூடும். இலக்கினத்தாதி சுக்கிரன் வீட்டில் சூழினும், அல்லது-சுக்கிரனேக்கூட, அல்லது-சுக்கிரன்பார்க்க, துய்யஸ்திரீயுள்ளவனும்.

2-ஆம் மாதியும் சுக்கிரன் வாகனுதி இவர்கள் மூவரும் 6-8-12-ல் மேவி, சல்லாபமாகநிற்க, இவர்களை பாவர்கள்வந்துகூடில், இவன் மாலைசூட்டுங் கன்னிகை யில்லாள்.

7-ஆம் மாதிபன் கேந்திரகோணத்திலு மிருக்க, இவன் தனக்கு யேகதாரமுண்டாம். சுக்கிரன் பாபருடன்கூடி ஜென்மத்திலும், 6-8-ல் இருக்க, வேசியர்க்கு இனியனும்.

7-ஆம் மாதியும், குடும்பாதியும் இவர்கள் கேந்திர திரிகோணங்களில்நிற்க, அல்லது அவர்கள் மனையில் பிரியனாகவிருக்க, அனேக தாரங்கள்செய்து வாழ்வான்.

தாரககாரகனும் 6-ஆம் மதிபனுந் தனித்துக்கூடி நிற்க, மத்தியிலும் 7-ஆம் மிடத்திலும், பாவர்கள் நிற்க, அல்லது நோக்காகவிருந்தால் பாரியாளுக்கு அரிட்டம்.

சனியும் சூரியனுங்கூடி கன்னியில் நிற்க, அந்தவீடு ஜென்மலக்கினமாக, சூரியன் மீனராசியில் மேவிநிற்க, மனைவியர்க்குத் துன்பத்தோடு அரிட்டம்வரும்.

இலக்கினத்திற்கு 7-ல் சந்திரன்நிற்க, சந்திரனுக்கு 7-ல் சுபக்கிரகங்கள் பார்க்க, பொருத்தமான பெண்டீருண்டாம். பாபக்கிரகங்கள் தீண்டிநிற்கில், மணம்புரியாத வஞ்சகனாக யிருப்பான்.

7-ஆம் மாதிபனும் தாரகர்கள் நீசமாகி வியத்திலும், 6-8-லும் நிற்க மனையாளுக்கு யீனமாம். சுக்கிரன்வீட்டிலும், சூரியன்வியத்திலும், 6-8-லும் நிற்க, இவன்தன் மனைவி யாவருக்கும் மீறினவளாய் இருப்பாள்.

7-ஆம் மாதிபன் பாவர்வீட்டில் நிற்கில் பார்க்கில், இவன் தனக்கு விவாகம் தூரதேசத்திலாகும். களத்திராதிபன் சுபாங்கிச

மேற, கிட்டத்தில் ஆகும். 7-ஆம் மாதிபன் திசையைப்பிடித்து சொல்லவேண்டும்.

சூரியனுக்கு நடுவும், சந்திரனுக்கு தென்கிழக்கும், செவ்வாய்க்குத் தெற்கும், புதனுக்கு வடகிழக்கும், குருவுக்கு வடக்கும், சுக்கிரனுக்குக் கிழக்கும், சனிக்கு மேற்கும், இராகுவுக்கு தென்மேற்கும், கேதுவுக்கு வடமேற்கும் இவ்விதமாக கிரகங்களின் திக்கையறிந்து சொல்லவேண்டும்.

7-ஆம் மிடத்தோன்-வியத்திலிருக்க, 8-ஆம் மிடத்தோன் பாவனுகயிருக்க, இவர்களைத் தக்ககிரகங்கள் எத்தனை பார்க்கின்றதோ அத்தனை தாரங்களுண்டாம். களத்திராதிபன் ஒக்க பாவருடன் 7-ல் நிற்க, அவருடன் பாம்புகூட, அதற்கு கேந்திரத்தில் பாவர்கள் பார்த்திருக்க, இந்தச் சாதகனுக்கு நாலுதாரம்.

களத்திராதிபதியாகிய 7-ஆம் மிடத்ததிபன் சூரியனுடன் கூடில் அல்லது 6-8, வியத்திலிருக்கில், இந்தச்சாதகன் வாலிபத்தில் மனையாளை விண்ணுலகம் சேர்ப்பன். களத்திராதிபன் நற்கோளுடன் கூடில், இவர்களை சூரியனும், விணக்கிரகங்களும் பார்த்திடில், இவன் தன் களத்திரம் பாவியாக யிருப்பாள்.

சனிபாவனுய், 7-ஆம் மிடத்ததிபனுகி, 6-8-12-ல் மேவி நிற்கில் இந்தச்சாதகன் விதவை ஸ்திரீயைச் சேர்வான். 7-ஆம் மிடத்ததிபன் 4-2-ல் நிற்கும் பாம்போடு கூடினும் நாடினும், அல்லது-6-8, வியத்தில் தாவியிருக்க, ஈனகுலத்து மாதரைச் சேர்வான்.

7-ஆம் மாதிபன்-சனியின் வீட்டில்நிற்க, சனிபார்க்க அல்லது, 7-ஆம் மிடத்திலிருக்க, 9-ஆம் மிடத்ததிபன் 8-லாயினும் சனிவீட்டிலாயினும் பெருக்கவந்திருக்க, இந்த சாதகனுக்குவரும் மனைவியைப் பிறர்கள் சேரவிடுத்து, அதனுல்வரும் பொருளால் ஜீவனஞ்செய்து வாழ்வான்.

7-ஆம் மாதிபன் பிரபலனுகி, மித்துருக்களைக் கூடில், அல்லது இலாபத்திலிருக்க, அதில் எத்தனை கிரகங்களிருக்கின்றதோ அத்தனை மனைவியருண்டாம். அந்தக் கிரகங்களுக்குள்ள தேயத்திலிருந்து கிடைக்குமெனச் சொல்லவும். கிரகங்கள் உபயராசியில் நிற்கில், மனைவியர் சுபமுடனிற்பார். சரராசியாகில், சிலது மனைவியர்களுக்கு அரிட்டம் நேரும்.

கன்னியாராசி இலக்கினமாக, சந்திரனுஞ் சனியும் கேந்திரத்திலிருக்க, மனைவியைச் சதமாக மணம்புரிந்துப் பூபதியாக வாழ்வான். 7-ஆம் மிடத்தில் சுக்கிரனும் சன்மத்தில் குருவும் அல்லலில்லாமலிருக்க, இந்தச் சாதகனுக்கு மனைவியர் அனேகர்கள் வாய்த்தும், இரக்ஷிக்கமாட்டான்.

ரிஷபத்தில் சுக்கிரன் - அங்காரகன்-சந்திரன்-சூரியன் இவர்கள் நாடி ஓரிடத்தில் கூடில், இந்த சாதகன் மனைவியில்லாமல் பிணியனுகத்

திரிவான். பிதுர்க்காரகனுகிய சூரியனும், புதன்-சனி-வெள்ளி இவர்கள் நயந்துரில், மனைவி மக்கள்களை ஓட்டிவிட்டுப் பிணியோடு தேசம் திரிவான்.

ஜென்மாதிபன் அங்கிசாதிபதிவீட்டில் நிற்க, களத்திர ஸ்தானத்தில் குருவந்திருக்க, இவன் தனக்கு மணமுண்டாம். ஜென்மத்திற்கு 7-ஆம் இராசி அங்கிசத்தில் குரு பலவானுய்வந்து நிற்கில் பாரியாளுண்டாம்.

குடும்பாதிபதியும், களத்திராதிபதியுங் கூடிப் பாவருடன் கன்மஸ்தானத்திலிருக்க சனிதோன்றில், பரதாரத்தின் ஸ்திரீயின் சொல் கேட்டு இச்சிப்பன். 6-ஆம் மிடத்திலும் பாக்கியஸ்தானத்திலும் அடமாக நிற்கில், மேற்கூறியவாறு நடப்பான்.

சுக்கிரனும் 7-ஆம் மாதியும், 6-ஆம் மாதியுங்கூடி இவர்கள் மூவரும் ஒருவீட்டில் நிற்கில் மாதரில்லையாம். 2-ஆம் மாதி, 3-ஆம் மாதி இவர்கள் சேர்ந்து 6-8-12-ல் கூடியிருக்கில் ரோகம் காட்டும்.

ஜென்மாதியும், 7-ஆம் மாதியும், கேந்திரகோணத்தில் கூடியிருக்க அந்த வீட்டோன் இலக்கினத்தில் மேவ, பலவானுக அவர் திசையிலாதல்-புசிப்பிலாதல் இந்த சாதகனுக்கு மணங்கூடும்.

சப்தமாதி-அட்டமாதியோடு பாவராயினும், சத்துரு துர்ப்பலராயினும், சந்திரன் - வியத்திலும், சூரியன் - அங்காரகனுடன் கூடினுலும், இந்த சாதகனுக்கு ஒத்த விவாகம் இரண்டாம்.

7-ஆம் மாதி 2-ஆம் மாதி இவர்களிருவரில், யாவரேனும் ஒருவர் பலவீனராகயிருக்க, அந்தவீட்டில் பாவர்கள் நிற்க, இந்த சாதகன் மணம் இரண்டுசெய்து வாழ்வான்.

2-ஆம் மிடத்தில் பாவர்கள் வந்திருக்க, 7-லும் பாவர்கள் நிற்க அந்தராசி சுகமானதாக அதைப் பாவர்கள்நோக்க இந்த சாதகனுக்கு நல்லவிவாகம் இரண்டாம்.

ஜென்மத்திலும் 2-லும், 7-லும், பாவர்களாக நிற்க, களத்திராதிபதி நீசமனமாகச் சத்துருவீட்டில் நிற்கில், இந்த சாதகனுக்கு களத்திரம் இரண்டாம்.

களத்திராதிபதி-கேந்திரகோணத்தில் நிற்க, பாவியர் க்ஷேத்திரம் நட்புபெற, அதில் 10-ஆம் மிடத்தோன்கூட, 7-ஆம் மிடத்தோன் சுபகேந்திரங்காண, இந்த சாதகனுக்கு தேவியர்கள் அனேகமாக மணம்புரிவான்.

7-ஆம் மிடத்தில் சூரியன் பலவானுகயிருக்க, சுக்கிரனும்-குருவும் வலுவுபெற்றிருக்க, குடும்பாதிபதி அங்கிசத்திலிருக்க, இந்த சாதகன் அதிரூபமுள்ள தனபதியான பெண்ணை மணம்புரிவான்.

இலாபாதிபதியும், 7-ஆம் மாதிபதியும் பலவானுகிக்கூடி திரி கோணத்திலிருக்க, இவர்களைச் சுபர்கள் பார்க்க, இந்த சாதகன் நேய மான பெண்கள் அனேகரை மணம்புரிந்து சுபசீவனுக வாழ்வான்.

2-ஆம் மாதியும், 7-ஆம் மாதியும், இலக்கன கோபுராங்கிசத்தி லிருக்க, 10-ஆம் மாதி, 7-ஆம் மிடத்திலிருக்க, இந்த சாதகன் நல்ல களத்திரமாகக் கொள்வான்.

களத்திராதிபதி சுபராசியிலேறில், அங்கிசம் நல்ல வீடாய்ச் சுக்கிரன் நிற்க, அல்லது 10-ஆம் மிடத்ததிபனுடன் பலவான்கள் கூட, இந்த சாதகன் மோகனப்பெண்ணை மணம்புரிவான்.

களத்திராதி வியாழனுடன் கூடினுலும், அல்லது பார்வையுற்று பலமானராசியில் நின்ருலும், சுக்கிரன் பலவானுகயிருக்க, இவனுக்கு வரும் களத்திரம் தானதருமமுள்ளவளாக யிருப்பாள்.

இலக்கினம் தனுசு மீனமாகி அதில் புதனிருக்க, மித்துருவோடு சந்திரன் நீசமற்றமனமாயிருந்து அங்கிசமேறினும், அல்லது சத்துரு வின் சொந்த அங்கிசமேறினும், பாவர்கள் களத்திரத்திலிருக்க, இவன் தன்களத்திரம் வேசியாகி குலந்தாழ்வாகும்.

களத்திராதிபதியும், சூரியனும் பாவருடன்கூட, பாவர்கள் இராசியில் சிறந்துயிருக்க, பாவர்கள் நோக்கமானுலும், சனியும்சேயும் அங்கிசமானுலும், சோரம் போவாள். வெளியாகாமலிருக்கும்.

களத்திராதிபதி சுக்கிரனுகி பாவருடன் கூடயிருக்க, பாவர்கள் பார்க்க, அல்லது சத்துவங்கிசத்திலும் பாவரங்கிசத்திலும் அமர்ந் திருக்க இவன் தன் களத்திரம் அன்னியர்பால் சஞ்சரித்து சோரம் போவாள்.

7-ஆம் மிடத்தோனும், 6-ஆம் மிடத்தோனும் பாவருடன் 2-ஆம் மிடமிருக்க, அங்காரகன் பார்க்க, இந்த களத்திரத்திற்கு விப சாரத் தொழிலால் சுதனுண்டாம். இலக்கினுதிபதி 6-8-12-ல் இருக்க இந்த சாதகன் 12-தாரங் கொள்வான்.

இலாபாதியும் களத்திராதியும் கூடினுலும், பார்த்தாலும், பல வானுகி திரிகோணத்திலிருந்திடில், இந்த சாதகனுக்கு விவாகமொன் ருரும். கள்ளமனமுடையாள்.

இலக்கினத்திற்கு 7-லும், வியத்திலும், சுக்கிரன் பொருந்தி யும் பாவாங்கிசமேறியுமிருக்கில், சுக்கிரன் பாவரோடு யிருக்க, இந்த சாதகனுடைய மனைவிகையா லவனைக்கொல்வாள்.

ஏழாம் பாவபலன்

முற்றிற்று.

5-ம் மிடம் மீனம் புதல்வர் மாதுலன் பிதா ம் ஞானம் - புண் ணியம்	6-ம் மிடம் மேஷம் ரோகம் சத்துரு சோரம் சிறை வழக்கு	7-மிடம் ரிஷபம் கேந்திரம்-களத்திரம்-காமம்-மாரகம்-நித்திரை	8-ம் மிடம் மிதுனம் ஆயுள் வியாதி - அபமிருத்து
4-ம் மிடம் கும்பம் கேந்திரம்-தாயார் கல்வி, பூமி பந்து சுகம், வியாபாரம்	8-வது விருச்சிக லக்கினமானல் இந்தச் சக்கரத்தைக்கொண்டு இராசி விவரம் அறிந்துக் கொள்ளவும்		9-ம் மிடம் கடகம் தருமம் பிதா - பிரபுத்துவம் - பாக்கியம்-குரு
3-ம் மிடம் மகரம் சகோதரம் - வெற்றி கேள்வி காது அடுமை			10-ம் மிடம் சிங்கம் கேந்திரம் கருமம் சீவனம் - கீர்த்தி ஆதாரம்
2-ம் மிடம் தனுசு நேத்திரம் வாக்கு தனம் முகம் குடும்பம்	விருச்சிக லக்னம்கேந்திரம்பெண்ராசி ஸ்திர ராசிபலகால்ராசி தலையுதயராசி பகற்செவிடு	12-ம் மிடம் துலாம் விரயம் சயனம் - மோக்ஷம் - அனித்தியம்-நோய்	11-ம் இடம் கன்னி சிரேஷ்டப் பிராதுர் இலாபம் · இஷ்டம்

எட்டாம்பாவம்

ஆயுள் பலன்

அட்டமாதிபதி பாக்கியாதிபதியாக யிருக்கினும், அட்டமாதிபதி பாவியாக யிருக்கிலும் ஐயமில்லையாம். அட்டமத்ததிபன் நற்கோள் அட்டமாதிபதியை பார்க்கில், பிறந்தசேய் நூறுண்டு புவிமீது யிருப்பான்.

பாபர்கள் செவ்வாயைப்பற்றிய புசிப்பில் சனிதிசையில் புத்தியிலும் அட்டமாதிபதி திசை ஊண் புசிப்பிலும் கோசாரபலன் நன்ருகயிருக்க வருத்தமாறும்.

கடகமுதலாய் ஆறுராசியினும் வியாழனிருக்க, மகர முதலாக ஆறுராசியிலும் சனிநிற்க, கடகம் கேந்திரமாக, சுக்கிரன் சூரியன் அதில்நிற்க, தீர்க்க ஆயுளுடன் வாழ்வான்.

மகரமுதலாக ஆறுராசியிலும் சனியிருக்க, கடகமுதல் ஆறுராசிக்குள் சந்திரனிருக்க, கேந்திரத்தில் சூரியன் நிற்க, இவன் தனக்கு தீர்க்கவயதாம் 8-ஆம் மிடத்தில் அங்காரகனிருக்க, சூரியன் உச்சியாக அம்கிசத்திலிருக்க, கேந்திரமேற, நூறுண்டு,

மிதுனம் முதலாக ஆறுராசியிலும் சனிநிற்க, தனுசு முதலாக ஆறுராசியிலும் திரிகோண கேந்திரந்தன்னில் புதனும் சுக்கிரனும் நிற்கில், பிறந்தசேய் தீர்க்க ஜீவனும்.

குருவும் சுக்கிரனும் 4-ஆம் மிடத்திலிருக்க, ஜென்மத்தில் அரவுயிருக்க, இவர்க்கு நடுவில் சனியிருக்க, இவன் தனக்கு வயது நூறும்.

ஜென்மலக்கினமுதல் 4-ஆம் மிடம்வரையில் நாலுகிரகங்கள் நிற்க, புதன் சுக்கிரனைப்பார்க்க, சிலவருடமிருப்பானும். புதன் தோற்றமில்லாமலிருக்கில் வயது 33-ஆம், வெள்ளிநிற்கில் வயது 66-ஆம், சூரியன் நிற்கில் 100-வயதாம்.

அட்டமாதிபதி அட்டமத்தில் அமர்ந்திருக்க, சந்திரன் பாவருடன்கூடி 2-6-8 சூழ்ந்திருக்கில், இவன் தனக்கு வயது பதினெட்டாம். தருமவானும்.

கும்பம் ஜென்மலக்கினமாக, இதற்கெட்டாமிடம் அங்கிசமாகி அதில் சனிநிற்க, இராகு கேந்திரத்தில் இருக்கப் பிறந்த சாதகனுக்கு வயது 60-ஆம்.

தனுசு இலக்கினமாக, அதில் வியாழன் நிற்க, சனி கருமாதிபதி பாம்பு இவர்கள் மூவரும் ஒன்றுய்க்கூட, 10-ஆம் மிடம், 5-ஆம் மிடங்களில் நிற்க, மற்ற கிரகங்கள் கேந்திரமேற, சன்மாதிபதி 8-ஆம் மிடத்திலிருக்க, பிறந்த சாதகனுக்கு 28-வயது.

8-ஆம் மாதிபதி அங்கிசத்திலிருக்க, சுபக்கிரகங்கள் கேந்திரத்திலிருக்க, அட்டமாதிபதி பாவத்திலிருக்க, வயது-66. சனி திசை நடக்க ஜென்மாதிபன் ஜென்மத்திலிருக்க, 8-6-ல் 7-ஆம் மிடத்தோனிருக்க இவன் தனக்கு வயது 50.

7-8-6-ஆம் மிடத்தில் நல்லோர்களிருக்க, 3-11-லும் சுபக்கிரகங்களிருக்க, தீர்க்கவாயுளுண்டாம். 8-ஆம் மிடத்ததிபன் உச்சமாக, ஜென்மாதிபனை இனிய கிரகங்கள்காண கேந்திரத்திலிருக்க, இந்த ஜாதகனுக்கு வெகுவயதாம்.

ஜென்மாதிபன் தனக்கும் சனிக்கும் உறவாகில் தீர்க்காயுளுண்டாம். சூரியனாகில் 8-ஆண்டாம். இலக்கினாதிபதி பகையாலும் 8-ஆண்டாம்.

அற்பவயதுள்ளோர்கள் அவிட்ட நக்ஷத்திரத்தி லிறப்பார்கள். பூரணவயதுள்ளவர்கள்-பரணி-ரேவதி நக்ஷத்திரத்தி லிறப்பார்கள். மத்திபவயதுள்ளோரும், அற்பவயதுள்ளோரும் மற்ற நக்ஷத்திரத்தில் இறப்பார்.

ஜென்மாதிபதி பாவாங்கிசத்தி லிருக்கில், கர்ப்பம் தரிக்கில், அற்பவயதாம். சுபாங்கிசத்திலிருக்கில் மத்திமவயதாம். ஜென்மாதி

பனே நல்லோர்காண, கர்ப்பத்தினில் தீர்க்கமுண்டாம். இவ்விதமாகக் கண்டு உரையும்.

சூரியன் உதையமான இராசிமுதல் காலையளவுங்கூட்டி அதனே எதிராகவெண்ணி இரண்டரையி லீந்தால் உரைலக்கினமாம். ஜென் மத்தோன்வீடு ஒற்றையாகில் சூரியன் முதலாம். ஜென்மவீடு இரட் டையாகில் ஜென்மமுதலாம்.

சரத்தில் சரமாகில் தீர்க்கமாம். ஸ்திரமாகில் மத்திபம். ஸ்திர மகில் ஸ்திரமாகில் தீர்க்கமாம். சரவாகில் மத்திபமாம். ஸ்திரத்தில் உபயம்பெறில் தீர்க்காயுளாம். உபயராசியில் உபயமாகில் மத்திபமாம். அதில் சரமாகில் வயதற்பமாம். உபயத்தில் தீர்க்கவயதாம். அல்லது பூரணவயதாம்.

திரிகோணகேந்திரங்களில் நல்லோர் நிற்க, ஜென்மாதிபதி குரு வோடு 4-ஆம் மிடத்தில் நிற்க, பிறந்தசாதகன் நூருண்டளவும் வயதுபெற்று யிருப்பன். ஜென்மாதிபதியோடு 8-ஆம் மாதிபன்கூடி 6-ஆம் மிடத்தில் சனிபார்க்க நிற்கில், வாலேவயதில் அரிட்டம்வரும். இலக்கினத்தில் அங்காரகனும், 8-ஆம் மிடத்தில் சந்திரனுமிருக்க, சனிகாண அரிட்டமாம்.

தீர்க்கவியாதி, அபமிருத்து இவைகளின் பலன்

அட்டமாதிபதியும் அங்காரகனுடன்கூடி 6-12-ல் இருக்கில், துஷ்டர்களின் ஆயுதத்தால் மரணம்வரும். இவர்களே இனிய கிரகங் கள் சூழ கண்டகாயப்படும். 8-ஆம் மாதின் வியத்திலும், 6-8-ல் பாம்புடன் கூடிநிற்கில், கள்ளர்களால் அரிட்டமுண்டாம். இலக்கினுதி யும் 8-ஆம் மாதியும் சேர்ந்து ஒருவீட்டில் நிற்கில் சலகண்டம் வரும்.

8-ஆம் மிடத்தாதியும் வாகனுதியுங் கலந்து 6-8-12-ல் சனி சத்துரு மனேயாகமேவ, வாகனங்களால் மரணம்வரும். 8-ஆம் மதிபன் சனி அங்கிசத்தில் வந்துநிற்க, மரத்திலேறி விழுந்திறப்பன் ஜென் மாதியும் 8-ஆம் மிடத்தோனும் நீசரங்கிசம் புகாமல் சனிவர காலா மிருத்துவாம்.

காலமூர்த்தியோடு 8-ஆம் மாதிபதியும் இலக்கினுதியும் கூடில் கல்லடியேனும் இடியேனும்பட்டு மரணமாவான். இனமான கிரகங் கள் சேர்த்து மட்டமாதி அங்கிசத்தில்சேர்ந்து பன்னிரண்டு 8-6-ம் இராகுநோக்க, குன்ம வியாதியினல் மரணமடைவான்.

ஜென்மாதிபதியோனும் அட்டமாதிபதியோனும் குளிகனேடு கூடி வியத்திலும், 6-8-லும் மேவிநிற்க, நடந்திடும்போது கரங்களில் பின்னப்பட்டு நலிந்து அந்த நோயினல் மடிவன். இவர்களேச் சுபக் கிரகங்களேக் காணில் கைகால் ஊனமாகயிருப்பான்.

ஜென்மத்தில் சனியும் குளிகனுங்கூடி நிற்க, வியம் 6-8-ல் சந்திரன் நிற்க மரணமாவான். சூரியனிருக்கும் புடத்தையும், கண்டனிருக்கும் புடத்தையுங் கூட்டி, அந்த இராசியினில் சூரியனிருக்க நோய்கொண்டு துன்பமடைவான்.

ஆதித்தனுட புடத்தையும், குளிகனுட புடத்தையுங்கூட்டிக் கடந்த இராசியில் சூரியன்வருங்காலத்தில் நலியுண்டாம். சந்திரன் புடத்தையும் குளிகன்புடத்தையும் கூட்டி கண்டராசியில் சந்திரன் வருங்காலம் கடுஞ்சுரம் வரும்.

ஜென்மாதிபதி 8-ஆம் மாதிபதியும்கூடி லாபத்தில் இலாபாதிபதியோடுகூடி நிற்க, இவர்களுடன் பாவரேனும், தீக்கோளேனும் வந்து கூடில் வருத்தத்துடன் உயிர்விடும்போது அரிகியிருப்பார்கள். இவன் தனக்கு இலாபதிசையில் மரணம்.

10-ஆம் மிடத்ததிபதி துர்ப்பலனுக மாரகாதி திசைவரில் பொசிப்புள்ளவர் பலனுய் இருவர்களுக்கும் விரோதமுடன் பகையாயிருக்கில் மரணம்.

4-ஆம் மாதிபதியுடன் 3 - ஆம் மாதிபதியுங்கூடி தனது வீட்டிலிருக்க, இவன் இறப்பது தாதைவாழும் பதியாம். வியத்திலும் 6-லும் இருக்கில் தூரதேசத்தில்போய் இறப்பான்.

பகலில் உதித்தானுக்கு குளிகன் உறைவீடாக 5-9-ல் சனி வருங்காலத்தில் இடுக்கமுண்டாம். இரவிலுதித்தால் குளிகனுக்கு 7-ஆம் மிடத்திலும், திரிகோணத்திலும் சனி வரும் நாளில் இந்த ஜாதகனுக்கு கண்டம்.

அஷ்டமஸ்தானுதிபதி சுபக்கிரகமாய் அஷ்டமத்தில் நின்ற கிரகமும், ஆயுட்காரகனுகிய சனியும், அஷ்டமராசிக்கதிபதியும் இம்மூன்று கிரகங்களும், தனலாபகேந்திர திரிகோணங்களில் நட்பாச்சி யுச்சம்பெற்று நிற்கினும், இந்த கிரகங்களுடன்கூடி நிற்கினும், இவர்கள் பார்க்கினும், இவர்களிருந்த இராசியாதிபதியும் இப்படிக் கொத்த இராசிகளிலிருந்தால் தீர்க்காயுள்.

நன்மையானவாழ்வு கூறுகின்றது

பாபக்கிரகங்கள் 3-6-11-ல் இருக்க, பிறந்த ஜாதகன் நன்மையுண்டாகி வாழ்வான்.

பாவதாரோகணம் சிரோவியாதி கூறுகின்றது

தேகாதிபதி இரவியுமாய் தேகலக்கினத்தில் யிருக்கினும் நோக்கினும் கிரி ஸ்தலத்திலே திரிகுவன்... சிரோவியாதி யுடையவனுகயிருப்பான்.

பரிமளாதி வஸ்திரகிரைய விக்கிரையங்களால் ஜீவனங் கூறுகின்றது

மேற்கூறியபடி மதியிருக்கில் ஸ்திரீசங்கமும், வெகு சங்க முண்டானவனுமாய்ப் பரிமளவஸ்திராதி கிரைய விக்கிரையங்களி னுலே ஜீவனஞ்செய்வான்.

குஜனுனல் அக்கினியால் பாத்தியமுடையவனுமாய்ச் சூரனு மாய் இரண வியாதிகளுமுண்டாய், ஆயுத அப்பியாசமுடையவனு மாய், குரூரனுமாய்ப் பாவியுமாய்த் திரிகுவான்.

புதனுனல் கணிதசாஸ்திர மறிந்தவனுமாய்ப் பிரமவீணனுமாய் அன்பும் அடக்கமுமுண்டாய் வியாபாரத்தினுலே வயிறு வளர்ப்பான்.

குருவானுல் சுயதேசத்திலே பிராமண வித்தியாப்பியாசனுமாய் சரீரம் அழகுண்டாய் வாழ்ந்திருப்பான்.

சுக்கிரனுனல் பிர்மகர்ப்பமுண்டாய் ஆயுள்கர்ப்ப முண்டாய் அருள்பெற்று வாழ்வான்.

வனசஞ்சாரங் கூறுகின்றது

சனி தேகாதிபதியாய்த் தேகத்தில் நிற்கினும், தேகராசியை நோக்கினும், இந்த ஜாதகன் வனத்தில் திரிகுவான்.

பரதேசத்தில் மரணங் கூறுகின்றது

அஷ்டமாதிபதியோடு ஒருவரில்லாமல் தாங்களேயிருந்து அந்த லக்கினமும் மகரமாய் கிரகங்களும் சரக்கிரகமானுல் பரதேசத்தில் மரணமடைவான்.

நிவாசஸ்தலங் கூறுகின்றது

ஜென்மலக்கினம் ஸ்திரலக்கினமுமாய் அந்த தேகாதிபதியும் அங்கேயிருந்தால் சுயதேசத்திலிருக்கப் பிராப்தியுண்டு.

அஷ்டமராசி உபயராசியானுல் சமீப கிராமத்தில் மரணம்.

அஷ்டமராசி சரராசியானுல் அன்னிய கிராமத்தில் மரணம்.

தேகாதிபதி சரராசியிலிருந்தால் பிறந்த ஜாதகன் தேசாந்திரந் திரிவான்.

ஸ்திரராசியானுல் சுயதேசத்திலும், உபையராசியானுல் உபய தேசத்திலும் மரணம்.

ஆயுள் கூறுகின்றனர்

அஷ்டமசந்தகிரகங்கள் மூவரும் நீசசத்துருக்களாய்ப் பாபராய் க்ஷீணராயிருக்க, இப்படியிருந்த கிரகங்களிட ராசியிலிருக்கினும், இவர்களுடன் கூடினும், நோக்கினும் இவர்களிருந்தபடி 6-8-12-ம்

மிடத்தி லிருக்கினும் இந்த ஜாதகனுக்கு ஆயுள் க்ஷீணம். அந்த அதிபதி இப்படி யிருக்கினும் ஆயுள் க்ஷீணமாம்.

மரணகாலங் கூறுகின்றது

அவர்கள் எந்த ராசியிலிருந்தார்கள் அந்த ராசிகாரணுக்கு நாச மெனக் கூறுகிறுர் இவர்கள் பார்வையுண்டானாலும் நசிக்கும்.

ஜெனனகாலத்தில் 10-ஆம் மிராசியாதிபதி 6-8-12-ஆம் மிடத்தி லிருந்தால் 12-ஆம் மிராசியாதிபதி மகாதிசை ஜெனனகாலத்திலே வந்தால் அந்த மகாதிசையிலே மரணமாவான்.

மரணதிக்குகள் கூறுகின்றது

அஷ்டமாதிபதி ஜென்மலக்கினத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்று யிருந்தால் ஆயுள் முக்கால்வரிசையெனக் கூறுகிறுர். பகை நீசமாகில் அற்பமிட்டம்.

தேகாதிபதியும் அஷ்டமாதிபதியும் கூடியிருந்தபோது அவ ருடன் எத்தனைகிரகங்கள் கூடியிருந்தார்கள். அந்த கூடியிருந்த இராசியாதிபதியும் அங்கிருக்க அந்தஸ்தானம் இலாபஸ்தானமாக அந்ததேகாதிபதியுடன் எந்தராசியாதிபதிகள் கூடியிருந்தார்கள் அத் தனைபேரும் மரணகாலத்தில் அண்டையில் கூடியிருப்பார்கள்.

இந்த அதிபதிகள் கூடியிருந்த இராசி எந்ததிக்கு அந்ததிக்கு மரணம். இதுகளெல்லாங் கிரகவலியறிந்தும் கண்டுசொல்வது.

பூரண ஆயுள் கூறுகின்றது

அஷ்டமாதிபதி உச்சனுகினும் அல்லது சுபக்கிரகங்கள் அவ ரைப்பார்க்கினும் பூரண ஆயுளோடு யிருப்பான்.

எட்டாம் பாவம்

முற்றிற்று.

4-ம் மிடம் மீனம்-கேந்திர தாயார் கல்வி பூமி பந்து சுக வியாபாரம்	5-ம் மிடம் மேஷம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்	6-ம் மிடம் ரிஷபம்ரோகம் சத்துருசோரம் சிறை வழக்கு	7-ம் மிடம் மிதுனம்கேந்திரம் களத்திரம் காமம் மாரகம் நித்திரை
3-ம் மிடம் கும்பம் சகோதரம் வெற்றி கேள்வி காது அடிமை	9-வது தனுசு லக்கினமானால் இந்தச் சக்கரத்தைக் கொண்டு இராசி விவரம் அறிந்துகொள்ளவும்.		8-ம் மிடம் கடகம் ஆயுள் தீர்க்க வியாதி அபமிருத்து
2-ம் மிடம் மகரம் நேத்திரம்வாக்குதனம் முகம் குடும்பம்			9-ம் மிடம் சிங்கம் தருமம் பிதா பிரபுத்துவம் பாக்கியம் குரு
தனுசு லக்னம் கேந்திரம் ஆண் ராசி உபயராசி நாற்கால் ராசி கால் உதயம் இராகு செவி	12-ம் மிடம் விருச்சிகம் விரையம் சயனம் மோக்ஷம் அனித்தியம் நோய்	11-ம் மிடம் துலாம் சிரேஷ்டப்பிராதுர் இலாபம் இஷ்டம்	10-ம் மிடம் கன்னி கேந்திரம் கருமம் சீவனம் கீர்த்தி ஆதாரம்

ஒன்பதாம்பாவம்

பாக்கியபலன்

9-ஆம் ராசியாதிபதியும், பாக்கியகாரகனுகிய குருவும், பாக்கியஸ்தானத்திலிருந்தவரும், ஆகிய மூன்றுபேரும் சுபக்கிரகமுமாய் நட்பாட்சி யுச்சம்பெற்று எவ்வண்ணராயிருக்க, இந்த கிரகங்களுடன் கூடியிருக்கினும், இப்படிக்கொற்றவர்கள் பார்க்கினும், இவர்கள் தனலாபகேந்திர திரிகோணங்களில் சேரினும், இவர்களிருந்த ராசியாதிபதி கிரகங்களும், இவர்களைப்போலிருந்தால் பிறந்த ஜாதகன் பட்டவர்த்தனனுவான். அல்லது அவனுக்குச் சமானமான ஐஸ்வரியனுக யிருப்பான்.

இந்த கிரகங்கள் மூன்றுபேருட மகாதிசைக்குள்ளே இலாபாதிபதி புசிக்கிறபோது மகாபாக்கியஞ் சித்திக்கும்.

இலக்கினத்திற்கு பாக்கியராசியாகிய 9-ஆம் ராசியாதிபதியுடனுகிலும், பாக்கியகாரகனுகிய குருவுடனுகிலும், பாக்கியஸ்தானத்திலிருந்து. மித்துருகிரகத்தினுடனுகிலும், இவனிட்டலாபஸ்தானமாகிய

பதினோராமிடத்ததிபதி நட்பாட்சியுச்சம்பெற்று பாக்கிய தனலாப கேந்திர திரிகோணங்களிலிருந்தால் லாபாதிபன் பாக்கியாதிபன் இவர்களிருவர் மகாதிசையிலும், கீர்த்தியும் ஐஸ்வரியமும், அர்த்த லாபமும் உண்டு.

இவர்களிருந்த ராசி பாரியஸ்தானமானால், பாரியலாபமும், வாகனாதியும், பூஸ்திதிகளுமுண்டாய் வாழ்வான்.

பாக்கியாதிபதியும், லாபாதிபதியும் நட்பராய்த் தனஸ்தானத்திலிருந்தால் வெகு தனலாபமுண்டு.

தேகராசியிலாகிலும், தேகாதிபதியுடனாகிலும்கூடி நட்பாக நின்றால் தேகமிருக்குமட்டும் அர்த்தலாபமும், பௌஷ்யபாக்கியமும் உண்டாம்.

தேகாதிபதி, பாக்கியாதிபதி, லாபாதிபதி இந்த மூவரும் வாகனஸ்தானமான 4-ஆம் ராசியில் கூடியிருந்தாலும், இந்த அதிபதிகளுடன் 9-ஆம் ராசியில் கூடியிருந்தாலும், பார்வையுண்டானாலும் இவன் தேகமுள்ளமட்டும் நரவாகனமுண்டு.

தேகாதிபதிக்கு குரு நட்பாக, வாகனஸ்தானத்தில் தான் அல்லது வாகனாதிபதி குருவுமாய்த் தேகாதிபதியுங்கூடி நட்பராய் வாகனஸ்தானமான 4-ஆம் ராசியிலிருந்தால் பூரணநரவாகன பிராப்தியுண்டாம்.

இலக்கினாதிபதியும், புத்திரஸ்தானாதிபதியும், 4-ஆம் ராசியாதிபதியும் நட்பராய் 4-ஆம் ராசியிலிருந்தால் பிதுராச்சியம் அத்தனையும் இந்தஜாதகனுக்கு ஆயுளுள்ளமட்டும் சித்திக்கும்.

புத்திரஸ்தானாதிபதி பிதுர்ஸ்தானமாகிய 9-ஆம் மிடம் பாக்கியஸ்தானத்திலிருந்தால் இந்த புத்திரனும் பிதாவும் அன்னியோன்னியமாக இருப்பான்.

இலாபஸ்தானத்திற்குக் கர்த்தனும், பாக்கியஸ்தானத்திற்குக் கர்த்தனும், இந்த யிருவரும் உத்தம ஸ்தானத்தி லிருந்தால் பூர்வ பாக்கியம் ஐஸ்வரியமுள்ளதெல்லாம் இந்த ஜாதகன் அனுபவித்துக் கொண்டு வருவான்.

பாக்கியஸ்தானத்திற்கும், லாபஸ்தானத்திற்கும் கர்த்தரான யிருவரும், லர்ப பாக்கிய கேந்திர திரிகோணங்களிலிருக்க, அந்த ராசியாதிபதியும் உத்தம ஸ்தானங்களிலிருக்க இப்படியிருந்தால் பூர்வபாக்கியத்தைப் பார்க்கிலும், ஐயிஸ்வரியம் கிடைக்கும்.

பாக்கியஸ்தானத்திற்குக் கர்த்தன் குரு சுக்கிரன் புதன் மதி இவர்கள் வலிமைபெற்று அந்த இராசிகளிலே ஆட்சியாயிருந்தால் சற்குருசேவையும் தனபாக்கியமும், சகலபாக்கியமு முண்டாம். பிதுர்பாக்கியமும் குரு மாதுலம் இத்தனையும் இந்த ஜாதகனுக்குச் சம்பூரணமாகக் கிடைக்கும்.

பிதுர்பாக்கியங் கூறுகின்றது

பிதுர் ராசியான 9-ஆம் மிராசியாதிபதி உத்தமனுக இலாபபாக்கியஸ்தானங்களில் நட்பாட்சி யுச்சம்பெற்றிருக்க, அந்த அதிபதி ராசிகளில்கூடி யிருந்தாலும் பிதுர்பாக்கிய மூண்டாம்.

பாக்கியாதிபதியும் பாக்கிய இராசியும் எந்த ஜாதியோ அந்த ஜாதியை யொத்தவர்களால் பாக்கியங் கிடைக்கும்.

பாக்கியாதிபதியுடன் கூடியிருக்கின்ற கிரகம் லாபாதிபதியுமாய் லாபாதிபதிக்குத் ஸ்திரக்கிரகமாக இவர்க ளிருந்தராசி உத்தமஸ்தானமாக இந்த ராசியாதிபதியும் இந்தப்படியிருந்தால் சூத்திரகிரக முச்சமானல் இந்த ஜாதகனுக்குச் சூத்திரனுலே பாக்கியங் கிடைக்கும்.

9-ஆம் ராசியாதிபதியுடன் கூடியிருந்தகிரகம் குருவாய் குரு இலாபாதிபதியுமாய் பிரபல லாபாதிபதிகள் பாரியஸ்தானத்தி லிருக்கப் பாரியஸ்தானுதிபதி லாபபாக்கியத்திலிருந்தால் இவனுடைய பாக்கியம் இந்தஜாதகன் ஆயுளுள்ளளவும் பாக்கியஞ் சித்திக்கும்.

இலாபஸ்தானுதிபதி சுபனுமாய் இந்த பாரியஸ்தானுதிபதிக்கு இவன் தனஸ்தானம் உச்சராசியாய் அங்கே இந்த அதிபதியிருந்தால் இவனிடபாக்கியம் ஐயிஸ்வரியம் அர்த்தலாபமும் இந்த பாரிக்கு விர்த்தியாகும்.

இந்தப்படி இராசி 12-க்கும் அதிபதிகளுந் தேறியிருந்தால் தனலாபம் பூமி வாகனம் இப்படிக்கொத்த இடங்களில் சேர்ந்திருந்தாலும், இந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும், அவரவர் இராசியிலே ஆட்சியாயிருந்தாலும் அவர்களுக்குத் தனப்பிராப்தியுண்டாம்.

பாக்கியஸ்தானுதிபதி, லாபஸ்தானுதிபதி, தேகாதிபதிகள் தனலாபகேந்திர திரிகோணங்களில் நிற்கில், போகசம்பன்னனு யிருப்பான்.

9-ஆம் மிடத்தில் இரவி-மதி-நிற்கில், ஐஸ்வரியலாப முண்டாம்.

செவ்வாயாகில் சேவகவிர்த்தி பூமி லாபமுண்டாம்.

புதனுகில் வித்தை - தனம் - சுகம்-பந்து-பாக்கியமு முண்டாய் ஒருவருக்கு இட்டுண்பான்.

குருவாகில் ஐஸ்வரியம்-புத்திரசுகம்-பாக்கிய சம்பத்துண்டாம்.

சுக்கிரனுகில் பூமிலாபம் - வஸ்திராலங்காரமுண்டு. கோவர்த்தனம் சமஸ்தபாக்கியமு முண்டாம்.

சனியாகில் கலகம் சோரதாதிகள் விர்த்தியுண்டாம்.

குருபலன் கூறுகின்றது

சுபக்கிரகம் சுபக்கிரகராசியிலிருந்தாலும், உத்தமாதிபதியுடன் கூடியிருந்தாலும், அவருடைய பார்வையுண்டானலும் சுபபலன். ஆதியிலேயீனம், அனித்தியத்திலே பிரபலம்.

இந்த தர்மஸ்தானகிரகம் எந்த ஜாதியோ அந்த ஜாதியே குரு ஸ்தானம்.

9-ஆம் மிடத்ததிபதியும், அதிலிருந்த கிரகமும் குருவானால், இந்தஜேகி பிராமணன்கையி லுபதேசமும், வித்தையும், பிராமண முகாந்திரத்தில் வரும் சமஸ்தபாக்கியம்.

சுக்கிரனானால் பிராமணகுரு இவன்கையில் உபதேசமாகும். இப்படி எந்தெந்தக் கிரகமானாலும் அந்தந்த கிரகத்தை அடுத்த ஜாதியே குருவுபதேசமும் அந்தசாதி மந்திரங்களு முண்டாம்.

இந்த கிரகம் தனலாபகேந்திர திரிகோணங்களிலிருந்தால், மேற்கூறிய உபதேசவித்தை பலிக்கும்.

6-8-12-ஆம் மிராசியிலே அஸ்தமானமாயிருந்தால் மேற்கூறிய பலன் பலியாது.

தருமம் கூறுகின்றது

தர்மஸ்தானக்கிரகம் குருவானால், பிராமணர்க்கே தான தருமம் பண்ணிக்கொண்டிருப்பான்.

சுக்கிரனானால், பிராமணருக்குத் தர்ப்பணமும், ஆயுத அப்பியாச முடையவனுமா யிருப்பான்.

இப்படி அந்தந்த தர்மஸ்தானகிரகம் எந்தெந்தக்கிரகம் இராசியாகின்றதோ அந்தக்கிரகசாதி தர்மத்தில் நடக்கும் அந்தந்தசாதி தர்மத்திலேதான் தர்மம்பண்ணுவான்.

அகங்கெடும் நஷ்டங் கூறுகின்றது

9-ஆம் மிராசியாதிபதியும், பாக்கியகாரகனாகிய குருவும், பாக்கிய ஸ்தானத்திலிருந்த கிரகமும், இந்த மூன்றுபேரும் நீசசத்துருக்களாய்ப் பாபக்கிரகங்களாய், நீசசத்துரு ராசிகளிலிருக்கினும், இப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடியிருக்கினும், இவர்கள் பார்க்கினும், இவர்கள் ராசியில் நிற்கினும், 6-8-12-ஆம் மிராசியில் நிற்கினும், இந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும், இவர்கள் பார்வையுண்டானாலும் பாக்கிய நஷ்டம். தனநஷ்டம். குருநஷ்ட முண்டாம்.

நிர்ப்பாக்கியன் இரந்துண்பானெனக் கூறுகின்றது

மேற்கூறிய இடங்களிலிருந்த தனாதிபதியும் மேற்கூறியபடியிருந்தால் இந்த ஜாதகன் நிர்ப்பாக்கியனும் இரந்துண்பவனுமாக யிருப்பான்.

அச்சம்-நோய்-சோரதாரன்-கோள்சொல்லுதல் கூறுகின்றது

9-ஆம்மிராசிக்கு 9-ஆம் மிராசியிடத்ததிபதிகிரகமும், சூரியனுடன்கூடியிருந்தாலும், சனி-ராகு-கேது-குஜன்கூடியிருந்தாலும் இந்த ஜாதகன் அச்சமும்நோயும் சோரதாரனுமாய்க் கோள் சொல்வான்.

3-ம் மிடம் மீனம் சகோதரம் வெற்றி கேள்வி காது அடுமை	4-ம் மிடம் மேஷம் கேந்திரம் தாயார் கல்வி பூமி பந்து சுகம் வியாபாரம்	5-ம் மிடம் ரிஷபம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் புண்ணியம்	6-ம் மிடம் மிதுனம் ரோகம் சத்துரு சோரம் சிறை வழக்கு
2-ம் மிடம் கும்பம் நேத்திரம் வாக்கு தனம் முகம் குடும்பம்	10-வது மகர லக்கினமானால் இந்தச் சக்கரத்தைக் கொண்டு இராசி விவரம் அறிந்துக்கொள்ளவும்		7-ம் மிடம் கடகம் கேந்திரம் களத்திரம் காமம் மாரகம் நித்திரை
மகர லக்கினம் கேந்திரம் பெண்ராசி சரராசி பாக்கும் ராசி இராச் செவிடு காலுதையம்			8-ம் மிடம் சிங்கம் ஆயுள் தீர்க்க வியாதி அபமிருத்து
12-ம் மிடம் தனுசு விரையம் சயனம் மோக்ஷம் அனித்யம் நோய்	11-ம் மிடம் விருச்சிகம் சிரேஷ்ட பிராதுர் இலாபம் இஷ்டம்	10-ம் மிடம் துலாம் கேந்திரம் கருமம் சீவனம் கீர்த்தி ஆதாரம்	9-ம் மிடம் கன்னி தருமம் பிதா பிரபுத்துவம் பாக்கியம் குரு

பத்தாம்பாவம்

கர்மபலன்

10-ஆம் இடத்தில் அஷ்டமஸ்தானாதிபதி பாபருடன் கூடிநிற்க 10-ஆம் யிடத்தில் பலம்பெற அவரைப் பாபர்பார்க்க, துர்க்கருமமுண்டாம். 10-ஆம் யிடத்ததிபன் பலவானாய் சுபக்கிரகங்களுடன் கூடி 7-ஆம் யிடத்திலிருக்க, 4-ஆம் யிடத்தில் ஜென்மாதிபனிருக்க, கர்மம் முன்னாகுமென்றறிக.

சுக்கிரனும் கர்மஸ்தானாதிபதியும் தனஸ்தானாதிபதியும் புதனும் இவர்கள்கூடி கர்மஸ்தானமாகிய 10-ஆம் யிடத்திலிருக்க, பிறந்த ஜாதகன் எக்கியம் பண்ணுவான்.

குருவாகிலும், சுக்கிரனாகிலும், கர்மஸ்தானத்திலிருக்க, அந்த ஸ்தானம் அவர்களுக்கு உச்சஸ்தானமாகயிருக்க, பிறந்த ஜாதகன் எக்கியம் பண்ணுவான்.

இராகு 10-ஆம் யிடமாகிய கர்மஸ்தானத்திலிருக்க, அல்லது சூரியனிருக்கப் பிறந்த ஜாதகனுக்குக் கங்காஸ்நானம் லபிக்கும். கர்மஸ்

தானம் மீனமாகயிருக்க, அதில் வியாழனுவது, சுக்கிரனுவது, புதனு வது அங்காரகனுடனே கூடியிருக்க, கங்காஸ்நானம் லபிக்கும்.

கர்மஸ்தானமாகிய 10-ஆம் யிடம் சலராசியாக யிருக்க அதில் வியாழனுவது சந்திரனுவது நிற்க, கேந்திர ஸ்தானுதிபதி 10-ஆம் யிடத்தானுடனே சந்திரனுவது சுக்கிரனுவதுகூடி சுயக்ஷேத்திரங் களி லிருக்க, வியஸ்தானமாகிய 12-ஆம் யிடத்தில் புதனிருக்க, பாக்கி யாதிபதி கேந்திரத்திலிருக்கப் பிறந்த ஜாதகன் கங்காஸ்நானம் பண்ணுவான்.

சகோதரன் தானமாகிய 3-ஆம் யிடத்தில் சந்திரன் நிற்க, அல் லது கர்மாதிபதியுடனேகூடப் புண்ணியவானுகிய புதனுவது குரு வாவது செவ்வாயுடனே கூடியிருக்க, அல்லது பார்க்க, திருப்பணி முடிப்பான்.

கர்மாதிபதியுடனே 4-ஆம் இடமுடையவன் கூட பிறந்த ஜாதி கன் சீரணமாகயிருப்பான். திருப்பணிகள் செய்வான். கர்மேச னுடனே சந்திரன் கூடினுல் குளம் தடாகம் வெட்டிவைப்பான்.

கர்மஸ்தானமாகிய 10-ஆம் யிடத்தில் புதனிற்க, பாக்கியாதிபதி யைப் பாபக்கிரகங்கள் பார்க்கப் பிறந்த ஜாதகனுக்கு எக்கியம் லபிக்கும்.

கர்மாதிபதியுடனே சந்திரன்கூடியிருக்க, பாக்கியேசன் கேந்திர திரிகோணத்திருக்க, இராகு-கேது இவர்களிருவரில் ஒருவனேனும் பாராமல் கூடாமலிருக்கப் பிறந்தஜாதகன் எக்கியத்திற்குக் கர்த்தாவா யாவான்.

கர்மாதிபதி 6-8-ல் நீசமாக நிற்க, பாபக்கிரகங்கள் பார்க்க, இராகுகூட, பிறந்தஜாதகன் எக்கியம்பண்ண நிச்சயிக்கும்போதெல் லாம் விக்கினம்வரும்.

தர்மஸ்தானமாகிய 9-ம்மிடத்தில் அங்காரகன் நிற்க சுபக்கிரகம் 4-ஆம் யிடத்தில் நிற்க, சோபனுங்கிசமேற, பிறந்த ஜாதகன் ஆக் கினைப்படுவான்.

10ஆம் யிடத்தில் சூரியனிற்க செவ்வாயுடனேகூட, அல்லது அவர்கள் கேந்திரங்களிலிருந்து அன்னியோன்யமாகப் பிறந்த ஜாதகன் குருராக்கினைப்படுவான்.

10-ஆம் யிடத்தில் சனி நிற்க, அஷ்டமாதிபதிகூட, அவர் குரு ராங்கிசமேற, பிறந்த ஜாதகன் தூரதேசத்தில் ஆக்கினைப்படுவான்.

கர்மஸ்தானத்தில் இராகும்-குளிகனும் நிற்க, அஷ்டமாதிபதி யுடனே இராகுகூட, 9-ஆம் யிடத்தான் நீசமாகி குருராங்கிசமேற, பிறந்த ஜாதகனுக்கு மேற்சொல்லியபலன் நடக்கும்.

கர்மாதிபதி சுபனுகக் கேந்திரத்தில் நிற்க, குருராசஷ்டியங்கிச மேற, பிறந்த ஜாதகன் ஆக்கினைப்படுவான்.

சுகமாதிபதியுடனேகூட, குரு-சுக்கிரன் பார்க்க, பர்வதாங்கிச மேற, பிறந்த ஜாதகன் கீர்த்தியுடையவன்.

கீர்த்திஸ்தானமாகிய 10-ஆம் யிடத்ததிபதி புதனாக, சுவக்ஷேத்திரமித்ரு வீடுகளிலிருக்க, சவுமியாள் சஷ்டியங்கிசமேற, பிறந்த ஜாதகனுக்கு கீர்த்தியுண்டாம்.

கர்மாதிபதி தேவலோகாங்கிசமேற, அல்லது சிங்காங்கிசமேற சந்திரனுடனே கூட, கீர்த்தியுண்டாம்.

10-ஆம் யிடத்தில் பாபகிரகமில்லாதிருக்கக் கர்மாதிபதி பெலத்திருக்க, சுபக்கிரகங்கள் சஷ்டியங்கிசமேற, பிறந்த ஜாதகன் கீர்த்தியுடையவனாவான்.

கர்மாதிபதி நீசனாகயிருக்க, சனியும் மாந்தியுங்கூட செவ்வாய் பார்க்கப் பிறந்த ஜாதகன் அபகீர்த்தியுடையவனாவான்.

10-ஆம் இடமுடையவன் சோக்ஷேத்திரனாக, அல்லது சுபர் ளுடனே யிருக்கப் பிறந்த ஜாதகன் இங்கிதவானாகிய ராஜாவாவான்.

10-ஆம் யிடத்தில் பாவிகள் இருக்க, அல்லது பார்க்க, செவ்வாய் கூடியிருக்க, ஜெனனமானவனுக்குக் குரூரவாக்கினை வரும்.

10-ஆம் யிடமுடையவன் நீசனாக, பாவிகள் பார்க்கப் பாவராசி தசம்ஏற, ஜெனனமானவனுக்கு மானபங்கம் நேரிடும்.

கர்மாதிபன் சந்திரனுடனேகூட, சவுமியாள் பார்க்க, சுபாள் கேந்திர திரிகோணத்தி லிருக்க, ஜெனனமானவன் சன்னியாசியாவான்.

கர்மாதிபதியுடனே வியாழன்கூட, பார்க்க, அல்லது கேந்திர திரிகோணத்திலிருக்க, அல்லது இலக்கினத்திற்கு 4-ஆம் யிடத்திலிருக்க ஜெனனமானவன் முனீஸ்வரனுக்கு ஒப்பாக யிருப்பான்.

இலக்கினாதிபதி அங்காரகனாக, பாக்கியாதிபதியாலே கர்மாதியைப்பார்க்க அல்லது கூடிநிற்க, ஜெனனமானவன் முனீந்திரனாவான்.

கர்மாதிபதிக்கு சனி திரேகாணமாக, சந்திரனுடனே கூடிநிற்க அல்லது சனியுடனேகூட, கர்மாதிவீட்டு அங்கிசமடுக்க, சந்திரனுடனேகூட, ஜெனனமானவன் தேவேந்திரனுக்குச் சமானமானவனாவான்.

மாதுருஸ்தானமாகிய 4-ஆம் யிடமுடையன் சந்திரனுடனே கூட, வியாழன் பார்க்க, ஜெனனமானவன் மிருத்யுயோகமுடையவனாவான்.

பத்தாம் பாவபலன்

முற்றிற்று.

2-ம் மிடம் மீனம் நேத்திரம் வாக்கு தனம் முகம் குடும்பம்	3-ம் மிடம் மேஷம் சகோதரம் - வெற்றி கேள்வி காது அடுமை	4-ம் மிடம் ரிஷபம் கேந்திரம்-தாயார் கல்வி, பூமி பந்து சுகம், வியாபாரம்	5-ம் மிடம் மிதுனம் புதல்வர் மாதுலன் பிதா ஞானம் - புண்ணியம்
கும்ப லக்கினம் கேந்திரம் ஆண்ராசி ஸ்திரராசி தலையுதயம் பகல்மூட இருகால் ராசி	**11-வது கும்ப லக்கினமானல் இந்தச் சக்கரத்தைக்கொண்டு இராசி விவரம் அறிந்துக் கொள்ளவும்**		6-ம் மிடம் கடகம் ரோகம் சத்துரு சோரம் சிறை வழக்கு
12-ம் மிடம் மகரம் விரயம் சயனம் - மோக்ஷம் - அனித்தியம்-நோய்			7-மிடம் சிங்கம் கேந்திரம்-களத்திரம்-காமம்-மாரகம்-நித்திரை
11-ம் இடம் தனுசு சிரேஷ்டப் பிராதுர் இலாபம் · இஷ்டம்	10-ம் மிடம் விருச்சிகம் கேந்திரம் கருமம் சீவனம் கீர்த்தி ஆதாரம்	9-ம் மிடம் கன்னி ஆயுள் தீர்க்கவியாதி - அபமிருத்து	8-ம் மிடம் துலாம் பிதா தருமம் பிரபுத்துவம் - பாக்கியம்-குரு

பதினோராம்பாவம்

த ன லா ப ம்

சுபக்கிரகங்கள் மத்தியிலே லாபாதியிருக்கப், பாக்கியாதிபதியாலேபார்க்க, பர்வதா அங்கிசமேற, ஜெனனமானவன் இலாபவிர்த்தியுடையவனுக யிருப்பான்.

இலாபாதிபதியும் திசாதிபதியும் சுபனுகயிருக்க, கர்மாதிபதியாலே பார்க்கப்பட, ஜெனனமானவன் தனலாபமுடையவனும்.

இலக்கினுதிபதி உச்சமான கிரகங்களுடன்கூட, ஜெனனமானவன் தனலாபமுடையவனுவான்.

இலாபேசன் 4-ஆம்மிட முடையவனுடனே கூடிநிற்க, ஜெனனமானவன் கர்மமுடையவனுவான்.

2-ஆம்மிடம் சுக்கிரன்வீடாகப் பாக்கியாதிபதிபார்க்க, ஜெனனமானவன் தனலாபமுடையவனுக வாழ்வான்.

இலாபஸ்தானமாகிய 11-ஆம்மிடத்தில் பாவிகளிருக்க, அல்லது பார்க்க, இலாபாதிபதி குரூரசஷ்டியம்சிசமேற, ஜெனனமானவனுக்கு தனலாப மில்லையாம்.

வேறு ஆயுள்பலன்

இரவிமதிக ளிருவரும் இலாபக்கிரகங்களெனப்பெயர். இவர்களும், இந்தலாபஸ்தானத்திலிருக்கும் கிரகங்களும், இலாபஸ்தானாதிபதியும் நட்பாட்சியுச்சம்பெற்றும், பெலாஷ்டிகராய் உத்தமஸ்தானங்களிலிருக்க, அல்லது இந்தஸ்தான கிரகங்களுடன் கூடியிருக்கினும், இவர்கள் பார்க்கினும், இவர்களிருந்த இராசியாதிபதி கிரகங்களும், தனலாபகேந்திர திரிகோணங்களிலிருந்தால், இந்த ஜாதகனுக்கு ஆயுளும், ஐஸ்வரியமும், வெகு இராஜ்ஜியமும் உண்டாம்.

கிருஷிஸ்தானாதிபதி 3-ஆம் மிராசியி லிருக்கினும் 3-ஆம் மிராசியாதிபதியுடன்கூடி நட்பராயிருந்தால், இந்தஜாதகனுக்கு பிதுர்லாபமும், ஐஸ்வரியமும், மோக்ஷத்திற்கினியவாசமும் உண்டாம்.

மதியுடன் குரு-சுக்கிரன் - இலாபாதிபதியாய்க்கூடியிருக்கினும், இவர்கள் பார்க்கினும், வெகு ஐஸ்வரியமும், தனலாபமும், தானியலாபமும், வஸ்திரலாபமும், வாகன முதலாகிய வஸ்துலாபமும், இந்த ஜாதகனுக்குச் சம்பூரணமாக உண்டாம்.

இலாபாதிபன் எந்தஸ்தானகிரகமோ அந்த கிரகத்தையாதல் தனலாபஸ்தானத்தையாதல் சுபக்கிரகம் பார்க்கினும், நிற்கினும், ஜெனனமானவனுக்கு உத்தமபலன்.

இலாபஸ்தான கிரகம் உச்சஸ்தானமானால் முக்கால்வரிசை பலன் கொடுக்கும்.

இலாபாதிபதி நட்பனாக, தேகலக்கினத்திலாதல், தேகாதிபதியுடனாதல்கூடி நட்பராயிருந்தால், ஜெனனமானவனுக்கு ஐபிஸ்வரியமும், அர்த்தலாபமும், தேகபுஷ்டியும், காந்தியும், சந்தோஷமும், பூரண ஆயுளுடையவனுமா யிருப்பான்.

இந்த லாபாதிபதி மித்துருவாய் தனஸ்தானத்தில் நிற்கினும் அல்லது தனாதிபதியுடன் கூடினும் நட்பராயிருந்தால் அப்போது ஜெனனமானவனுக்குத் தனலாபமும் சௌபாக்கியமும் வெகுசம்பத்தும் உண்டாகும்.

இலாபாதிபதி நட்பாட்சி யுச்சமாய் பிராதுர்ஸ்தானத்தில் நிற்கினும் இராசியாதிபதியுடன் கூடி நட்பராயிருந்தால் இந்த ஜாதகனுக்கு பிரதாபலாபமும் ஐஸ்வரியமு முண்டாய் மோகத்திற் கினியவனாய் இருப்பான்.

பிராதுர்ஸ்தானாதிபதியும் இலாபாதிபதியும் தேறி நட்பராய்ப் பிராதுர்ஸ்தானத்தி லிருக்கில் இந்த ஜாதகனுக்குப் பிராதுர்லாபமுண்டு.

தேகாதிபதி பிரபலனுகயிருக்கத் தேகியிட லாபாதிபதி பிராதுர்ஸ்தானத்திலிருக்க பிராதுர்ஸ்தானுதிபதி க்ஷீணனுயிருக்க ஜெனனமானவன் தனத்தை இந்த பிராதுரு புசிப்பான்.

பிராதுராதிபதி பிரபலனுக யிருக்கத் தேகாதிபதி க்ஷணனுயிருக்கத் தேகியிட லாபாதிபதி பிராதுருஸ்தானத்திலிருந்தால் இந்த பிராதுருதனத்தை இந்த ஜாதகன் புசிப்பான்.

இலாபாதிபன் பிராதுருஸ்தானம் பூமிஸ்தானங்களில் மித்திரனுகயிருக்கினும் அல்லது 4-ஆம் ராசியில் இந்தப்படி இவனுக்கு நட்பனு யிருந்தாலும் 4-ஆம் மிடத்ததிபனும் கூடியிருக்கினும் அல்லது உத்தமஸ்தானங்களிலிருக்கினும் உத்தமஸ்தானுதிபதி கிரகங்களுடன் கூடி பிரபலனுயிருக்கினும், இந்த ஜாதகனுடைய சகோதரனுக்கு வாகனசௌக்கியமும் வித்தையும், புத்தியும் சம்பூரணமாக வுண்டாம். ஆனுல் இந்தலாப்திபன் பிரபலனுக யிருக்கவேண்டும்

இலாபாதிபன் எந்தஸ்தானத்தி லிருந்தானே அந்த ஸ்தானத்திற்கடுத்தபேர்களிருந்தால் அந்தந்த ஸ்தானததிற் கடுத்தபேர் ஐயிஸ்வரியமும் அர்த்தலாபமும் இந்த ஸ்தானுதிபதிக்குக் கொடுக்கும்.

இலாபாதிபன் சத்துருஸ்தானத்தில் பிரபலனுக யிருக்க சத்துருஸ்தானுதிபன் பலம் க்ஷீணனுமாயிருந்தால் அந்தச் சத்துருதனம் இந்த தேகாதிபதிக்குச் சேரும்.

இலாபாதிபன் பகை நீசட்சீணனுய் சத்துருஸ்தானத்திலிருக்க இந்ததேகியின் ஐஸ்வரியமும் அர்த்தலாபமும் சத்துருவுக்கே சேரும்.

தனஸ்தானுதிபதி லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்று நிற்கில் ஜெனனமானவன் வெகுதனந்தேடி வாழ்வான்.

இலாபாதிபதி பிதுர் ஸ்தானமாகிய 9-ஆம் மிடம்சேர்ந்தால் இவன் பிதா தேடின தனத்தைப்பார்க்கிலும் அதிகமாகத் தேடுவான்.

புத்திரஸ்தானுதிபதி லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்றுச் சேரில் பிறந்த ஜாதகனுக்கு வெகுபுத்திரரும் புத்திரிகளும் உண்டாம்.

6-8-12-ம் மிடத்துக் கிரகங்கள் இப்படி லாபஸ்தானத்தி லிருந்தால் தங்கள் திசையில் தங்கள் சம்பந்தமான பலன்களை நன்மையே பண்ணுவார்கள்.

பாரியஸ்தானமாகிய 7-ம் மிடத்ததிபதி பிரபலனுய் லாபஸ்தானத்தில் சேர்ந்தால் அந்த லாபஸ்தானத்தில் எத்தனை கிரகம் நட்பராய்க்கூடியிருந்தார்களோ அத்தனை பாரியர்கள் இந்த ஜாதகனுக்கு உண்டாம்.

இந்தப்படி அவரவர்களுக்கு 12-பாவத்திற்கும் இலாபாதிபன் இருக்கும்வகை நன்மை தீமை பார்த்து பலன் காண்பது.

இரவிமதிகள் லாபாதிகளானல் சிங்காசனன் ஆவுலனண்டை இந்த ஜாதகன் ஜீவிப்பான்.

மேற்கூறியபடி அங்காரகனுனல் வலிவினல் தனம் வரும், பூமியினுலுண்டாம்.

மேற்கூறியபடி புதனுனல் வித்தையினுலும், குமாரர்களாலும், பந்துக்களாலும், கணிதசாஸ்திர லிபிகளாலும் இந்த ஜாதகனுக்கு தனம்வந்து சேரும்.

மேற்கூறியபடி குருவானல் தன்புத்தியினுலும், மக்களாலும், பிரதானிகளாலும், வேதாப்பியாசங்களாலும் இந்த ஜாதகனுக்கு லாபங்கிடைக்கும்.

சுக்கிரனுனல் பிரதானிகளாலும், ஸ்திரீஜனங்களாலும், மிருகாதிகளாலும், வஸ்திரங்களாலும், நவரத்தினங்களினல்-கோவு-அசுவ கோஜாதி விக்கிரயங்களினுலும் இந்த ஜாதகனுக்கு ஐஸ்வரியமும், அர்த்தலாபமும் உண்டாம்.

சனியானல் சூத்திரர்களாலும், ஈனவிர்த்தியினுலும் ஸ்தான பேதத்தினுலும் வனவிருட்சத்தில் காஷ்டகிரய விக்கிரயங்களினுலும், சோரபுத்தியாலும் இங்கிசைகளிலும், ஈனரிடத்துச் சேவகத்தினுலும், இந்த ஜாதகனுக்கு ஐஸ்வரியமுண்டாம்.

தேகாதிபதியும், இலாபாதிபதியும் நட்பாராய்க்கூடி லாபஸ்தானத்திலாயினும் தேகஸ்தானத்திலாயினும் உத்தமஸ்தானத்திலேயாயினும் இருந்து இவாளிருந்த ராசியாதிபதியும் பால்லியாராயிருந்தால் இந்த ஜாதகன் தேகமிருக்களவும் ஐஸ்வரியமும் அர்த்தலாபமுண்டாய் சுகியாகயிருப்பான்.

இவர்கள் உச்சராயிருந்தால் மகா ஐஸ்வரியமும் அர்த்தலாபமும் உண்டாம்.

தேகாதிபதியும், லாபாதிபதியும் நட்பாராயிருந்தாலும் லாபஸ்தானத்திலிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு உத்தமபலன் கொடுப்பார்.

மேற்கூறிய இருவரும் உச்சத்துடன் கூடியிருக்கினும், அல்லது பார்வையுண்டாயினும் இந்த ஜாதகனுக்குப் பூரணபலனுண்டாம்.

இந்த தேகாதிபதியும், இலாபாதிபதியும் இவர்கள் இருவருடனேயும் எங்கெந்த அதிபதி நட்பாச்சியுச்சமாகக்கூடியிருந்தார்களோ அவரவர்கள் லாபத்திலிருந்தால் எல்லாக்கிரகங்களும் அவர்களுடைய திசையில் இந்த ஜாதகனுக்குப் பலன்கொடுப்பார்.

அந்தரதிசையிலும் பிரபலனுகில் தன்னுடைய அந்தரதிசையில் யுகங்களால் கடந்திருக்கவல்லவனுய்ப் பாக்கிய தேகாதிபதியாயிருப்ப்பான்.

இலாபஸ்தானகிரகங்கள் மூடநீசராய் நின்ருல் உத்தமஸ்தானத்திலிருந்தால் மத்திபபலனைக் கொடுப்பார்.

இலாபஸ்தானகிரகங்கள் பலயீனராய் 6-8-12-ஆம் மிடத்திலிருந்தால் நிஷ்பலன் கொடுப்பார்.

இலாபாதிபதிபகை நீசட்சீணராய் சத்துருஸ்தானத்தில் நிற்க இந்த ஜாதகன் தேடினதனமெல்லாம் சத்துருக்களுக்கே கொடுப்பார்.

இலாபாதிபன் வியஸ்தானத்தில் சேரினும் சத்துருக்களுக்கே தனமெல்லாங் கொடுப்பார்.

இலாபஸ்தானத்தில் கிரகங்கள் சூரியன் சந்திரன் நட்பாராய் தனலாபகேந்திர திரிகோணங்களில் தேறிநிற்கில் வெகு நன்மையுண்டாம்.

பதிஞேராம்பாவம்

முற்றிற்று.

<table>
<tr><td>மீன லக்கினம்
கேந்திரம் பெ
ண் ராசி உபய
ராசி பரக்கும்
ராசி உடல் உ
தைய உரா மூ</td><td>2-ம் மிடம்
மேஷம் கேந்தி
ரம் வாக்கு தன
ம் குடும்பம்</td><td>3-ம் மிடம்
ரிஷபம்சகோத
ரம் வெற்றி
கேள்வி காது
அடுமை</td><td>4-ம் மிடம்
மிதுனம் கேந்
திரம் தாயார்
கல்வி பூமி பந்
து சுகம் வியா
பாரம்</td></tr>
<tr><td>12-ம் மிடம்
கும்பம் விரைய
ம் சயனம் மோ
க்ஷம் அனித்யம்
நோய்</td><td colspan="2" rowspan="2">12-வது
மீன லக்கினமானால்
இந்தச் சக்கரத்தைக்
கொண்டு இராசி விவ
ரம் அறிந்துக்கொள்
ளவும்</td><td>5-ம் மிடம்
கடகம் புதல்
வர் மாதுலன்
பிதா ஞானம்
புண்ணியம்</td></tr>
<tr><td>11-ம் மிடம்
மகரம் சிரேஷ்
டம்பிராதுர் இ
லாபம் இஷ்டம்</td><td>6-ம் மிடம்
சிங்கம் ரோ
கம் சத்துரு
சோரம் சிறை
வழக்கு</td></tr>
<tr><td>10-ம் மிடம்
தனுசு கேந்தி
ரம் கருமம் சீவ
னம் கீர்த்தி
ஆதாரம்</td><td>9-ம் மிடம்
விருச்சிகம் தரு
மம் பிதா பிரபு
த்துவம் பாக்கி
யம் குரு</td><td>8-ம் மிடம்
துலாம் ஆயுள்
தீர்க்க வியாதி
அபமிருத்து</td><td>7-ம் மிடம்
கன்னி கேந்தி
ரம் களத்திரம்
காமம் மாரகம்
நித்திரை</td></tr>
</table>

பனிரெண்டாம்பாவம்

தனபலன்

புயேசன் பாலருடனேகூட அல்லது வியஸ்தானத்தில் பாவிகள் நிற்க பாவக்கிரகம்பார்க்கப் பிறந்த ஜாதகனுக்கு பாவமூலமாயிருந்து தனம் வரும்.

சனி குளிகன் இராகு வெப்பத்திலிருக்க வியஸ்தானுதிபதி குருராங்கிசமேற பாவிகள் பார்க்க பாவமூலத்தினுலே தனட்சயமுண்டாம்.

வியத்தானுதிபதி சுபக்கிரகமாக கேந்திர திரிகோணத்திலிருக்க சுபக்கிரகம்பார்க்க கர்ணபூஷணங் கிடனுயுண்டு பாவக்கிரகங்களிருக்க மேற்சொல்லிய பலனில்லை.

இலாபாதிபதியும் வியயாதிபதியும் 3-ம் மிடத்தில் நிற்க சுபக்கிரகம் பூர்ணமாய்ப் பார்க்கக் கர்ணபூஷண முண்டாம்.

வியயாதிபதியும் லாபாதிபதியுங் கூடியிருக்கச் சுபக்கிரகங்கள் பார்க்கத் தீர்க்காயுளும் தனவிர்த்தியு முண்டாம்.

வியயாதிபதியை பாவிகள் பார்க்கப் பாவிகளுடனேகூட தன நாசமுண்டாம்.

இலாபாதிபதியுடனே சுபக்கிரகங்கள் கூடியிருக்கத் தனலாபம் உண்டாம்.

வியேசன் செவ்வாயுடனேகூட இந்த ஜாதகனுக்குச் சகோதரத் தால் தனம் வின்னமாகும்.

புத்திராதிபதியுடனே விரையாதிபதிகூட பலயீனனாக விருக்கக் குரூராங்கிசமேற இந்த ஜாதகனுக்குப் புத்திராள்மூலத்தில் தனச் சேதம்வரும்.

பிதுர்ஸ்தானாதிபதி வியயாதிபதியுடனே கூட சத்துருஸ்தானாதி பதிபார்க்க பிதுர்மூலத்தால் இந்தஜாதகனுக்குத் தனம்சேதம் வரும்.

தனுதிபதி வியயாதிபதியுடனேகூட பாவர்கள் பார்க்க தாயா ரின்மூலமாய்த் தனச்சேதம் வரும்.

ஆயுர்ஸ்தானாதிபதியுடனே வியயாதிபதிகூட குரூராங்கிசமேற இந்த ஜாதகனுக்கு அங்கயீனம் வரும்.

2-ஆம் மிடத்தில் வெகுபாவிகளிருக்க வியயாதிபதி பாவியாக சனி குளிகனுடனேகூட அங்கயீனம்வரும்.

வியேசன் பாவராங்கிசமேற அல்லது குரூராங்கிசமேறப் பாவக் கிரகங்கள் பார்க்கப் பிறந்தஜாதகன் நரகத்தில் விழுவான்.

வியயாதிபதி சஷ்டியங்கிசமேற குரூரனுடனேகூட அல்லது பார்க்க நரகமுண்டாம். சந்திரன் சூரியன் பலவானுக வியயாதிபதி பலவானுகக் கேந்திரத்தி லிருக்க ஜாதகமானவன் தெய்வீகமான மரணம் அடைவன் சுவர்க்கங் கிட்டும்.

கர்மாதிபதி பலத்திருக்க வியயாதிபதி சுபக்கிரகமாக யிருந்து பார்க்க பீடத்தில் ஒருகிரகம் உச்சனுகயிருக்க ஜாதகமானவனுக்கு சொர்க்கம் உண்டாம்.

சுபக்கிரகம் ஸ்வட்சேத்திர உச்சமாக வியத்திலிருக்க வியயாதி பதி சௌமியனுகக் கேந்திரத்திலிருக்கத் தெய்வலோகாங்கிசமெடுக்க ஜாதகமானவனுக்கு சொர்க்கங் கிடைக்கும்.

கர்மாதிபதியுடனே வியயாதிபதிகூடஅல்லது பார்க்க சுபக்கிர கம் திருஷ்டியுண்டாக ஜாதகமானவனுக்குச் சொற்கமுண்டாம்.

நேத்திராதிபதி சுபனுடனேகூட சுபாங்கிசமேற வியத்தில் சுபாளிருக்க ஜாதகமானவனுக்கு நல்லநேத்திர முண்டாம். 6-ஆம்

மிடமுடையவன் வியத்திலிருக்க வியயாதிபதியும் அப்படியிருக்க தனச்சேதம் வரும்.

இலக்கினுதிபதி கேந்திரத்திலிருக்க சந்திரன் ஆறில் நிற்க கிரகங்கள்கூட வியத்தில் ஒருகிரகம் உச்சனுகயிருக்க சுவக்ஷேத்திரமாகிப் பிறந்த ஜாதகன் பூபதியாக இருப்பான்.

வியயாதிபதி மூலத்திரிகோண கேந்திரத்தி லிருக்க அவனை மித்திராள்பார்க்க 12-ல் ஒருகிரகம் உச்சனுகயிருக்க சுவட்சேத்திரனுகப்பிறந்த ஜாதகன் பூபதியாகயிருப்பான்.

கர்மாதிபதியுடனே வியயாதிபதிகூட பார்க்க மித்துருவாகயிருக்க சத்துருகிரக மில்லாதிருக்க ஜாதகமானவன் இராஜவாக ஆவான்.

சுகாதிபதியும் கர்மாதிபதியும் கூடியிருக்க வியயாதிபதி சுபக்கிரகமாக கேந்திர திரிகோணத்திலிருந்துபார்க்க ஜாதகமானவன் இராஜாவாவான்.

சந்திரன் கேந்திரத்திலிருக்க 4-ஆம் மிடம் வியாழன் பார்க்க ஜாதகமானவன் கீர்த்திமானுய் சுகசீவியாய் புத்திரமித்திர களத்திராதியுடன் விருத்திகரம்பெற்று வாழ்வான்.

பனிரெண்டாம் பாவம்

முற்றிற்று.

உ

கடவுள் துணை

வியாதியறிதல்

இலக்கினதிபதி புதன் - அங்காரகன்-இவர்கள் மிதுனம்-கன்னி இந்த இராசியில் நிற்க புதன்பார்க்கப் பிறந்த ஜாதகனுக்கு ஆசன ரோகமுண்டாம். சந்திரனுக்கு 3-ஆம் மிடத்ததிபனோடு சூரியன்கூட நோஞ்சை வியாதியுள்டையவனும் பலர்முலைப்பாலையும் உண்பான்.

3-ஆம் மிடத்தோனையும் 10-ஆம் மிடத்தோனையும் சந்திரன் கூட அல்லது பார்க்க ஜலராசியிலிருக்க 10-ஆம் மாதிபதி திசைவருங் காலம் திரராசியிலிருக்க நீரழிவுரோகம் வரும்.

உத்தமகிரகங்கள் ஜென்மம் 8-ஆம் மிடம் இருக்க பிறந்த ஜாதக னுக்கு ஆயுதத்தால் நோயுண்டாம்.

இலக்கினதிபதி 8-ஆம் மதிபதி இவர்களோடு புதன்-அங்கார கன் இவர்கள் கூடியிருக்கப் பிறந்த ஜாதகனுக்கு நீர்தாரைத்துவாரம் இரண்டாகும்.

இவர்களுடன் சவுரிகூடில் பிறந்த ஜாதகனுக்கு சலத்துவாரம் கல்லடைப்புரோகம் வரும்.

வியாழனும்-இலக்கினதிபதியும்-கருங்கோள் இவர்கள் மூவரும் 3-ஆம் மிடத்ததிபனோடு சேரினும் அல்லது 3-ஆம் மிடத்திலிருக்கி னும் பிறந்த ஜாதகனுக்கு அண்டவாதரோகம்முண்டாம்.

ஜென்மலக்கினத்தையும்-கடகத்தையும் - சனிபார்க்கில் சுரநோய் கண்டு அதினாலேயே மரணமடைவான்.

6-8-ஆம் மிடத்ததிபர்கள் நீசத்திலிருக்க பாவக்கிரகங்கள் ஜென் மத்திலிருக்க ஜென்மாதிபன் அவருடன்கூட குளிகனோடிருக்க சந் திரன்-சனிகூட 6-12-ஆம் மிடத்தில் நிற்கப் பிறந்தஜாதகன் வியாதி யினால் மரணமடைவான்.

8-ஆம் மிடத்ததிபன் ஜென்மத்திலிருக்க, 2-ஆம் மிடத்தோன் 8-ல் நிற்க ஜென்மாதிபதியை சனிகூட சந்திரன் பாலருடனேகூட பிறந்த ஜாதகனுக்கு உருவில்லாதரோகம் உண்டாம். லக்கினத்திலும் 8-ஆம் மிடத்திலும் சூரியனுடன் ஜென்மாதிபதியுரில் பித்தரோகப் பிணியாம்.

குளிகன் கருங்கோள் ஜென்மாதிபதி இவர்கள் மூவரும் கூடினும் அல்லது ஜென்மத்திலிருக்கினும் குளிகன் திரிகோணத்திலாதல் 8-ஆம் மிடத்திலாதலிருக்கினும் குளிகனும் அங்காரகனும் 4-ஆம்

மிடத்தோனுடன் கூடியிருக்கினும் இந்த ஜாதகனுக்கு பீஜத்தில் கோழிமுட்டையைப்போல் திரண்டு நாளுக்குநாள் பெருகும்.

ஜென்மாதிபனுடன் பாவக்கோள்களும், அங்காரகனுடன் கூடியிருக்க அல்லது பார்க்கப் பிறந்த ஜாதகனுக்குக் கல்லினால் அடிபட்டு அதினால் விரணவாதமுண்டாம்.

இலக்கினாதிபன்-இராகு-மதி-செவ்வாய்-புதன்-இந்த ஐந்து கிரகங்களும் இலக்கினத்திலாதல் 6-8-லாதல் இருக்க பார்க்கப் பிறந்தானுக்கு வெண்குஷ்டமுண்டாம் சூரியன் ஜென்மாதிபதி அங்காரகன்-புதன் இவர்கள் ஜென்மம் 6-8-ல் தேறிநிற்க செங்குஷ்டமுண்டாம்.

ஜென்மாதிபதியும் சனி-இராகு-இவர்கள் 6-8-ல் யிருக்க பிறந்த ஜாதகனுக்குக் காலில் கருங்குஷ்டம் வரும்.

வியாதிதோன்றுமிடம் கூறுகின்றது

கிரகங்களைக்கொண்டு வியாதியறியவேண்டில் சூரியன்-சனி-சந்திரன்-முகம். அங்காரகன்-கண்டம். புதன்-இடதுகரம். வியாழன்-வலதுகரம். சுக்கிரன்-மார்பு. சனி-முழங்கால். பாம்பு-கால் இவ்விதமாக ஜனனகாலத்தில் நிற்கும் கிரகங்களின் நிலையைக்கண்டு சொல்ல வேண்டும்.

சூரியன்-புதன் இவர்கள் பாவருடன்கூடி 2-6-8-ல் நிற்க இவர்களையும் இலக்கினத்தையும், பாவகிரகங்கள் நோக்கப் பிறந்த ஜாதகனுக்குச் க்ஷயரோகமுண்டாம்.

அமரபட்சத்து சந்திரன் சலராசியில் பாவருடன்கூடி 6-8-ஜென்மத்தில் நிற்கப் பிறந்த ஜாதகனுக்குச் சயரோகமுண்டாம்.

அங்காரகன் ஜென்மத்திலிருக்க புதன்-பாவருடன்கூடி 2-8-ல் இருக்க சுரரோகமுண்டாம். ஜென்மாதிபதி சுக்கிரனுடன்கூடி 8-ஆம் மிடத்திலிருக்க ஜென்மாதி நீசுசத்துருவுடன் ஸ்தானத்திலிருக்கப் பிறந்த ஜாதகனுக்குப் பிரமியநோய் வரும்.

இலக்கினத்தில் கருங்கோள் நிற்க 3-ஆம் மிடத்தில் சனி நிற்கப் பிறந்த ஜாதகனுக்கு அண்டரோகமுண்டாம். ஜென்மத்தில் சூரியன் சனியும் கூடிநிற்க குன்மவலியாம் பார்க்க பெருமூச்சுகாணும். ஜென் மாதிபனும் செவ்வாயுங்கூட தீயோர்கள் பார்க்க தலையில் கல்லடிபடும். அதனால் துன்பமுண்டாம்.

இலக்கினத்தில் சனி-ராகு இவர்கள் நிற்கில் பிறந்தஜாதகன் பேய்பயத்தினால் சஞ்சலமுற்றிடுவனும். சனி - குஜன் - ஜென்மத்தி லிருக்க அவர்களை தீயோர்பார்க்க அடிவயிற்றில் வலியுண்டாம். ஜென் மத்தில் சனியிருக்க சூரியன்-ராகுவுங் கூடிப்பார்க்க. ஆயுதத்தினால் வயிற்றில் காயமுண்டாகும்.

கருநாகனும் ஜென்மாதிபதியும் 6-ஆம் மதிபதியும் இவர்கள் மூவருங் கூடிநிற்க, 2-ஆம் மதிபதிதிசையில் அவன் பொசிப்பில் தந்த ரோகமுண்டாம். புதன்கூடில் ரோகசரீரனுமாவான் இவர்களை நல்ல கிரகங்கள் பார்க்கில் மேற்கூறிய ரோகங்களுக்குப் பரிகாரமாம்.

சூரியனும் சனியுங்கூடி அஷ்டமத்திலிருக்கப் பிறந்த ஜாதகன் மகோதரநோயால் பரதவிப்பன். ஜென்மத்திலும் 4-ஆம் மிடத்திலும் சூரியனுதல் அங்காரகனுதல் நிற்க, 10-ஆம் மிடத்தில் சவுரிநிற்க பூர்வ ராசியில் தேய்பிறைச் சந்திரனிருக்க பாம்பு திரிகோணத்திலிருக்க சூலைநோயால் பாதையுண்டாம்.

நாய்கடி கூறுகின்றது

இரண்டாமிடத்தில் சனியுடன் கூடிநிற்க பாவர்கள் பார்த்திடப் பிறந்த ஜாதகன் நாய்களைக்கண்டு பயப்படுவான். 2-ஆம் மிடத்தில் நீசனும் 2-ஆம் மிடத்ததிபனுங்கூட அவர்களை பாவர்நேசர நோக்க பிறந்தோனை நாய்கடிக்கும்.

பாம்புகடி கூறுகின்றது

எட்டாமிடத்தில் இராகுவிருக்க 2-ஆம் மிடத்தில் துஷ்டகிரகங்கள்கூட நோக்கப் பிறந்த ஜாதகனுக்கு விஷந்தீண்டுமென வறிக. ஜென்மாதிபதியும் ஆருமிடத்தோனும் கருங்கோளும் இவர்கள் மூவரும் ஒரு வீட்டிலிருக்கப் பாம்பினுல் நஷ்டமடைவான்.

சந்திரனும் - கரும்பாம்புங்கூடி 7-ஆம் மிடத்திலும் 8-ம் மிடத்திலும் மேவிலும் பிறந்த ஜாதகனுக்கு 8-ல் விஷத்தினுல் கண்டம்.

ஆயுதவிரணங் கூறுகின்றது

சந்திரன் 7-ஆம் மிடத்திலிருக்க 6-ஆம் மிடத்தோனும் வியஸ்தானத்திலிருக்க பாவக்கிரகங்கள் நோக்கப் பிறந்த ஜாதகனுக்குக் காயம்பட்டு ஒழுக்க துண்டாகும்.

இலக்கினுதிபதியேனும், அட்டமாதிபதியேனும் கூற்றன் ஸ்தானத்தில் குளிகனைக்கூடி 12-3-ல் நிற்கில் பிறந்த ஜாதகனுக்கு கால் இருகூறுண்டாகும்.

எட்டாமிடத்ததிபதியும் செவ்வாயுங்கூடி 6-12-ல் நிற்கப் பிறந்த ஜாதகனுக்கு துஷ்டர்களின் கைசூரியினுல் வெட்டுப்படுவது திண்ணம்.

ஜென்மத்தில் சனிபாம்புநிற்க கன்னியில் சுக்கிரன்நிற்கப் பிறந்த ஜாதகனுக்கு கைகால் அறுப்புண்டாம்.

சூரியன்-சந்திரன்-பாம்பு இவர்கள் மூவரும் ஒருவீட்டிலிருக்கப் பிறந்த ஜாதகனுக்கு அவன் ஆவி விண்ணில் பறக்கும்படியாக சென்னி அறுப்புண்டு பூமியில் விழும்.

சூரியன் சென்மத்திலிருக்க அங்காரகன் அஷ்டமத்திலிருக்க அமரபட்சத்துச் சந்திரனும் கரும்பாம்பும் ஒருகாலிலுறப் பிறந்த ஜாதகனுடல் இருபிளவாகும், ஜென்மத்தில் சனியிருக்க சந்திரன்-சூரியன்-பாம்பு-இவர்கள் கூடில் சரீரம்பிளந்து யிருகூறாகும்.

இலக்கினாதிபதியும் 8-ஆம் மாதிபதியும் மித்துருவுங் கூடியிருக்கப் பிறந்தவன் மேககர்ச்சனையினால் பூமியில் வீழ்ந்துமாள்வன். 6-12-ல் சூரியனிருக்கக்கை யறுபடும். அங்காரகன்-அரசன் 7-8-ல் நிற்க 10-ஆம் மிடத்தில் சேய்-புதன்-சனி-இராகு-இவர்களிருக்க கால் துணிவுபடும்.

சீவன்பலன் கூறுகின்றது

விருத்தம்

அம்புவியோர்செய்தொழிலால்சீவனமுண்டாகும்
அடையரிலக்கணஞ்சோமனுதவன்மும்மணைக்கும்
தம்மொடுதாம்விட்டாங்கிசையிலிருந்தோர்
தம்மிலதிகப்பலமாய்த்தரித்தவாங்கிசைதான்
வெம்புரவித்தேரோணங்கிசத்தனேயான்பலமே
மேவில்பிலவெக்கோலும்விற்றுணவேகொள்வன்
செம்பொனவிற்பதுராசிப்பலனூருக்கோரைத்
திக்குபலனுண்டாயிற்செய்வன்வயித்தியங்கள். 1

களங்கமிலாவெண்டிங்கிசமேயாகிக்
கமழுமிலக்கினத்திரைக்காணமுதலாகில்
விளங்கியநற்பயிர்த்தொழிலேபுரிந்துணவுகொள்வான்
மேவியரெண்டாந்திரையக்காணமேயாயின்
விளங்கெழுசிந்துவிற்சம்பான்சிப்பமேசோங்கெட்டி
வாழ்வினமூன்றாந்திரையக்காணமுமேயாயின்
இளம்பிடியோதிமந்தனையும்பருக்கடைப்பவார்
இணக்கத்தாற்சீவனமுண்டென்பரினியோரே. 2

இனியசெவ்வாயங்கிசத்திலக்கினமேபலமாய்
இரும்புவெள்ளிசெம்பொனும்விற்றிருப்பன்வாக்கிசைத்தான்
நனியபலமாயிடிதக்கினியிலுறுதொழிலே
நடந்திடுவன்றிரிங்கிசாங்கிசம்பவமேமாராயின்
தனியுருவாயுதம்பிடித்துச்சேவிப்பனேமாம்
தானமதுபலனுயிற்றக்கதொழில்செயவன
கன்மொழியாயிரவிமுதன்தனிமட்டுமெண்ணிக்
கண்டதுசத்தாங்கிசமேயாம்பலன்கண்டீரே. 3

கண்டபுதனங்கிசத்தின்பலன்வாங்கிசையே
காவியங்கள்பண்ணுவாதங்கிசமேயாயின்

மின்னிற்பசாஸ்திரமேயறிந்துணவுகொள்வன்
மேவுந்திரியத்தாங்கிசமேயெழுந்தொழிலான்
கொண்டவறுபதிலோரையங்கிசமேற்கணிதம்
குறித்திடுவன்புதனிருந்தசிதனைப்பிரிந்து
மண்டியறுபதுபங்குசெய்யிலொன்றைப்பங்கில்
வந்துபுதனிருக்கிலெனவேவழுத்தல்வேண்டும்.

வேண்டுங்குருவங்கிசத்தன்முதற்றிரைகாணுந்தாம்
விப்பரார்பலனிரண்டாந்திரையைக்காணந்தான்
பூண்டதேவதைகளினற்பலன்மூன்றுங்காணம்
புண்ணியத்[illegible]பயனுகுஞ்சுக்கிரனுங்கிசைக்குத்
தாண்டுசுரபி[illegible]மபெருமூன்றுங்காணம்
தக்கவெள்[illegible]பனடுத்திலைகாணந்தான்
மீண்டுமுதற்றிரையைகாணமதூவேபாலன்
மிளிர்நவரத்தினமேவியாபாரஞ்செய்வன்.

செய்யசனியங்கிசத்திரிபலன்சிறுவன்றனும்
செப்பியமித்துராங்கிசமேறதாயாசத்தொழிலாம்
வெய்யப்பாவக்கிரகம்லக்கினத்தைப்பார்க்கில்
மெத்தவேசுமைசுமந்துமெய்யுணவுகொள்வன்
ஐயவிலக்கனந்தன்னைநீசருங்கண்டக்கால்
ஆகாதகாரியங்களவத்தொழிலேசெய்வன்
துய்யசனியங்கிசத்திற்சுபக்கிரகங்கூடில்
துலங்கிடவேசிற்பத்தொழில்செய்துவாழ்வன்.

ஆதவன்சசிலக்கினமிவைமூன்றுக்
கதிபரிலதிகமாய்பலத்தோன்
அடைந்தவங்கிசத்தா[illegible]பரிதிசெங்கிரக
யம்பொன்[illegible]லக்கலும்விற்று
நீதியாம்வைத்தியங்களுஞ்செய்வன்
நீள்விரையங்கிசமாயின்
நீரினில்சோங்குடத்தியேயுய்வன்
நிமலமகனங்கிசமாயின்.

ஓதுமச்சினியர்லிரும்புபொன்வெள்ளி
[illegible]ருக்கவாயுதவாளினலும்
உணவுகொண்டிடுவன்புந்தியாங்கிசமே
லுரைத்திடுங்கணிதமுங்கணக்கு
தீதறுசிற்பத்தொழில்கள்காவியத்தாற்
சீவனம்வேந்தனங்கிசைக்கு
தெய்வமாமறையோர்பெரியவனலுஞ்
சீவனமிறதினிலிருப்பன்.

கலிவிருத்தம்

இருந்தசுக்கிரனங்கிசமேறிலோ
தெரிந்தரத்தினம்வெள்ளியால்சீவனம்
பொரிந்தசின்னங்கிசம்பும்வீனமாய்
வரிந்திரிந்தொழில்செய்யவளமிலான். 9

கேந்திரபலன் கூறுகின்றது

திக்குப்பலமாவதுசேய்கதிர்
தொக்குருபுத்திலக்கின்த்துற்றால்
துக்கச்சனியேழிற்சூழ்ந்திடின்
லக்கச்சிஞனுக்கினில்வலியெனச்செ 10

மாரகதிசை கூறுகின்றது

மாரகத்திற்றியவருநான்காந்திசைசனியேவந்துற்றாலும்
பார்தனக்குச்சுதன்செவ்வாயைந்தாகுந்திசைகாரேபரிந்துற்றாலும்
பேருதித்தலாறுகுந்திசையரசனானுலும்பின்புராகு
சீருதித்தவேழாகுந்திசையானாலும்மரணந்திண்ணந்தானே. 11

கார்த்திகைமுதலொன்பானுள்கடும்பகல்திங்கள்செவ்வாய்
கார்த்தவிராகுபொன்சுன்கவின்புந்திக்கேதுவெள்ளி
சேர்த்தவர்க்குமுறையாகச்செப்பியதிசைகளாகும்
ஆர்த்தமற்றிரைகாண்மீதுமில்லன்றேகொள்வர்பலரே. 12

சூரியன்றிசைகண்டாறுதிங்கட்குப்பத்துசெவ்வாய்க்
காருமோரேழ்ராகுக்கரைபதினெட்டுமொன்றுக்
கேருகிரெட்டுமந்தற்கியம்புபத்தொன்பதாகும்
சீரில்புந்திக்கேழ்பானேழ்சிகிக்கேழ்வெள்ளிக்கைநான்கே. 13

வாழி விருத்தம்

ங்குசீ ருலகின் மக்கள் தழைத்தினி தோங்கி வாழி
துங்கமா மனுபவ மான தூயநற் சோதிடம் வாழி
மங்களமொ டாய்ந்தா ரெவரும் மன்னியென் றென்றும் வாழி
பொங்குபூ மகள்வி லாசம் பொலிவுடன் வாழி வாழி.

அனுபோக ஜாதகரகசியம்

முற்றிற்று.

பொருளடக்க அட்டவணை

பொருள்	பக்கம்
ஜோதிஷம் இன்னதெனல்	1
நட்பாட்சி நீசம் பகை	5
சூரியன்	5
சந்திரன்	5
அங்காரகன்	5
புதன்	5
குரு	6
சுக்கிரன்	6
சனி	6
இராகு	6
கேது	6
செவ்வாயின்பலன்	7
சுக்கிரன் பலன்	7
புதன் பலன்	7
குரு பலன்	8
சனி பலன்	8
சூரியன் பலன்	8
சந்திரன் பலன்	8
சாரநிலை அறியும்	9
சாரநிலைக்கு முன்பார்வை	9
வீட்டின்பார்வை	10
கிரக சுபாசுபம்	10
கிரகநட்பு	11
கிரகபகை	11
கிரகதேவதை	11
தசைவருடமறிய	12
திக்கறிய	12
கிரகங்களின் தொழில்	12
மூலதிரிகோணசக்கரம்	13
இராசிநாழிசக்கரம்	13
ஜாதகபலன்	14
நீசபங்க ராஜயோகம்	24
சகடை	25
பாலாரிஷ்டம்	26

பொருள்	பக்கம்
பாலாரிஷ்டபங்கம்	27
யோகம்	27
கோசாரப்பலன்	28
சூரியன்	28
சந்திரன்	28
அங்காரகன்	29
புதன்	29
வியாழன்	29
சுக்கிரன்	29
சனி	29
இராகு கேது	30
மேற்படி கிரகங்கள் கெடுதி யிடம்	30
சூரியன்	30
சந்திரன்	30
அங்காரகன்	31
புதன்	31
வியாழன்	31
சுக்கிரன்	32
சனி	32
இராகு கேது	32
காலசந்திர திசை வருஷம்	33
இடவோட்டுநாள்	33
வலவோட்டுநாள்	33
காலசக்கிரபுத்தி	33
காலசக்கிரகதிகள்	35
அஷ்டவர்க்கம்	35
இலக்கின பாவம்	37
இரண்டாம்பாவம் நேத்திர பலன்	43
வாக்கு ஸ்தானபலன்	45
வித்யாபலன்	45
தனபலன்	46
மூன்றும்பாவம் சகோதரபலன்	50

பொருள்	பக்கம்
சகோதர விருத்தி	52
சகோதரபாவம் சகோதர நஷ்டம்	53
பெண் சகோதரம்	53
சகோதரமின்மை சகோதர மடிபு	54
சகோதர சங்கை	54
வெகு சகோதரம்	54
பெண் சகோதரமின்மை	55
நான்காம்பாவம் வாகனபலன்	5[illegible]
மாதுர் பலன்	[illegible]
க்ஷேத்திர பலன்	60
பாவிஷயம்	61
ஐந்தாம்பாவம் பிதாபலன்	63
மலடன்	64
ஆரும்பாவம் வழக்கின்பலன்	73
ஏழாம்பாவம் களத்திரபலன்	75
பதிவிரதை	76
ஏகபத்தினி	77
தீர்க்க களத்திரம்	77
களத்திர யோகம்	77
செவ்வாய்தோஷம்	78
எட்டாம்பாவம் ஆயுள்பலன்	83
தீர்க்கவியாதி அபமிருத்து	85
நின்னயமான வாழ்வு	86
பர்வதாரோகனம் சிரோவியா	86
ப[illegible]தி வஸ்திர கிரைய விக்கிரையங்களால் ஜீவனம்	87
வனசஞ்சாரம்	87
பரதேசத்தில் மரணம்	87
நிவாசஸ்தலம்	87
ஆயுசு	87
மரணகாலம்	88
மரணதிக்கு	88
பூரண ஆயுசு	88
ஒன்பதாம்பாவம் பாக்கிய பலன்	89
பிதுர்பா[illegible]	91
குருபலன்	91
தருமம்	92
அகங்கெடும் நஷ்டம்	92
நிர்ப்பாக்கியன் இரந்துண்பானெனில்	92
அச்சம் நோய் சோரதாரன் கோள்சொல்லுதல்	92
பத்தாம்பாவம் கர்மபலன்	93
பதிஞோராம்பாவம் தனலாபம்	96
வேறு ஆயுசுபலன்	97
பனிரெண்டாம்பாவம் தன பலன்	101
வியாதி யறியும்படி	104
வியாதி தோனறுமிடம்	105
நாய்கடி	106
பாம்புகடி	106
ஆயுதவிரணம்	106
ஜீவன் பலன்	107
கேந்திரபலன்	109
மாரகதிசை	109

பொருளட்க்க அட்டவணை

முற்றிற்று.

பூமகள்விலாசப் பிரஸ், சென்னை:—1940.

ஜாதகசி[illegible] என்னு[illegible]வுனுபோக

சோதிட பிரம்ம ரகசியம்

இந்த அனுபோக சோதிட பிரம்ம ரகஸ்யத்தில் அயனங்கள், ருதுக்கள், திதிகள், நட்சத்திரபாதம், வாரங்கள், யோகங்கள், கரணங்கள், வேளைகள், மாதங்கள் இவைகளின் பலாபலன் மிகத் தெளிவாய் அச்சிட்டிருப்பதால் இவைகளின் பலனைகளெல்லாம் யாதாமொரு காரியம் துவக்கும்போது நன்மை தீமை யறிந்[illegible]பதுந்தவிர, குழந்தை ஜனனமாகும்போது அதுகளின் [illegible]ப்பிரகாரம் அவரவர்கள் அமைப்பையும் அறிய அனுகூ[illegible]மிருக்கு[illegible] துவாதசபாவபலனும், கிரகதுடர்ச்சி, கிரகங்களின் நட்பு, [illegible]கை, சமம், கிரகதத்துவங்களும், கோட்சாரம், ஆரூடம் பார்க்கும்விதமும், கோட்சார ஆரூடபலன்கள், நவாங்கிசபலாபலன் முதல்பாகமாகிய பிள்ளையின்குறி, பிள்ளை பிறக்குமிடம், அரிட்டம், அமிசை, மாலை, கொடி, மருவு, ஆயுள், தொழில் முதலியவைகளும், 2-ம் பாவகமாகிய நேத்திரம், ஊமை, வித்தை, தனவான், கர்மம், பொருளின் தொகை, தின்னும் சுவை முதலியவைகளும், 3-ம் பாவகமாகிய சகோதரர், மூத்தவர், இளையவர், அங்கவீனம், ஆபரணங்கள் முதலியவைகளும், 4-ம் பாவகமாகிய மாதுருபலன், வாகனங்கள், தாய்க்கரிஷ்டம், வீடுகள், சோரம் முதலியவைகளும், 5-ம் பாவகமாகிய புத்திரர், தத்துபுத்திரர் முதலியவைகளும், 6-ம் பாவகமாகிய வாழ்க்கை, செ[illegible]ம், 7-ம் பாவகமாகிய மனைவியின் ஜாதி, கலியாணம், மனைவிவரும் திசையு[illegible], 8-ம் பாவகமாகிய தீர்க்காயுசு, அற்பாயுசு, மு[illegible]வயது, மாரகதிசை, மாரககரணமும், இடத்தையும் நடத்தையும், 9-ம் பாவகமாகிய பிதாவுக்கீனம், நலம், அரிட்டம், பாக்கியமும், 10-ம் பாவகமாகிய துர்க்காரியமும், 11-ம் பாவகமாகிய லாபமும், 12-ம் பாவகமாகிய சுகவாழ்வு முதலியவைகளும், பெண்[illegible] ஜாதகமும் சேர்த்து[illegible] அச்சிட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1

எமது விலாசம்:—

அ. இரங்கசா[illegible]யார் வல்லி

24, த[illegible]ப்பிள்ளை வீதி, சென்னை.

புஸ்தகவிளம்பரம்.

☞ இதேமாதிரி பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட புஸ்தகங்கள்:—

ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் படங்களுடன்		5	0	0
மேற்படி திக்கு 2-வால்யம்	ஷை	7	0	0
மேற்படி கிளேஸ்	ஷை	8	0	0
இராமர் அஸ்வமேதயாகம்	ஷை	2	0	0
ஆதிபர்வம்	ஷை	2	0	0
விராடபர்வம்	ஷை	2	0	0
விக்கிரமாதித்தன் கதை திக்கு.	ஷை	2	0	0
மேற்படி தின்	ஷை	1	4	0
தேசிங்குராஜன் கதை	ஷை	0	6	0
நளச்சக்கிரவர்த்தி கதை	ஷை	0	10	0
மதனகாமராஜன் கதை	ஷை	0	12	0
அல்லியரசாணிமாலை	ஷை	0	8	0
அபிமன்னன் சுந்தரிமாலை	ஷை	0	12	0
கிருஷ்ணன் தூது	ஷை	0	8	0
மதுரைவீரன் கதை	ஷை	0	8	0
ஏணியேற்றம்	ஷை	0	6	0
தருமர் அஸ்வமேதயாகம்	ஷை	1	0	0
கோவிலன் கதை	ஷை	0	8	0
சித்திராபுத்திரன் கதை	ஷை	0	8	0
துரோபதை குறம்	ஷை	0	6	0
பஞ்சபாண்டவர் வனவாசம்	ஷை	1	0	0
கருடபுராண வசனம்	ஷை	0	8	0
மயிலிராவணன் கதை	ஷை	0	8	0
ஆரவல்லி கதை	ஷை	0	6	0
அருணகிரியந்தாதி மூலமும் உரையும்		0	4	0
கதிரேசன் ஆனந்தக்களிப்பு		0	6	0
அறுபத்துநான்கு படங்களடங்கிய சிவபராக்கிரமம்		2	0	0
பதினெண்சித்தர் ஞானக்கோர்வை		1	4	0
சம்பூர்ண டிராமா அரிச்சந்திரா		0	8	0

அமரம்பேடு. இரங்கசாமி முதலியார் & ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளைத் தெரு, சென்னை.